ஜூலை 18 - ஜூலை 24, 2010 July 18 - July 24, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்




## இலங்கைத் தீவின் குற்றவாளிகள்

## சம்பியன கிண்ணத்தைக் கைப்பற்றியது ஸ்பெயின்!



## என்ன செய்யப் போகிறார்கள்?



# என்ன செய்யப் போகிறார்கள்?

## மஹிந்தர் மன்மோகன்



கடந்த 60 வருடங்களாக இலங்கையில் எரியும் பிரச்சினையாகவுள்ள தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் எத்தனங்களில் ஒரு கட்டமாக இன்று இலங்கையும் இந்தியாவும் இணைந்து புது முயற்சி ஒன்றில் ஈடுபட்டுள்ளன.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இனப்பிரச்சினை இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அரசியல் ரீதியாகவும் ஆயுதப் போராட்டம் மூலமும் தீர்வு ஒன்றைக் காண தமிழர்கள் கடந்த அறுபது வருடங்களாக முயன்று வருகின்றனர்.

இலங்கையில் ஆட்சிக்கு வரும் அரசுகள் எல்லாம் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் தமிழர்களை நடத்த முனைந்தமையே இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை எட்ட முடியாமைக்கு மூல காரணம்.

தமிழர்கள் தமது தாயகப் பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

வடக்கு - கிழக்குத் தாயகம். அந்தத் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் தமது நிர்வாகத்தைத் தாமே நடத்த வேண்டும் என்பதே அவர்களின் அவாவும்.

அந்த அவாவை, விருப்பத்தைச் சிதைத்துச் சின்னாபின்னாமாக்கும் போக்கு சிங்களத் தலைமைகளின் மனங்களில் உறைந்து கிடப்பதாலேயே இந்தப் பிரச்சினை இத்தனை நீண்ட காலம் தீர்க்கப்படாமல் கிடக்கிறது.

ஆட்சிக்கு வரும் ஒருகட்சி கொடுப்பதை, மறுகட்சி பறிப்பதும் மறுகட்சி கொடுப்பதை மற்றக்கட்சி பறிப்பதுமே வரலாறாகத் தொடர்கின்றது.
இலங்கையும், இந்தியாவும் இணைந்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைக் கொண்டுவந்து வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை ஒன்று அமைய தீர்வு காணப்பட்டது. அந்த மாகாண சபைக்கு அதிகாரங்களைப் பகிர மத்திய அரசு மறுத்ததன் காரணமாக, மாகாண சபைத்திட்டம் தமிழரைப் பொறுத்தவரையில் தோல்வியில் முடிந்தது. பின்னர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி அது இரண்டாகப் பிளந்தது.

அதுமட்டுமல்லாமல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடைமுறைப்படுத்தி சிங்கள மயமாக்கல் தீவிரமாக்கப்பட்டு, தமிழ் மக்களின் பூர்வீகமான நிலங்கள் அபகரிக்கப்பட்டன.

தமிழீழம் என்ற கோட்பாடுடன் தமிழ் இளைஞர்கள் பல்வேறு குழுக்களை ஆரம்பித்து இலங்கை அரசுக்கு எதிராகப் போரிட்டன. அந்தக் குழுக்களுக்கு இடையே ஊடுருவியவர்கள் அக் குழுக்களின் ஒற்றுமையைச் சிதைத்தனர்.

காலத்துக்கு காலம் அந்தக் குழுக்களை ஜனநாயக வழிக்கு உள்வாங்கிய சிங்களத் தலைமைகள், எஞ்சி நிலைநின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, பல நாடுகளில் உதவிகளைப் பெற்று அழிக்க முயற்சி மேற்கொண்டன.

அக் காலகட்டத்தில் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் அந்த அமைப்புடன் பேச்சுக்களை நடத்தின தெற்குத் தலைமைகள்.

சர்வதேசத்தின் பிரசன்னத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்றை அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சித் தலைமை அந்த அமைப்புடன் ஒப்பந்தம் செய்து, போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

அதன் பின்னர் நாடுமாறி நாடுமாறி எட்டுக் கட்டப் பேச்சுக்களும் இடம் பெற்றன. அந்தப் பேச்சுக்களில் பல்வேறு இணக்கங்கள் ஏற்பட்டு முன்னேற்றகரமாகப் பேச்சுக்கள் சென்று கொண்டிருக்க, அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க ஐ.தே.கட்சியின் முக்கிய பதவிகளைப் பறித்ததன் எதிரொலியாக தேர்தல் நடந்து, ஐ.தே.கட்சி தோல்வி யடைந்ததுடன் சமாதானப் பேச்சுக்களும் முடிவுக்கு வந்தன.அந்தப் பேச்சுக்களின் அனுசரணையாக இருந்த நோர்வே அரசு பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து இந்தியாவுக்கு மட்டுமல்ல சர்வதேசத்துக்கும் அவ்வப்போது தெரிவித்து வந்தது.

சர்வதேச மயப்படும் இனப்பிரச்சினை விவகாரத்தை விரும்பாத சிங்களத் தலைமைகள் சர்வதேச அனுசரணை யாளர்களை அந்தப் பணியில் இருந்து வெளியேற்றின.

அதன்பின் நடந்த உச்சக் கட்டப் போரின் பின்னர் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டனர்.

அந்த வெற்றியை வைத்து ஆட்சியை ஸ்திரமாக்கிய தலைமைகள் இப்போது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண முனைப்புக் காட்டியுள்ளன.

இந்த முனைப்பின் ஒருகட்டமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா விற்குச் சென்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பல தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னரே அவர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

அந்தப் பேச்சின் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறுவர் கொண்ட குழு இந்தியா சென்றிருந்தது.

பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எம்.கே. கிருஷ்ணா உட்பட முக்கிய தலைவர்களைக் கூட்டமைப்பு சந்தித்தது.

வடக்கு - கிழக்கு இணைப்பு , தமிழ் மக்களின் தீர்வு ஆகியன தொடர்பாக இப்பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளன.

இனப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான தீர்வு ஒன்றை அடைவதற்கு இந்தியா தனது முழுமையான பங்களிப்பைச் செய்யும் என்ற வாக்குறுதியைப் பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் வழங்கினர் என கூட்டமைப்பினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது 2ஆவது பதவிக்காலம் ஆரம்பிக்கும் நவம்பர் 18ஆம் திகதிக்குப் பின்னர் தமிழர் பிர்சசினைக்குத் தீர்வு ஒன்றைக் காணப்போவதாக அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தமிழரின் பிரச்சினை தொடர்பாக நடந்த பேச்சுக்களின் விவரங்களை நோர்வே தரப்பு இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி வந்தது.

அந்தவகையில் தமிழர் எந்தவகையான தீர்வை விரும்புகிறார்கள் என்ற விவரம் இந்தியாவுக்கு நன்கு தெரியும். அந்த அடிப்படையில் தீர்வு ஒன்று தமிழர்களுக்கு கிட்ட இந்தியா உதவுமா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

கூட்டமைப்புக்கு அவர் அளித்துள்ள வாக்குறுதி யும், அந்த அடிப்படையில் அமைந்திருப்பதை அவ தானிக்க முடியும். முன்னேற்றகரமானதாக அவரது வாக்குறுதி அமையுமானால், அவர் இலங்கையுடன் அர்ப்பணிப்புடன் பேச்சுக்களை நடத்த வேண்டும். அப் போதுதான் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிட்டும்.

இதற்குப் புறம்பாக -

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமையவோ அல்லது அதற்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கும் தீர்வையோ முன்வைக்கும் இலங்கை அரசின் நிலைப்பாட்டை நோக்கும் போது, தீர்வு என்பது வெகு தூரத்தில் இருப்பதாகவே கருதப்படுகிறது.


இலங்கை அரசு, தமிழர் தரப்பு ஆகியவற்றின் தீர்வு யோசனைகளை உள்வாங்கி, நிலைத்து நிற்கக் கூடிய, தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளும் திர்வை இந்தியா முன்வைக்கும் போதுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வும் கிட்டும். தமிழ மக்கள் நிம்மதியாக வாழும் நிலையும் உருவாகும்.

இது நிற்க -

## வீரவன்ஸ அரங்கேற்றிய உண்ணாவிரதத்தால் களேபரம்

கடந்த வருடம் இறுதிக்கட்டப் போரில் போர்க் குற்றங்கள் இடம் பெற்றனவா என்பது குறித்து ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழு விவகாரம் கடந்த வாரம் கொழும்பை களேபரப்படுத்தியது.

அந்தக் குழுவைக் கலைக்க வேண்டும் என்று கோரி அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ மேற்கொண்ட உண்ணா விரதமே இந்தக் களேபரத்துக்கு காரணம்.



இந்த உண்ணாவிரதத்துக்கும் தமது கட்சிக்கும் தொடர்பில்லை. ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சி ஒன்றின் தலைவரே அந்தப் போராட்டத்தை மேற்கொள்கிறார் என அரச தரப்பில் இருந்து முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இளநீர் வழங்கி உண்ணா விரதத்தை முடித்து வைத்துள்ளார்.

இந்த உண்ணாவிரதம் குறித்து கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் எம்.பி. விஜித ஹேரத் இது ஒரு நாடகம் என வர்ணித்துள்ளார்.

இந்த உண்ணாவிரதத்தால் ஒன்றும் நடக்கவில்லை. சர்வதேச ரீதியில் நாட்டை அவமானப்படுத்திவிட்டது என்று கூறியுள்ளார்.

உண்ணாவிரதம் ஒரு நாடகமா? அல்லது ஐ.நாவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையா என் பதற்கான பதிலைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

-யாழவன்

***





# இலங்கைத்தீவின் குற்றவாளிகள்

தலைவர்களாக இருப்பவர்கள் தலைமைத்துவத்துக்குரிய தகுதியோடு இருக்க வேண்டும். அந்தத் தகுதியானது, மக்களுக்குச் செய்யும் சேவையிலும் மக்கள் மீதான மனிதாபிமானத்தினாலும் மக்களிடம் இருக்கும் அக்கறையினாலும் உருவாகுவதாகும்.

இலங்கையில் அத்தகைய சிறப்புமிக்க தலைவர்கள் கடந்த 60 ஆண்டுகளில் உருவாகவேயில்லை. தலைவர்களாக இருந்தவர்கள் எல்லோருமே இனவாதிகளாகவே இருந்தனர். இனவாதம் என்பது வன்முறை மனோபாவத்தை உள்மனதில் கொண்டது. வன்முறை மனோபாவம் என்பது, ஆயுதத்தையும், அடக்குமுறையையும், இரத்தத்தையும் அடிப்படையாகக் கொள்வது. ஆகவேதான் இலங்கைத்தீவு இரத்தத்திலும் கண்ணீரிலும் மிதந்தது.

இப்போது போர் முடிந்துவிட்டது. சாவுகளும் குருதி சிந்துவதும் நின்றுள்ளன. ஆனால், அவலமும்



கண்ணீரும் நிற்கவேயில்லை. போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் துயரம் தீரவும் இல்லை. தீர்க்கப்படவும் இல்லை. தமிழர்களின் அவலத்தைத் தீர்ப்பதற்குரிய அக்கறையும் மனமும் தமிழ்த் தலைவர்களிடமும் இல்லை. சிங்களத் தலைவர்களிடமும் இல்லை.

கூரையில்லாத வீடுகளில், ஏராளம் பிரச்சினைகளோடு தமிழ்ச்சனங்கள் வாழ்கின்றனர். குறிப்பாக, வன்னிமக்கள் எவருக்குமே வீடுகளில்லை. கூரையில்லாத வீடுகளில் இருந்துகொண்டும், அகதி முகாம்களில் இருந்துகொண்டுமே மக்கள் தேர்தல்களில் வாக்களித்தனர். எதற்காக இந்த மக்கள் வாக்களித்தார்கள்? யாரையாவது நாடாளுமன்றத்துக்கு அனுப்பிப் பெருமைப்பட வேண்டுமென்றா? அல்லது, யாரையாவது நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வேடிக்கை பார்க்கவேண்டுமென்றா?

தங்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு ஒரு வழியைக் காணவேண்டும். தங்களுடைய பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதற்காகவே இந்தச் சனங்கள், அத்தனை அவல நிலைக்கு மத்தியிலும் தேர்தல்களை எதிர்கொண்டனர். ஆனால், போர் முடிந்து ஓராண்டு கடந்துவிட்டது. தேர்தல் முடிந்தும் நான்கு மாதங்கள் முடிந்துள்ளன. ஆனால், வாக்களித்த மக்களுக்கு எந்த முன்னேற்றமும் கிட்டவேயில்லை. எத்தகைய நன்மைகளும் கிடைக்கும் போலவும் தெரியவில்லை. அப்படி ஏதாவது நன்மைகளும் பயன்களும் விரைவில் கிடைக்குமாக இருந்தால், அதை சம்பந்தப்பட்டவர்கள் மக்களுக்குத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

எந்தெந்த விடயங்களில் நன்மைகள் கிடைக்கவுள்ளன? எவ்வாறான பிரச்சினைகள் நீக்கப்படவுள்ளன? எவ்வளவு காலத்துக்குள் இந்தப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என்று எவராவது மக்களிடம் துணிச்சலுடன் சொல்லமுடியுமா? அது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலென்ன? அரசாங்கத்தை ஆதரிப்பவர்களாக இருந்தாலென்ன? அல்லது எதிர்த்தரப்பினராக இருந்தாலென்ன? அவ்வாறு சொன்னால், அத்தகைய துணிச்சலும் நம்பிக்கையும் இருந்தால், அவர்களே மக்களின் தலைவர்கள்.

சனங்கள் முடிவில்லாத பேரவலத்துடன்தான் வன்னியில் இன்னும் இருக்கின்றனர். அவர்களுக்கு எல்லாமே பிரச்சினைகளாக இருக்கின்றன. எல்லாமே தேவையாக இருக்கிறது.

வவுனியாவுக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் உள்ள பகுதி வேறொரு உலகத்தில் இருப்பதைப்போலவே உள்ளது என்று சொன்னார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர். இந்த ஆசிரியர் இப்போது முழங்காவிலில் படிப்பிக்கின்றார். அவருடைய அனுபவம் அது. அதாவது, உண்மையான நிலைமையை இந்த ஆசிரியர் தெளிவாக்குகின்றார்.

கூரையில்லாத வீடுகளில், வேலையும் வருமானமும் இல்லாத நிலையில் இருக்கும் மக்களுக்கு யார் உதவுவர் என்பதே இன்றுள்ள கேள்வி. இவ்வாறான நிலையில் இருக்கும் சனங்களில் ஒரு பெரிய தொகுதியினர் தங்களின் குடும்ப உறுப்பினர்களையே இழந்தும் பிரிந்தும் உள்ளனர். இவர்களுக்கு யார் தீர்வைத் தரமுடியும் என்பது அடுத்த கேள்வி. அதிலும் விடுதலைப்புலிகள் என்ற பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பதற்காக நடவடிக்கைகளை எவர் முன்னெடுப்பது?

இந்த மக்களுக்கு ஏராளம் பிரச்சினைகள் உண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இதையெல்லாம் இனியும் சொல்லிக்கொண்டிருப்பதும், இதை வைத்தே, மக்களின் அவல நிலையை வைத்தே - அரசியல் நடத்தவேண்டியதும் அவசியமில்லை.

இங்கே வலியுறுத்தப்படுவது, மக்களின் அவலநிலைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே. முதலில் சனங்களின் பிரச்சினைகள் எவை, என்ன தன்மையுடையவை என்பவற்றை வகைப்படுத்த வேண்டும்.

விடுதலைப்புலிகள் தாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது ஒரு முக்கியமான விடயத்தை எப்போதும் தெளிவுபடுத்தினார்கள். முதலில் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை - அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அடுத்த கட்டமாக அரசியல் பிரச்சினைகளைப் பற்றி பேசலாம் என்று. சனங்களின் இயல்பு வாழ்வு ஏற்படுவது அவசியமானது. இதற்கு மனிதாபிமான அடிப்படையிலான அணுகுமுறை அவசியம்.

**அருள் மனோகரன்**

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையை இதுவரையில் மனிதாபிமான முறையில் அணுகவில்லை என்பது உண்மை. அப்படி அது மனிதாபிமான அடிப்படையில் தமிழ் மக்களைப் பார்த்திருந்தால், போர் முடிந்த பின்னர், இப்போதும் இந்த மக்கள் இவ்வாறு அவலப்பட வேண்டி வந்திருக்காது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விடயத்தையும் இங்கே குறிப்பிடவேண்டும். போரில் சிக்கயிருந்த 3 லட்சத்து 30 ஆயிரம் மக்களும் போருக்கு முன்னரும் அவலங்களையும் நெருக்கடிகளையும் பேரவலத்தையும் எதிர்கொண்டவர்கள். இப்போது - போர் முடிந்த பின்னரும் அவ்வாறு அவலத்துடனேயே வாழ்கின்றனர்.

எனவே, இந்த மக்களின் பிரச்சினைக்கு, இந்த நாடு முக்கிய கவனமெடுத்து தீர்வு கண்டிருக்க வேண்டும். இந்த மக்களுக்கு இலங்கைத் தீவின் சகல மக்களும் முன்வந்து தாராளமாக உதவியிருக்க வேண்டும். இந்த மக்களின் காயங்களை ஆற்றி, கண்ணீரைத் துடைத்திருக்க வேண்டும்.

ஆனால், அப்படி எதுவும் நடக்கவேயில்லை. வன்னிமக்களின் அவலத்தை சிங்களத் தரப்பின் ஊடகங்களும் அரசியல் கட்சிகளும் மனிதாபிமான அடிப்படையில் அணுகவே இல்லை. இது குற்றச்சாட்டல்ல. உண்மை. வன்னிக்கு சிங்கள புத்திஜீவிகளோ, மதகுருமாரோ, இடதுசாரிகளோ, பிற அரசியற்கட்சியினரோ, பாடசாலைச் சமூகத்தினரோ, தொழிற்சங்கவாதிகளோ, ஊடகக்காரர்களோ, படைப்பாளிகளோ செல்லவேண்டும் என்று சிந்தித்ததாக இல்லை. ஆகையால், பொதுவாகவே பல வழிகளிலும் பதிவு சம்பந்தப்பட்டு பிரச்சினைப்படும் மக்களுக்கு உரிய தீர்வுகள் காணப்படுவது கட்டாயமாகியுள்ளது.

இது தாமதமாகும்போது பல பிரச்சினைகள் உருவாகியபடியே இருக்கின்றன. குறிப்பாக காணாமற்போனோர், விவாகப் பதிவற்றோர் போன்றோருக்கான வீட்டு நிர்மாண உதவிகள் கைநழுவிப் போகும் நிலையும் காணப்படுகிறது.

எனவே, இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு அரசாங்கமும் இலங்கைப் பதிவாளர் நாயகமும் சிறப்பு ஏற்பாட்டின் மூலம் பதிவுக்குத் தீர்வு காணுதல் அவசியம்.

இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் உரிய கவனத்தைச் செலுத்தி நடவடிக்கைக்கு முயற்சிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள், எல்லா வகையிலும் பாதிக்கப்படுவது நியாயமே அல்ல. மக்கள் இப்படிப் பாதிக்கப்படுவதை அனுமதிப்பதும் ஒருவகைக் குற்றமே!

சுடர் ஒளி

ஜூலை. 18- ஜூலை. 24, 2010

85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005 பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## வன்னி மக்களும் ஜனாதிபதியும்

அமைச்சரவைக்கூட்டம் இம்முறை கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. வடமாகாணத்தில் நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இது என்பதுடன், விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு அமைந்திருந்த அதே கட்டடத்தில் இந்த கூட்டம் நடைபெற்றது முக்கியத்துவம் பெறுகிறது.

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் இரண்டு மாதங்கள் கழிந்த நிலையில் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி சென்ற ஜனாதிபதி அங்கு அரச உயர் அதிகாரிகள், ஊழியர்கள் மத்தியில் உரையாற்றினார். அதன்பின்பு இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

ஜனாதிபதியின் கிளிநொச்சி விஜயம் குறித்து பெரும் எடுப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டதால், இந்த விஜயத்தின் போது வன்னி மக்களின் துயர் தீர்க்கும் ஏதாவது அறிவிப்பு வெளியாகலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதியின் உரை சாதாரணமான ஒன்றாகவே இருந்தது.

அரசியல் சிந்தனைகளை பின்னே தள்ளி வைத்துவிட்டு மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு சகலரும் ஐக்கியப்பட வேண்டும் என்று கிளிநொச்சியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பலியெடுத்த இந்த கோர யுத்தத்தின் வடுக்கள், தடயங்கள் இன்றும் வன்னியில் இருந்துகொண்டு தான் இருக்கின்றன. கூரை இல்லாத கட்டடங்களும், உடைந்த வீடுகளும் தான் இன்று அங்கு செல்வோரை வரவேற்கின்றன.

இப்படியான நிலைமையில்தான் ஜனாதிபதியின் கிளிநொச்சி விஜயம் இடம்பெற்றுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி இவற்றை கருத்தில் கொண்டே, கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டம் நடத்துவது அவசரப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு என்று விமர்சித்திருந்தார்.

அதாவது, யுத்தத்தின் பின்பு மீள்குடியமர்வு இன்னும் முழுமையடையவில்லை. மீளகுடியமர்த்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் மீண்டும் தறப்பாள் கூடாரங்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள இடங்களில் இவர்களது வீடுகள் இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டுள்ளன. மீள்குடியமர்வுக்காக அழைத்துச் செல்லப்பட்ட குடும்பங்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்னும் அவர்களின் சொந்த இடங்களில் அமர்த்தப்படாமல் பாடசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. அதேசமயம் மீள்குடியமர்த்தப்படாத நிலையில், 36 ஆயிரம் பேருக்கு மேல் வன்னி நலன்புரி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளனர். முன்னாள் போராளிகள் என்று கூறி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் எதிர்காலம் இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. புனர்வாழ்வு என்ற பெயரில் இவர்கள் காடு அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் ஆடைத் தொழிற்சாலைக்கு அனுப்பப்படும் பெண்கள் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர் என்றும் நாடாளுமன்றத்தில் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

மீள்க்குடியமர்த்தப்பட்ட இடங்களில் பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக கிளிநொச்சியில் படையினர் சிலர் கைதாகியும் உள்ளனர்.

ஆகவே, வன்னி மக்களின் கண்ணீரைத் துடைக்க ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் சிந்தனைகளை பின்னே தள்ளிவிட்டு மக்கள் ஐக்கியப்படுவதால் இந்தப் பிரச்சினை தீரமாட்டாது. ஜனாதிபதியினாலேயே இது சாத்தியமாகும். *

# புலம்பெயர் தமிழர்களும்



# பூஸாக் கைதிகளும்

பூஸாவிலும் மற்றும் தடுப்பு முகாம்களிலும் உள்ள தமிழ்க் கைதிகளுக்கு இப்போதைக்கு விடுதலை இல்லை!

சமீபத்தில் இலங்கை வந்த புலம்பெயர் தமிழர் குழுவிடம் இது குறித்து இலங்கை அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்டதாம்.

இலங்கை வந்த ஒன்பது பேர் அடங்கிய புலம்பெயர் தமிழர்குழுவினர் சமீபத்தில் பாதுகாப்புச் செயலர் கோட்டாபாய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரையும் கே.பி. எனப்படும் செல்வராசா பத்மநாதனையும் சந்தித்தனர். வவுனியா நலன்புரி முகாம்களுக்கும் இவர்கள் விஜயம் செய்தனர்.

இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த லண்டனைச் சேர்ந்த சார்ள்ஸ் அன்டனி தாஸ் லண்டனில் வைத்து எமது செய்தியாளருக்குப் பேட்டி அளிக்கையில் மேற்கண்ட விவரங்களை தெரிவித்தார்.

சார்ள்ஸ் அன்டனிதாஸ் தனது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில், ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சிகளுக்கு எவரும் தடையாக இருக்கக் கூடாது என்பதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவரும் பலவீனப்படுத்தக் கூடாது என்பதிலும் கே.பி. உறுதியாக இருக்கிறார்.

நாம் தமிழ்ப் பிரதிநிதிகளாகவோ அல்லது புலம் பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவோ இலங்கை செல்லவில்லை. எமது விஜயத்துடன் எந்தவிதமான அரசியல் முன்னெடுப்பும் தொடர்புபடவில்லை. தற்போது முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் குறித்தே நாம் முக்கியமாக பேசினோம். புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பூஸாவிலும் மற்றும் சிறைகளிலும் உள்ளவர்களின் விடுதலை குறித்தும் நாம் பேசினோம். பூஸா என்று நாம் சொன்னவுடனேயே, அவர்களை இப்போதைக்கு விடுதலை செய்யமுடியாது. அடுத்த தடவை சந்திக்கும் போது அது குறித்து பேசுவோம்''- என்றார்கள் என்றும் சார்ள்ஸ் அன்டனி தாஸ் கூறினார்.

இந்தக் குழுவினரின் திடீர் வருகை குறித்து பல்வேறு சந்தேகங்கள் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள சூழ்நிலையில், இந்தக் குழுவில் அடங்கியிருந்த சார்ள்ஸ் அன்டனி தாஸ், அ. விமலதாசன் உட்பட சிலர் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

1. உள்ளக இடப்பெயர்வினால் இடப்பெயர்ந்த மக்களின் இன்றைய நிலை, அவர்கள் வாழும் முகாம்கள் பற்றி மதிப்பிடல்;

2. புனர்வாழ்வளிக்கப்படும் போராளிகளின் இன்றைய நிலை, அவர்கள் வாழும் முகாம்கள் பற்றி மதிப்பிடல்;

3 இடம்பெயர்ந்த எம்மக்களுக்காக தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் புனர்வாழ்வுத்திட்டங்கள் பற்றி மதிப்பிடல்;

4. இடம்பெயர்ந்த மக்களுக்கும், புனர்வாழ்வளிக்கப்படும் போராளிகளுக்கும் உதவ முன்வரும் அரச சார்பற்ற தனியார் மனிதாபிமான தொண்டு நிறுவனங்களுக்கு இலங்கை அரசினால் முன் வைக்கப்படும் நிபந்தனைகளை மதிப்பிடல்;

5. இடப்பெயர்ந்த, மீள்குடியமர்ந்த எம் மக்களுக்கு புலம்பெயர்ந்த மக்களினால் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு, புனருத்தாரண உதவிகளை மாவட்ட மட்டத்திலும், வட்டார மட்டத்திலும் உள்ள இலங்கை அரசாங்க அலுவலர்கள் எவ்வாறு செயற்படுத்துகின்றனர் என்பது பற்றிய மதிப்பிடல்.

ஆகியவையே தமது இலங்கை விஜயத்தின் நோக்கம் என்று இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பின்வரும் உடனடித் தேவைகளை செய்யக்கூடியதாக இருந்தது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

1. வாழ்வாதாரங்களை இழந்து முகாம்களில் வாழும் எம்மக்களின் புனர்வாழ்வுத்திட்டங்களுக்கும், மீள் குடியேற்றத்துக்கான திட்டங்களுக்கும் தேவையான தரவுகளை பெறக்கூடியதாக இருந்தது மட்டுமல்லாது அவர்கள் மீண்டும் எம்மண்ணில் குடியேறவேண்டுமென்ற ஊக்கத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் பகிர்ந்துகொண்டோம்.

2. புனர்வாழ்வளிக்கப்படும் க.பொ.த (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு தேவையான பிரத்தியேக வகுப்புகள், பாட உறுதுணை புத்தகங்கள், பழைய



கே.பி.

பரீட்சை வினா தாள்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இவ்விஜயத்தின் போது குழுவினர் வடக்கு-கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுவதற்கு முயன்றும் அது முடியாமற் போனது. எனினும் வரும் காலங்களில் மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-லண்டனிலிருந்து
தோமஸ் வினோஜன்

## இந்தியாவில் உடல் பருமன் பாதிப்பு அதிகரிப்பு

இந்தியாவில் ஏறத்தாழ 3 கோடி பேருக்கு உடல் பருமன் பிரச்சினை இருப்பதாகவும், இதில் பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கை 20 சதவீதம் என்றும் தேசிய குடும்ப நலத் துறை ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

வளர்ந்த நாடுகளில் தான் உடல் பருமன் பிரச்சினை மிகுதி என பரவலாக அறியப்படும் நிலையில், இந்தியாவில் தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினையின் தீவிரம் அதிகரித்துள்ளது என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல் பருமன் காரணமாக நீரிழிவு நோய், மூட்டுப் பிரச்சினை கள், மன அழுத்த பாதிப்பு, குழந்தையின்மை, மார்பக புற்றுநோய் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உண்டு.

இந்த உடல் பருமன் கோளாறுக்கு தீர்வு காண, பாரியாட்ரிக் சர்ஜரி (Bariatric surgery) என்ற பருமனுக்கான அறுவை சிகிச்சை பற்றிய பயிலரங்கு கொல்கத்தாவில் நடைபெற்றது.

உணவு முறை, உடல் பயிற்சி மற்றும் மருந்துகள் மூலமாக உடல் பருமன் கோளாறுக்கு தீர்வு காண முடியும். இப்போது, குளுக்கோஸை கட்டுப்படுத்தக் கூடிய பாரியாட்ரிக் சர்ஜரிக்கு வெகுவாக வரவேற்பு காணப்படுகிறது என்று பயிலரங்க ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். *



உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?
மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகிறீர்களா...............
நாம் இப்போது பம்பலப்பிட்டியிலும் (மிலாகிரி புனித போல் பள்ளிக்கு முன்பாக)
இதோ! அதற்கான தீர்வு எம்மிடமிருந்து..
GYM BALL
YOGA MAT
PUNCHING MAN
TOTAL TRAINER (TOTAL GYM)
COMMERCIAL GYM 4 STATION
HOME GYM
ரூ. 32,500/- விலிருந்து
PUNCHING TARGET
FOOT TARGET
WEIGHT LIFTING BENCH
ரூ. 13,900/- விலிருந்து
SIT-UP BENCH
ரூ. 6,900/-
PLASTIC DUMBBELLS FOR LADIES
AB PRO
ரூ. 8,900/-
ELECTRONIC TREADMILL
WEIGHT BENCH
ரூ. 9,500/- விலிருந்து
BODY STRIDER
WEIGHT LIFTING BELTS & GLOVES
PUNCHING BAG & PUNCHING GLOVES
ரூ. 43,500/- விலிருந்து
WEIGHT & BARS
கி. 1 ரூ. 99/- விலிருந்து
ரூ. 12,900/-
விளையாட்டு உபகரணம்
FOOT BALL
ரூ. 450/- விலிருந்து
VOLLEY BALL
ரூ. 450/- விலிருந்து
BASKET BALL
ரூ. 750/- விலிருந்து
CRICKET HELMET
ரூ. 1750/- விலிருந்து
LEATHER BALL
ரூ. 290/- விலிருந்து
CRICKET BAT
BADMINTON RACKET
CRICKET PAD
ரூ. 1950/- விலிருந்து
ரூ. 295/- விலிருந்து
TENNIS RACKET
TENNIS BALL
ரூ. 39/- விலிருந்து
CRICKET GLOVES
THIGH PAD
CARROM BOARD
TABLE TENNIS RACKET & BALL
MIKASA YONEX RDM Wilson AS CHAMP
ESER MARKETING
VISA
MasterCard
HSBC
SEYLAN
BODY SCULPTURE
ESER MARKETING (PVT) LTD
நாடளாவிய கிளைகள்
கோட்டை - தொ: 011 5731888
பம்பலப்பிட்டி - தொ: 011 2585330
நுகேகொடை - தொ: 011 5529888
மொறடுவை - தொ: 011 5528888
ஜா-எல - தொ: 011 5731730
களனி - தொ: 011 5552008
இராஜகிரி - தொ: 071 4440555, 5347632, 5357632
கண்டி - தொ: 081 5673333
குருநாகல் - தொ: 037 5672562
மாத்தளை - தொ: 066 5678886
கம்பஹா - தொ: 033 5628889
காலி - தொ: 091 5457777
மாத்தறை - தொ: 041 5629888
இரத்தினபுரி - தொ: 045 5678887
நீர்கொழும்பு - தொ: 031 5678880
களுத்துறை - தொ: 034 5629888
அம்பலன்கொடை - தொ: 091 5678888
அநுராதபுரம் - தொ: 025 5628889
கேகாலை - தொ: 035 5628889
பண்டாரவல - தொ: 057 5678889
முகவர்கள்
மட்டக்களப்பு - சனபில் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. தொ: 060 2652848, 077 3512341
மன்னார் - உஷா சேல்ஸ் சென்டர். தொ: 023 2222010
திருகோணமலை - அஜ்மீர் டிரேடர்ஸ், 186, என்.சீ. வீதி. தொ: 026 2222702
வவுனியா - ‘கணேஷ்’ 100, ஸ்டேசன் வீதி, வைரவ புளியங்குளம். தொ: 024 4924775
யாழ்ப்பாணம் - ‘யாழகம்’ 568, ஹொஸ்பிடல் வீதி. தொ: 021 2225563
HOTLINE: 5652652
www.esermarketing.com



சென்று மீள் குடியேற்றம் செய்ய இலங்கை முன் வரவில்லை. போரினால் பாதிக் கப்பட்டு சொந்த இடங்களை இழந்த மக்களை மீள் குடியமர்த்த இந்தியாவும்,

உதவி புரிந்ததை உலக நாடுகளும் அறியும், உலக மக்களும் அறிவார்கள். இலங்கையில் போர் முடிந்து ஒரு ஆண்டு ஆகியும் அங்கே சீனாவின் ஆதிக்கம் விரைவாக வளர்வதை இந்தியா வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் விரைவாக வளர்வதன் மூலம் எதிர் காலத்தில் இந்தியாவுக்கு மிகப்பெரிய ஆபத்தும், அச்சுறுத்தலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

விடுதலைப் புலிகளை ஒழிக்க உதவிய சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இலங்கை நன்றிக் கடனாக பல வழிகளில் உதவி வருகிறது. குறிப்பாக அபிவிருத்தி என்று சொல்லிக்கொண்டு சீனா இலங்கையில் துறைமுகம் மேம்பாட்டு பணி என்ற பெயரில் கடற்படைத் தளத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இது எதிர்காலத்தில் இந்தியாவுக்கும், தென் இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழ்




உடனடியாக இந்தியா செய்து கொடுக்க முன்வரவேண்டும். மேலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் சொந்த இடத்தில் மீண்டும் குடி அமரவும், மீள்குடியேற்றம் நடைபெறவும் இந்தியா தேவையான நடவடிக்கையை உடனடியாக செய்ய முன் வரவேண்டும்.

குறிப்பாக தமிழர் பகுதிகள் சிங்கள மயமாவதை உடனடியாக தடுத்து நிறுத்தி இலங்கையில் அரசியல் சுய நிர்ணயம் செய்து தமிழர்கள் அமைதியாக வாழ வழி செய்து தேவையான நடவடிக் கையை இந்தியா மேற்கொள்ள வேண்டும். இந்தியாவில் உள்ள அரசமைப்புப் போன்று இலங்கையில் புதியதாக ஓர் அரசமைப்பை

# அழிந்த தமிழீழமும் அழியப்போகும் தமிழகமும்

இலங்கையில் உள்நாட்டு போர் முடிந்து முதலாம் ஆண்டு வெற்றியை சிங்களவர்கள் கொண்டாடியுள்ளனர். இந்த வேளையில் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு இந்தியா இதுவரை செய்த



நிகழ்வுகள் அனைத்தையும் உலகத் தமிழர்கள் அனைவரும் அறிவர்.

இலங்கையில் தற்பொழுது நடை பெறும் நிகழ்வுகளையும் இதற்கு முன் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் இந்தியா நன்கு அறியும். தமிழ்ப் பகுதிகளில் விடுதலை புலிகளை ஒழித்தாக ராஜபக்ஷ தன்னை பாராட்டி கொண்டு வரும் வேளையில் இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளை தமிழ் மக்களிடம் இருந்து பறித்து அந்த பகுதிகளை சிங்கள மயமாக ஆக்கும் நிகழ்வு நடந்து வருவதை இந்தியாவும் அறியும். உலக நாடுகள் பலவும் அறியும்.

ஆயிரக்கணக்கான வீடுகளை இடித்து, வெடிகுண்டுகளை வீசி தன் நாட்டு மக்களை தன் சொந்த நாட்டிலே அகதிகளாக வைத்து வேடிக்கை பார்க்கும் ஒரே நாடு இலங்கையாக மட்டும் தான் இருக்க முடியும். இதனை உலக நாடுகளும், ஐ.நாசபையும், மனித உரிமை அமைப்புகளும், பல சர்வதேச அமைப்புகளும் வேடிக்கை பார்க்க மட்டும் தான் முடிந்தது.

போர் முடிந்து ஓர் ஆண்டு ஆன நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை தங்கள் சொந்த இடங்களுக்குச்

உலக நாடுகளும், ஐ.நா சபையும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளையும், மனிதாபிமான உதவியையும் இதுவரை இலங்கை செய்யவில்லை.

இதற்கு இந்தியாவும், உலக நாடுகளும், ஐ.நா சபையும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வில்லை. பாதிக்கப் பட்ட மக்களை முள் வேலிக்குள் வைத்து வேடிக்கை பார்க்கும் இலங்கையை இதுவரை எந்த நாடும் தட்டிக் கேட்காதது மிகவும் வேதனையான நிகழ்வாகும்.

இலங்கை அரசு தமிழ் மக்களை முள் வேலிக்குள் வைத்து வேடிக்கை பார்ப்ப தோடு மட்டுமல்லாமல் தமிழர் பகுதிகளை சிங்கள மயமாக்கி வரு கிறது. வட இலங்கையில் தமிழர்களின் 80 சதவிகித விவசாய நிலங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இலங்கை அரசு தமிழர் பகுதிகளில் புத்த விஹாரை, புத்தர் சிலை ஆகியவற்றை நிறுவி தமிழர்களின் அடையாளங்களை அழிக்க முற்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றம் செய்யாமல் தமிழர் பகுதிகளில் இராணுவ முகாம், தரைப்படை தளம், விமான தளம், கடற்படை தளம் என அமைத்து இராணுவ பலத்தின் மூலம் தமிழர் பகுதிகளை சிங்கள தேசமாகவும் இராணுவ முகாமாகவும் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்தியா வேடிக்கை பார்க்கிறது. ஆனால் எதிர் காலத்தில் மிகப்பெரிய ஆபத்தையும், பெரும் அழிவையும் எதிர்நோக்கி உள்ளதை இந்தியா இதுவரை அறியவில்லை.

இலங்கையில் விடுதலைப்புலிகளை ஒழிக்க இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகள் பல வழிகளில் போட்டி போட்டுக்கொண்டு

நாட்டிற்கும் வரப்போகும் மிகப்பெரிய ஆபத்திற்கு அடித்தளமாகும்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான சீனர்கள் அபிவிருத்தி திட்டங்களில் பங்கு பெற்று வருகின்றனர். இந்த எண்ணிக் கையில் அதிக அளவு இராணுவ வீரர் கள், முன்னாள் இராணுவ வீரர்கள் இருப் பதாக பல தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை எதிர்காலத்தில் கூடக்கூடும். இலங்கையில் சீனா அபி விருத்தி என்ற பெயரில் கடற்படைத் தளத்தையும், தரைப்படைத் தளத்தை யும், விமான தளத்தையும் மேம்படுத்தி வருவதை கண்டு இதுவரை இந்தியா அச்சம் கொள்ளவில்லை.

ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவை விட பாகிஸ்தானுடனும், சீனாவுடனும் நட்புக் கொண்டு உதவிகள் பல பெற்று வருகிறார். எதிர் காலத்தில் இராணுவ ரீதியான உதவிகளை பெறவும் உள்ளார். இலங்கையில் சீனா அமைக்கும் அபிவிருத்தித் திட்டம் வட இலங்கை பகுதியில் அதிகமாக அமைய உள்ளது. இந்த பகுதியானது தமிழ் நாட்டுக்கு மிகவும் நெருங்கிய பகுதியாகும்.


இந்தியாவின் அண்டை நாடுகளான பங்களாதேஷ், மியன்மார், பூட்டான், நேபாளம், திபெத் போன்ற நாடுகளால் இந்தியாவுக்கு எப்பொழுதும் ஆபத்து ஏற்படலாம். இந்தியாவின் தென் பிராந்தியப் பாதுகாப்பில் இது வரை எந்த அச்சுறுத்தலும், ஆபத்தும் இல்லாமல் இருந்து வந்தது. ஆனால் இலங்கையின் நடவடிக்கையினால் எதிர் காலத்தில் மிகப்பெரிய ஆபத்தும், அச்சுறுத்தலும் ஏற்படலாம். குறிப்பாக தமிழ் நாட்டுக்கு பெரிய அளவு ஆபத்தும் அழிவும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இலங்கையில் தற்பொழுது சீனாவும், பாகிஸ்தானும் கால் ஊன்றி உள்ள நிலையில் பூளோக ரீதியாக எதிர்காலத் தில் இந்தியாவுக்கும், தென் இந்தியாவுக் கும் குறிப்பாக தமிழ் நாட்டுக்கும் மிகப் பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனை தடுக்கும் வகையில் இரு நாடு களையும் இலங்கையில் நுழைய விடா மல் இலங்கையை இந்தியா தன் செல் வாக்குக்குள் கொண்டுவரவேண்டும்.

அதற்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை யும் உள் கட்டமைப்புகளையும்

ஏற்படுத்தி தமிழர் மாநில சுய ஆட்சி ஏற்பட இந்தியா இலங்கையை நிர்ப்பந் திக்க வேண்டும். மேலும் தமிழர் பகுதிக ளில் சமய சார்பற்ற மக்களாட்சி நடைபெற இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே இலங்கையில் அமைதி நிலவும்.

எதிர்காலத்தில் மூன்றாம் உலக போர் என வந்தால் அதில் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும். அதே போன்று இலங்கையும் மிக முக்கிய நாடாக திகழும். காரணம் இலங்கையில் சீனாவும், பாகிஸ்தானும் அமைத்துவரும் அடித்தளமாகும். இலங்கையில்




தற்பொழுது சீனாவும் பாகிஸ்தானும் அமைக்கும் அடித்தளம் மூன்றாம் உலக போரினை கவனத்தில் கொண்டு அமைக்கப்படுகிறது.

இந்த அடித்தளத்துக்கு துணை போகும் இலங்கையினால் அதிகம் பாதிக்கப்படப் போவது இந்தியாவும், தமிழகமும் மட்டு மல்லாமல் ஒட்டு மொத்த இலங்கையும் தான். மூன்றாம் உலக போர் வந்தால் தெற்கு ஆசியாவில் இலங்கை போர்க் களமாக மாறிவிட வாய்ப்பு உள்ளது. இந்தியாவுக்கு பூகோளரீதியாக நான்கு பக்கங்களும் ஆபத்து நெருங்கிவரும் வேளையில் இந்தியா இப்பொழுதே விழித்துக்கொண்டால் இந்தியாவுக்கு பாதுகாப்பு.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிய போர்க் காலத்தில் இடைக்கிடை கப்பல் மூலம் பொருட்கள் வந்துகொண்டு இருந்தன. ஒரு தடவை அங்கர்மா, திரிபோஷா ஆகியவை கப்பலில் வந்திருந்தன. இவற்றை எப்படி பங்கிட்டு விநியோகிப்பது என்பது பாரிய பிரச்சினை. ஆனாலும் சுகாதார சேவை பணிப்பாளர் ஒரு குறிப்பிட்ட வயதை குறிப்பிட்டு பால்மா விநியோகம், திரிபோஷா விநியோகம் என்பவற்றை செயற்படுத்தினர்.

எனக்கு சரியாக நினைவு இல்லை; அது மாத்தளனோ அல்லது வலைஞர்மடமோ என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது உள்ளது. பால்மா பெறுவதற்காக அதிகாலையிலே வரிசையில் மக்கள் குழந்தை வளர்ச்சி பதிவேட்டுடன் ஆயிரக்கணக்கில் கூடி விட்டனர். உண்மையில் குழந்தைகளை விட்டுவிட்டு குடும்பத்தில் ஒருவர் வந்து இருக்கலாம். இருப்பிடத்தில் என்ன குறைகளோ சிலர் குடும்பமாக வந்து இருந்தனர். குழந்தைகளும் நிறைந்து காணப்பட்டனர்.

சுற்றி வர எறிகணைகள் வீழ்ந்து வெடித்து கொண்டிருந்தன. அவற்றை பொருட்படுத்தாது மக்கள் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளி ஆரவாரப்பட்டுக்கொண்டு இருந்தனர். குழந்தைகள் சிலர் பசியால் அழுதுகொண்டு இருந்தனர். பால்மா விநியோகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

திடீரென அவ்விடத்தில் 10 - 15 எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. அவ்விடம் இரத்தகளம் ஆகியது. தாய்,

## பால்மா பெட்டி

தகப்பன், சிசு, குழந்தைகள், பால்மா விநியோகம் செய்த சுகாதாரத் தொண்டர்கள் உட்பட சுமார் 30 பேர் பலியாகினர். ஒரு குடும்பமே இறந்திருந்தது. மக்கள் சிதறி ஓடினர். இன்னும் பலர் இறந்தவர்கள், காயப்பட்டவர்கள் மீது ஏறி மிதித்துக்கொண்டு பால்மாப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடினர். ஒரு பால்மா பெட்டிக்காக வரிசையில் நின்று எவ்வளவு பேர் பலியாகி விட்டனர்.

### சம்பவம் - 2

அப்பொழுது வலைஞர்மடத்தை நோக்கி இராணுவத்தினர் முன்னேறிக்கொண்டு இருந்தனர். நாங்கள் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் கூடாரத்தினுள் தங்கி இருந்தோம். எங்கள் கூடாரத்துக்கு அண்மையில் இன்னொரு கூடாரத்தினுள் போராளிகள் சிலர் தங்கி இருந்தனர். அவர்களுள் எனது பள்ளியில் ஒன்றாகப் படித்த நண்பன் ஒருவனும் இருந்தான். அவனை 5 வருடங்களின் பின் அன்றுதான் சந்தித்தேன். ஓரிரு நாள் பருப்புத் தண்ணீரும், சோறும் அவனுக்கு கொடுத்தேன். இதைத் தானே நாங்களும் சாப்பிடுகிறோம் என்றாலும் வீட்டுச் சாப்பாடு போல் வருமா? என்று கூறி வாங்கிச் சாப்பிட்டான்.

ஒருநாள் அவன் ஓடி வந்தான். ''மாத்தளன் சுற்றி வளைப்புக்குள் அம்மா, அப்பா, சகோதரர்கள் அகப்பட்டு செட்டிக்குளம் போய்விட்டார்கள். நான் தனித்து விட்டேன். நீ இராணுவத்தினுள் போகும்போது உனது தம்பி என்று கூறி என்னையும் கூட்டிக்கொண்டு போ... எனக்கு தனியே இராணுவத்திடம் போகப் பயமாக இருக்கிறது'' என்றான்.

''எனது கணவரின் முடிவை அறியாமல் கடைசிவரை இராணுவத்திடம் போகமாட்டேன். அப்படி நான் போனால் உன்னை கூட்டிப் போகிறேன். ஆனால், நீ ஒவ்வொரு நாளும் போய்வரும்போது என்னைக் கண்டுவிட்டுப் போ...'' என்றேன். அதன்படி அவன் ஒருநாளும் தவறாமல் எனது பெயரை சொல்லி கூப்பிட்டுவிட்டு போவான்.

பின்னொரு நாள் கையில் 4,5 மாப்பெட்டிகளுடன் வந்தான். ''என்னடா எங்க கொள்ளையடித்தாய்?'' என்று கேட்டேன். ''நான் ஏன் கொள்ளையடிக்கிறன். வலைஞர் மடத்தில் சனம் ஓர் இடத்தில் விழுந்தடிச்சுது கள். அதால நான் வந்துகொண்டிருந்தேன். அப்ப நானும் சில மாப்பெட்டிகளை எடுத்து வந்தேன்'' என்று என்னிடம் தந்தான். ''ஏன்டா எனக்கு? நீ கொண்டு போ'' என்றேன். ''நான் நாய் மாதிரி அலைஞ்சு திரியுறன். இதை நான் எங்க ரீ போட்டு குடிக்கிறது. உன்ர பிள்ளைக்கு கரைத்துக் கொடு'' என்றான். அப்போது எனது குழந்தைக்கு ஐந்து மாதங்கள்தான். தாய்ப்பால் மட்டும் குடித்துக்கொண்டிருந்தான். ''அவன் மாப்பால் குடிக்கிறது இல்ல. நான் தான் குடிக்க வேண்டும்'' என்றேன். சரி நீயாவது கரைத்து குடித்துவிட்டு இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போகும்போது பிள்ளையைத் தூக்கிக்கொண்டு ஓடிப் போக உசாராக இரு''

என்று கூறி விட்டுப் போய்விட்டான். அன்று தான் நான் அவனை இறுதியாகக் கண்டேன்.

ஓரிரு நாளில் இரட்டை வாய்க்கால் பகுதியை இராணுவத்தினர் அண்மித்து இருந்தபோது காயமடைந்த நிலையில் நான் எனது கணவரை சந்தித்து இருந்தேன். முள்ளிவாய்க்கால் மேற்கு பிரதேசம் கடும் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காக தொடங்க நாங்கள் மீண்டும் கரையான் முள்ளிவாய்க் கால் கப்பல் பாதை நோக்கி இடம்பெயர்ந்தோம். காயமடைந்த கணவருக்கு மாவை கரைத்து எனது நண்பனின் உபயம் என்று கூறிக்கொடுத்தேன்.

அங்கு வந்து 3 நாட்கள் கடந்த நிலையில் வானொலியில் அவனது பெயர் வீரச்சாவு பட்டியலில் வாசிக்கப்பட்டது. என்னால் நம்ப முடியவில்லை. ஏனெனில், அவன், 'நான் சாகமாட்டேனடி...'' என்று அடிக்கடி நம்பிக்கையோடு சொல்வான். அப்படி நம்பிக்கை சொன்ன வாய் மௌனித்து விட்டதே! நான் எனது நண்பனுக்காக, அவன் தந்த பால்மா பெட்டிக்காக அழுதேன்.

எனது கணவர், ''நாங்கள் இருப்பதற்கு அடுத்த வீதியில்தான் துயிலும் இல்லம் இருக்கிறது. அங்கு வித்துடல் வரும்'' என்றார். எனக்கு அதுவரை அதில் துயிலும் இல்லம் இருப்பது தெரியாது. அடிக்கடி கேட்கும் 3 வேட்டொலிகள் அப்போது தான் நினைவுவந்தது.

நான் குழந்தையுடன் போகமுடியாது என்பதால் அம்மாவை துயிலும் இல்லம் அனுப்பினேன். ஒரு சில நிமிட இடைவெளியில் அவனது திருமுகத்தை எனது தாயாரால் காணமுடியவில்லை. ஏனெனில் எனது தாயார் சென்ற நேரம் அவனது அஞ்சலி முடிவுற்று அவனது முகம் மாத்திரம் அவனது சித்தி, சித்தப்பா என்று வந்திருந்த இருவருக்கும் காண்பிக்கப்பட்டு குழியினுள் இறக்கி விட்டனராம். அம்மாவால் மண் மட்டும் போட முடிந்தது.

அவனது நண்பன் ஒருவன் அங்கு நின்றான். அவனிடம் ''என்ன நடந்தது?'' என்று



கேட்டபோது, ''எறிகணை வீச்சு அதிகமாக இருந்தது. கொஞ்சம் ஓயவிட்டு கரையான் முள்ளிவாய்க்காலுக்கு நகருவோம் என்று எண்ணி பதுங்கு குழியினுள் பதுங்கி இருந்தோம். அப்போது பதுங்கு குழி வாசலில் எறிகணை வந்து விழுந்தது. இவன் வாசல் பகுதியை அண்டி இருந்தவன். எறிகணை சன்னம் இவனது கழுத்தில் பாய்ந்து விட்டது. இருந்தபடியே பதுங்கு குழி சுவரில் சாய்ந்த வண்ணம் உயிர் போய் இருந்தான்'' எனக் கூறினான். அவன் பாதுகாப்பாக பதுங்கு குழியினுள் பதுங்கி இருந்தும் அவனது காலம் அவன் உயிர் போய்விட்டது.

### சம்பவம் - 3

அவன் ஒரு மருத்துவ பிரிவுப் போராளி. அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் ஓய்வில்லாத வேலை. களக்காயங்கள் நிறைந்து போய் இருந்தன. உண்ண, குடிக்க, உறங்க நேரம் இல்லை.

அவனது குடும்பத்தினர் ஒரு தடவை நிவாரணம் எடுத்து எண்ணெய் ரொட்டியும், கோதுப் பருப்புவடையும், வாய்ப்பனும் செய்து அவனது தங்குமிடத்துக்கு அனுப்பி வைத்தனர். அந்த போராளிகள் இச்செயலினால் நெகிழ்ந்து போய் விட்டனர். ஏனெனில், முன்னைய பொழுதுகளில் மக்களால், பெற்றோர், சகோதரர்களால் உலருணவு செய்து அனுப்பப்படுவது வழமை. ஆனால் பின்பு பஞ்சம் பிடித்த நிலையில்அவர்களுக்கு அப்படி கிடைப்பது இல்லை.

அதன் பின் கப்பலில் வந்த அங்கர் பால்மா மருத்துவப் பிரிவில் காயமடைந்தோருக்கும் சேவை செய்வோருக்கும் வழங்கப்பட்டது. அதில் 5 பேர் தங்களுக்கு ஆளுக்கு ஒன்று என்று வழங்கப்பட்ட மாப்பெட்டிகளை தங்கள் நண்பனிடம் கொடுத்து ''உன்ர வீட்டுக்காரர் இவ்வளவு கஷ்டத்துக்குள்ளும் எமக்கு உலருணவு செய்து அனுப்பி இருக்கிறார் கள். இந்த மாப்பெட்டிகளை உனது மருமகனுக்கு கொடு'' என்று கொடுத்து விட்டார்களாம். அவன் ''இல்லையடா, மருமகன் மாப்பால் குடிப்ப தில்லை. நான் எனது மாப்பெட்டியை எனது சகோதரிக்கு கொடுக்கிறன். இவை வேண்டாம்'' என்றானாம்.

அந்த நண்பர்களின் தாய் சகோதரர்கள் ஏற்கனவே மாத்தளன், வலைஞர்மடம் பகுதிக்குள்ளால் இராணுவத்திடம் வந்து விட்டனர். இவர்கள் தனியேதான் அங்கு பணியில் நின்றனர். அவர்கள் 'நெடுக ஒரு மாதிரி இருக்காது, எப்படியும் அவனுக்கு உதவும்' என பலவந்தமாக மாப்பெட்டியை கொடுத்து அனுப்பி விட்டனர். அவர்களின் அன்பை நினைத்து நான் அன்று கண்ணீர் விட்டேன். அதில் ஒருவன் எனது சகோதரனுடன் ஒருநாள் எமது இருப்பிடத்துக்கு வந்தபோது மகனுக்கு மாப்பெட்டி கொடுத்து விட்டாங்கள் கிடைத்ததோ?'' என்று கேட்டான்.

இவர்கள் இறுதிவரை ஓடி கடைசி நேரம் ஒருவர் இறந்துவிட்டதாகவும் ஏனையோர் உயிர் பிழைத்து தடுப்பு முகாம்களில் இருப்பதாகவும் அறிந்தேன்.

சம்பவம் - 2, சம்பவம் - 3 இல் கிடைத்த மாப்பெட்டிகளில் இரண்டை எனது உறவினர்களின் குழந்தைகளுக்கு கொடுத்துவிட்டு எனது கணவர் குடித்து எஞ்சிய 5 மாப்பெட்டிகளை இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வரும்போது நான் பத்திரமாக கொண்டுவந்தேன்.

நலன்புரி நிலையம் வரும்போது நான் மிகவும் நோய் வாய்ப்பட்டு நடக்க முடியாத நிலையில் குழந்தைக்கு பால் சுரந்து கொடுக்க முடியாத நிலையில் இருந்தேன். வந்த மறுநாள் மேலதிக சிகிச்சைக்காக வெளியே வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டேன். நலன்புரி நிலையத்தில் எனது தாயாருடன் தங்கிய குழந்தைக்கு நீங்கள் தந்த மாப்பெட்டியே வெளியில் இருந்து வந்த நிறுவனங்கள் உதவி புரியும் வரை எமக்கு கை கொடுத்தது.

என் அன்பு சகோதரர்களே! இதை நீங்கள் வாசித்தால் நான் யாரென்று இனங்கண்டு கொள்வீர்கள். என் குழந்தையின் பசி தீர்த்த வள்ளல்கள் நீங்கள். உங்களை போன்றே எனது சகோதரனும் தடுப்பில் வாடுகிறான். நீங்கள் எல்லாம் விடுதலையாகி எம் ஊரில் எம்மை சந்திப்பீர்கள்தானே! அப்போது என் மகன் வளர்ந்திருப்பான். சொல்லுவது அவனுக்கு புரியும். உனக்கு பால் தந்த மாமாக்கள் இவர்கள் என்று உங்களை அடையாளம் காட்டுவேன்.

### சம்பவம் - 4

எமது கூடாரத்துக்கு அண்மையில் ஒன்றரை வயது சுட்டிக் குழந்தை ஒருத்தி இருந்தாள். விசுவமடுவில் விமானத் தாக்குதலில் அவளது தாய் இறந்துவிட தந்தை காணாமல் போய் விட்டார். அவள் 16 வயது சித்தியுடன் அம்மம்மா, அம்மப்பாவுடன் வசித்தாள். அவளுக்கு மாப்பெட்டி வாங்கும் பொருட்டு அவளின் வயதான அம்மம்மா, அம்மப்பா வைத்தியசாலையில் ஒருவர் மாறி ஒருவர் சென்று இரத்ததானம் கொடுத்து விட்டு

( 26 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் சிறிய கட்சிகளின் காலம் முடிகிறதா?

-எஸ். சுரேந்திரஜித்

ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு தமிழகத்தில் சிறு கட்சிகள் பலவும் பலமாக சுடர்விட்டுப்பிரகாசிக்கத் தொடங்கி இருந்தன. பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க, விடுதலை சிறுத்தைகள் என உதிரிக்கட்சிகள் பெரும் செல்வாக்குடன் விளங்கிய காலமாக 1991-2006 இருந்தது. இதற்கு முக்கிய காரணம், ராஜீவ் மரணத்தினால் காங்கிரஸ் கட்சி கடும் தேய்வை தமிழகத்தில் எதிர்கொண்டமையாகும். 1967இல் தமிழகத்தில் கடைசியாக ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அதன் பின்பு வந்த சட்டசபைத் தேர்தல்களில் தனித்து வென்று ஆட்சியை பிடிக்க முடியவில்லை. எனினும், லோக்சபா தேர்தலிகளில் 1991வரை காங்கிரஸ் கட்சி முக்கிய கட்சியாகவே இருந்து வந்தது. தமிழகத்தின் மொத்தமுள்ள 40 தொகுதிகளில் 28 தொகுதிகளை காங்கிரஸ் கட்சி வென்று வந்தது. 1980, 1984, 1989, 1991 என தொடர்ச்சியாக நான்கு தேர்தல்களில் அ.தி.மு.க அல்லது தி.மு.கவுடன் கூட்டணி வைக்கும்போது மொத்த 40 தொகுதிகளில் 28இல் காங்கிரஸ் கட்சி வெல்வதே வழக்கமாகும். அதாவது, தான் போட்டியிட்ட சகல 28 தொகுதிகளிலும் காங்கிரஸ் வென்றுவிடும். 1989 இல் வட இந்திய மாநிலங்களில் எல்லாம் காங்கிரஸ் கட்சி தோல்வியுற்றபோதும் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியும் ஜெயலலிதாவும் அமைத்த கூட்டணி வெற்றிபெற்றது. 1996இல் காங்கிரஸ் கட்சி தோற்று தமிழகத்தில் பூஜ்யமாகிப் போன வேளையிலும் காங்கிரஸின் வழித் தோன்றலான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. இன்று தமிழகத்தில் காங்கிரஸின் எம்.பிக்களின் எண்ணிக்கை 8ஆக குறைந்து விட்டாலும் அக்கட்சி தனது செல்வாக்கை மீள் நிலைநிறுத்தும் சாத்தியம் இருக்கவே செய்கிறது.


ராகுல் காந்தி


அன்புமணி

குறிப்பாக ராகுல்காந்தி மும்முரமாக தமிழகத்தில் இளைஞர் காங்கிரஸுக்கும், மாணவர் காங்கிரஸுக்கும் ஆள் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார். இளைஞர் காங்கிரஸுக்கு வெகு சுறுசுறுப்பாக தேர்தல் நடந்து கொண்டிருக்கும் போது கருணாநிதியே ஒருமுறை காரில் சென்று பார்த்து வியந்தாராம். இளைஞர் காங்கிரஸ் தேர்தல் முடிந்து தற்போது மாணவர் காங்கிரஸ் தேர்தலை வேறாக நடத்த ராகுல்காந்தி காய்நகர்த்தி வருகிறார். உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம், தமிழகம், பீஹார் என காங்கிரஸ் கட்சி நலிந்துபோயுள்ள மாநிலங்களில் கட்சிக்குப் புத்துயிரூட்டுவது என ராகுல்காந்தி வியூகம் வகுத்துள்ளமை தெளிவு. தமிழகத்தில் இவரது சுறுசுறுப்பில் காங்கிரஸ் கட்சி புதுப்பொலிவு பெற்றிருப்பதையும் மறக்கமுடியாது. ஆக காங்கிரஸ் மீண்டும் வளர வளர சிறியகட்சிகளுக்குத்தான் ஆபத்து காத்திருக்கிறது எனலாம்.

குறிப்பாக, பா.ம.க, ம.தி.மு.க, விடுதலை சிறுத்தைகள் தே.மு.தி.க போன்ற சிறிய கட்சிகளுக்கு சாண் ஏற முழம் சறுக்கிய கதையாகவே இது முடியக்கூடும். தமிழகத்தின் வட மாவட்டங்களில் வன்னியர் வாழும் பகுதிகளில் முன்பு காங்கிரஸ் கட்சிக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. பல மூத்த காங்கிரஸ் தலைவர்கள் வன்னியர்களாக இருந்ததே இதற்கு காரணம். காலஞ்சென்ற வாழப்பாடி ராமமூர்த்தி திண்டிவனம் ராமமூர்த்தி, ராமதாஸின் சம்பந்தியான கிருஷ்ணசாமி என பல வன்னியர் தலைவர்கள் காங்கிரஸ் ஜாம்பவான்களாக விளங்கினர். ஆனால், ராஜீவ் மரணத்தின் பின்பு பா.ம.க படிப்படியாக தலையெடுத்து காங்கிரஸ் செல்வாக்குள்ள பகுதிகளை அரசியல்ரீதியாக கபளீகரம் செய்யத் தொடங்கிய 1998இற்கு பிந்திய காலத்தில் காங்கிரஸுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. எனினும், 2001 சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் முன்னேற்றம் கண்டது. எண்பதுகளில் இந்திரா-ராஜீவ் இருந்தபோது இருந்த பழைய செல்வாக்குக்கு மீறமுடியாவிடினும் ஓரளவு தேர்தல் வெற்றி காங்கிரஸுக்கு கிடைத்துள்ளது. கடைசியாக நடந்துமுடிந்த 2009 லோக்சபா தேர்தலில்கூட பா.ம.கவானது காங்கிரஸுக்கு எதிரான அணியில் போட்டியிட்டு காங்கிரஸிடமும் தி.மு.கவிடமும் தனது தொகுதிகளை இழந்தது. அக்கட்சிக்கு எந்த தொகுதியிலும் வெற்றி கிட்டவில்லை. போதாக்குறைக்கு ராஜ்யசபாவில் அன்புமணியின் பதவிக்காலம் முடிந்து அவருக்கு மீள்பதவி வழங்க தி.மு.கவோ அ.தி.மு.கவோ முன்வரவில்லை. ம.தி.மு.கவுக்கு கூட லோக்சபாவில் ஓர் எம்.பி உள்ளார். பா.ம.க வுக்கு லோக்சபா, ராஜ்யசபா இரண்டிலும் எம்.பி கள் எவருமே இல்லை. நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அத்துடன் அமைச்சு பதவி இரண்டையும் தொலைத்துவிட்டு அரசியல் முகவரியிழந்த அபாக்கியவானாக இன்று பா.ம.க உள்ளது. தி.மு.கவை எதிர்க்கவும் முடியாது ஆதரிக்கவும் முடியாத இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைதான் அது. எப்படியாவது அன்புமணிக்கு பதவி பெறவேண்டுமென்ற அவாவில் பீஹாரில் லல்லு பிரசாத் யாதவின் கட்சியுடன் கூட்டுச்சேரவும் பா.ம.க தலைவர் முயன்று வருகிறார். சமீபத்தில் பா.ம.க.விழாவுக்கு சென்னையில் லல்லு பிரசாத் வருகை தந்திருந்தார். ராஜ்யசபாவுக்கு எம்.பிக்களை தெரிவு செய்யும்போது அந்தந்த மாநிலத்து கட்சி உறுப்பினர்களை மட்டுமன்றி வேற்று மாநிலத்தவரையும் எம்.பியாக தெரிவு செய்யலாம் என்ற ஓர் அரசமைப்புத் திருத்தம் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது கொண்டுவரப்பட்டது. உதாரணமாக தமிழகத்தவரான திருநாவுக்கரசு ராஜஸ்தான் மாநில ராஜ்யசபா எம்.பி கோட்டாவில் எம்.பியாக்கப்பட்டார். பி.ஜே.பி கட்சி சில மாநிலங்களில் மிக வலுவாகவும், வேறு சில மாநிலங்களில் பலவீனமாகவும் இருந்ததால் வலுவாக உள்ள மாநிலங்களின் ராஜ்யசபா எம்.பி.பதவி கோட்டாவில் கட்சி பலவீனமாக உள்ள மாநிலத்தவர்களுக்கு எம்.பி.பதவி வழங்க இது உதவியது. இதன்மூலம் பலவீனமாக இருந்த மாநிலங்களில் பி.ஜே.பி கட்சியை வளர்க்க முடிந்தது. காங்கிரஸ் இப்போது பதவிக்கு வந்ததும் இதில் மாற்றமேதும் செய்யாமல் தொடர்கிறது. அக்கட்சிக்கும் இதில் சில அனுகூலங்கள் உள்ளன. இவ்வாறு வாய்ப்பு இருப்பதால் பீஹாரில் லல்லுபிரசாத் யாதவின் கட்சிக்கு கிடைக்கக்கூடிய ராஜ்யசபா எம்.பி பதவிகளில் ஒன்றை அன்புமணிக்கு கேட்டுப்பார்க்கலாமே என்ற நப்பாசை டாக்டர் ராமதாஸுக்கு ஏற்பட்டுள்ளது. எம்.பியாகிவிட்டால் பிறகென்ன, சோனியா காந்தியிடம் பேசி அமைச்சராகலாம் என்பது அவரது திட்டமாகும். இதன்படியே சென்னையில் நடந்த பா.ம.க விழாவுக்கு லல்லு பிரசாத் யாதவ் அழைக்கப்பட்டார். ஊழல் மன்னன் எனப் பெயரெடுத்த லல்லுபிரசாத்தின் காலில் மண்டியிடும் அவலம் படித்த மருத்துவரான ராமதாஸுக்கு ஏற்பட்டிருப்பது வியப்புத்தான். பதவிக்காக தாறுமாறான அரசியல் குத்துவெட்டுகளும் குழிபறிப்புகளும் செய்பவர்களுக்குகிட்டும் முடிவுதான் இதுவென்றாலும் தொடர்ந்து வெல்லும் அணியிலேயே இருந்த ராமதாஸ் இவ்வாறு ஒட்டுமொத்தமாக வீழ்ச்சியடைந்தது அவரது திட்டங்களிலுள்ள ஓட்டையை வெளிச்சம்போட்டு காட்டுகிறது எனலாம்.

அண்மையில் நடந்த எதிர்க்கட்சிகளின் ஹர்த்தாலில் பா.ம.க பங்கேற்கவில்லை. காரணம், தி.மு.க அன்புமணிக்கு பதவிதரவில்லை என்ற ஆத்திரத்தில் தான் பா.ம.க ஹர்த்தாலில் பங்கெடுக்கிறது என தி.மு.க எள்ளிநகையாடலாம். மறுபுறம் ஹர்த்தாலுக்கு பா.ம.க ஆதரவு தரவில்லை என்பதால் கம்யூனிஸ்ட்களும் அ.தி.மு.கவும் பா.ம.க மீது கொதிப்பில் உள்ளன. அ.தி.மு.கவே முழு மூச்சாக ஹர்த்தாலில் இறங்கவில்லை என்பது வேறுகதை. தே.மு.தி.கவும் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து போராடவில்லை. பி.ஜே.பி நிற்கும் அணிக்கு போகக்கூடாது என தே.மு.தி.க இதற்கு நியாயம் கற்பிக்கலாம். எவ்வாறுயினும், ஆளும் தி.மு.க -காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக சகல எதிர்க் கட்சிகளும் ஓரணியில் திரளும் பொன்னான வாய்ப்பு கைநழுவிப் போனது கவலைக் குரிய விடயமே. இந்த எதிர்க்கட்சிகள் பிரிந்து நிற்பது கலைஞரைப் பொறுத்தது மிகவும் உவப்பான விடயமே. தே.மு. தி.கவும் பா.ம.கவும் சேராது, தே.மு.தி.க வும் பி.ஜே.பியும் இணையமுடியாது. கம்யூனிஸ்ட்டும் பி.ஜே.பியும் சேர வாய்ப்பில்லை. அ.தி.மு.கவும் பா.ம.க வும் ஒன்று சேரமுடியாது என இவ்வாறு எதிர்க் கட்சிகள் முட்டிமோதுவதால் கலைஞருக்கே ஆதாயமாகும்.

கடந்த வாரம் நடந்த ஹர்த்தாலில் பெற்றோல் விலை உயர்வை கண்டித்து நாடளாவிய ரீதியில் எதிர்க்கட்சிகள் பெரும்பாலானவை போராட்டம் நடத்தின.

தமிழகத்தில் ஆளும் தி.மு.க இதை குழப்புவதில் முனைந்துநின்றது. கடைசியில் களத்தில் இறங்கி போராடியவர்கள் ம.தி.மு.கவினரும், கம்யூனிஸ்ட்களும் பி.ஜே.பியினருமே. அ.தி.முகவினர் ஆங்காங்கு பெயருக்குப் போராட்டத்தில் கலந்து கொண்டாலும் முழுமூச்சாக ஈடுபட்டதைக் காண முடியவில்லை. ராகுல்காந்திக்கு கோபம் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணம் செல்விக்கு இருந்ததோ தெரியவில்லை. அத்துடன் பி.ஜே.பியினருடன் ஒரே மேடையில் ஏறக்கூடாது என்ற வக்கிரமும் அவரை தடுத்திருக்கக்கூடும்.


ஜெயலலிதா


லல்லு பிரசாத் யாதவ்

கம்யூனிஸ்ட்களும் பி.ஜே.பியினரும் எதிரும் புதிருமான தரப்பினராவர். இருந்தும் அத்தகைய கம்யூனிஸ்ட்கள் கூட கவலையின்றி ஒரே மேடையில் பி.ஜே.பியுடன் இணைந்து போராடும்போது சுத்தபிராமணரான செல்விக்கு மட்டும் பி.ஜே.பி தீண்டத்தகாத கட்சியாகிப் போனதோ என்ற கேள்வியும் கேட்கப்படலாம். ஜெயலலிதாவின் விசித்திர அரசியலில் இது மற்றொரு கூத்து என்று சொல்லமுடியும். காங்கிரஸூடன் கூட்டணி வாய்க்காதா என்ற ஏக்கம் இன்னும் அவரை விட்டுப்போன பாடில்லை என்கின்றனர் சில நோக்கர்கள்.

சட்டசபைத் தேர்தலுக்கு 10 மாதங்களே உள்ளநிலையில் இனியும் ராகுல் காந்திக்காக காத்திராது தனது பலமான கூட்டணியை நிறுவவேண்டும் என்பதே உண்மையான அ.தி.மு.க விசுவாசிகளின் எண்ணமாகும். தே.மு. தி.கவும் ஜெயலலிதா பக்கம் சாய்வதா, காங்கிரஸ் பக்கம் போவதா பழைய பல்லவிப்படி தனித்த.... என்ற தடுமாற்றத்திலேயே உள்ளது. எனவேதான் முக்கிய பொதுப் பிரச்சினையில் ஆளும் கட்சியை எதிர்த்து எதிர்க்கட்சியினருடன் இணைந்து போராட அவர்முன்வரவில்லை என்று கூறப்படுகிறது. *




# கட்டிப்பிடி... கட்டிப்பிடிடா...!

''ஏம்மா, அறிவு இருக்கா? உன் வயசு என்ன, என் வயசு என்ன... கட்டிப்பிடிக்கக் கூப்பிடுறியே?'' - இப்படி 50 வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர், 'சுதந்திரப் பிடி' (பிரீ ஹக்ஸ்) என எழுதப்பட்ட அட்டையோடு தன்னைக் கட்டிப்பிடிக்க நெருங்கிய பெண்ணைப் பார்த்துக் கூச்சல் போட்டார்.

இதென்ன கலாட்டா..?

'அரவணைப்பின் மகிமை தெரிந்தும், மனிதர்கள் தொட்டுக் கூடப் பேசாமல் எட்டி நின்று பேசுவதுதான் நாகரிகம் என்று நடந்துகொள்வதுதான் மன அழுத்தத்துக்குக் காரணம். எளியவர்களையும் அன்புக்காக ஏங்கி நிற்பவர்களையும் தட்டிக் கொடுங்கள்... அரவணைத்து அன்பைக் காட்டுங்கள்!' எனும் செய்தியைப் பரப்பி, 'வசூல் ராஜா' படத்தில் கமல் செய்த மாதிரி உலகம் எங்கும் ஜூலை 3 ஆம் நாளை 'அரவணைக்கும் தினம்' என்று கட்டிப்பிடித்துக் கொண்டாடி வருகின்றனர்.

கடந்த 3 ஆம் திகதி இந்தியாவில் சென்னையின் பல இடங்களில் 'பிரீ ஹக்ஸ்' என்ற பதாகையை ஏந்தி வந்த குழுவினர் எல்லோரையும் கட்டிப்பிடித்து அன்பைப் பரிமாறினர். பெசன்ட் நகர் பீச்சில், மிளகாய் பஜ்ஜிக் கடைச் சிறுவன்




தொடங்கி, பிச்சைக்கார மூதாட்டி வரை அன்புக்கும் அரவணைப்புக்கும் ஏங்கி நிற்கும் எளியவர்களை இவர்கள் கட்டிப்பிடித்து அன்பு காட்ட... 'ஆமாம், இது அவசியம்தான்!' என்று உணர்ந்து, 'கட்டிப்பிடி குழு' அருகில் சென்று சிலர் தாங்களாகவே ஆரத் தழுவினர்.

இந்தக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்த கார்த்திக் தெரிவிக்கையில், ''ஜூவான் மான் என்பவர் ஆஸ்திரேலியாவில் கிளம்பி லண்டன் விமான நிலையத்தில் இறங்கினார். தன்னுடன் வந்தவர்களை நண்பர்களும் குடும்பத்தினரும் ஆரத் தழுவி வரவேற்றதைக் கண்டவருக்குத் தன்னை வரவேற்க எவருமே வரவில்லையே என்கிற ஏக்கம் எழுந்தது. அதனால் உடனே 'அரவணைப்பு இலவசம்' என்ற அர்த்தத்தில் 'ப்ரீ ஹக்ஸ்' என்று ஒரு பதாகையில் எழுதி, அதைத் தூக்கிப் பிடித்தவாறு, இரண்டரை மணி நேரம் விமான நிலையத்திலேயே நின்றார். ஒருவர் கூட சட்டை செய்யவில்லை. கடைசியாக, 60 வயது மூதாட்டி ஜூவானைக் கட்டிப்பிடித்து அன்பைப் பொழிய... அன்று முதல் இந்தக் கட்டிப்பிடி வைத்தியத்தின் கர்த்தாவாகவும் பிரசாரகராகவும் மாறினார் ஜூவான் மான்.

மும்பையில் இப்படி ஒரு சிறுவன் பதாகையோடு அன்பையும் அரவணைப்பையும் வாரி வழங்கியதைக் கண்ட ஏ.ஆர்.ரஹ்மான், சில மாதங்களுக்கு முன்பு 'மனசோடு மனசு' என்ற அர்த்தத்தில் 'ஜியா சே ஜியா' என்று ஓர் இசை ஆல்பத்தையே உருவாக்கினார். அதில் தானே தோன்றி இந்த இயக்கத்தையும் பிரபலப்படுத்தினார்.

எதையும் காரண காரியம் இல்லாமல் செய்தால், நம் ஊர்க்காரர்கள் ஏற்றுக்கொள்வது கஷ்டம் என்பதால், 'எய்ட்ஸ் கட்டிப்பிடிப்பதால் பரவாது. அவர்களை ஒதுக்காதீர்கள்' என்ற செய்தியைப் பரப்பக் கிடைத்த சந்தர்ப்பமாகவும் இந்த சர்வதேச 'ஹக்ஸ் ப்ரீ தினத்தைப் பயன்படுத்திக்கொண்டோம்!'' என்றார். நல்ல விஷயம்!



உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளை ரசிக்கப் போன பாரீஸ் ஹில்டனைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது தென் ஆபிரிக்க போலீஸ். பாரீஸ் ஹில்டனின் பைக்குள் மரிஜுவானா என்கிற போதைப் பொருள் இருந்தது தான் இந்தக் கைதுக்குக் காரணமாம். மைதானத்தில் இருந்து தனது தோழியுடன் இவர் இப்போதைப் பொருளைப் பாவித்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

## பாரீஸ் ஹில்டன் கைது



1990களில் இருந்த தனது பழைய ஹேர்ஸ்டைலையே கொஞ்சம் மாடர்னாக மாற்றி புது ஸ்டைலுடன் களம் இறங்கியிருக்கிறார் சச்சின். விம்பிள்டன் போட்டிக்குச் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு இருந்த சச்சின், இந்தப் புதிய-பழைய ஹேர்ஸ்டைலுடன் மைதானத்துக்குள் வர... ரசிகர்களிடம் நல்ல மரியாதை கிடைத்ததாம்.

## சச்சினின் புதிய ஸ்டைல்



மல்லிகா ஷெராவத் என்றாலே காஸ்ட்லி என்று அர்த்தம். சமீபத்தில் தங்க நகைக் கடை நிறுவனம் ஒன்று, தங்கள் விளம்பரத்தில் நடிப்பதற்காக ஷெராவத்தை அணுகியது. 90 செகண்ட் விளம்பரத்துக்கு மல்லிகா கேட்ட தொகை... ஜஸ்ட் 10 கோடி ரூபாய்..

## மல்லிகா.. மல்லிகா...மல்லிகா!

# கடற்கன்னியைப் பார்த்தீர்களா?

உலக வரலாற்றில் முதன் முதலான கடற்கன்னியின் உண்மை நிழற்படங்கள் வெளியாகி உள்ளன.

அபுதாபியிலுள்ள முத்துத்தீவில் இறந்த நிலையில் ஒரு கடற்கன்னி சடுதியாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளது.



மிக நீண்ட நாட்களுக்கு முன்னரே இக்கடற்கன்னிகள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

கலைஞர்கள் கற்பனையில் வர்ணித்த கடற்கன்னிக்கு எதிர்மாறாகவே இவற்றின் உருவங்கள் காணப்படுகின்றன.

இதனால், பீதியடைந்து அந்தத் தீவில் இருந்த உல்லாசப் பிரயாணிகள் அதிர்ச்சிக்குள்ளானதோடு, அத்தீவை விட்டும் உடனடியாக வெளியேறியுள்ளனர். இங்கு இன்னும் மர்மம் நிலவுகிறது. சுற்றுலாக் கம்பனிகள் கூட அதிர்ச்சிக்குள்ளாகி, கவலை வெளியிட்டுள்ளன.



# நம்பிக்கை

கார் பழுதடைந்திருந்ததால், ஆட்டோவில் பயணித்தாள் சாவித்திரி. ''இதுவரை எத்தனை கர்ப்பிணிப் பெண்களை இலவசமாக பிரசவத்திற்கு அழைத்துப் போயிருக்கிறாய்?'' ஆட்டோ சாரதி கோவிந்தனிடம் ஆவலோடு கேட்டாள்.


''குறைஞ்சது இருபது பேராவது இருக்கும்மா.''

''உன்னோட மனைவி இந்த ஆட்டோவில் ஏறியிருக்காங்களா?''

''தினமும் ஒரு ரவுண்ட் வருவாள். கர்ப்பிணிப் பெண்கள் அமர்ந்த ஆட்டோவில் உட்கார்ந்தாலாவது ஒரு குழந்தை பிறக்காதா என்ற ஆதங்கம்தான் அதுக்குக் காரணம்'' கோவிந்தனின் பதிலில் நம்பிக்கையும் ஏமாற்றமும் கலந்திருந்தது.

அந்தப் பிரசவ ஆஸ்பத்திரியின் முன் ஆட்டோவை நிறுத்தச் சொல்லி தன் விஸிட்டிங் கார்டை அவனிடம் கொடுத்தாள்.

''நீ செய்றது பெரிய தொண்டு. உன் மனைவியின் நம்பிக்கை வீண் போகாமலிருக்க, நீயும் அவளும் ஆஸ்பத்திரியில் என்னை வந்து பாருங்கள். தேவையான வைத்தியங்களை இலவசமாகச் செய்து, உங்கள் மடியில் ஒரு குழந்தையைத் தவழ வைக்கவேண்டியது என் பொறுப்பு'' என்று சொல்லிய பிரபல குழந்தை பிறப்பு நிபுணரான டாக்டர் சாவித்திரி, கோவிந்தனுக்கு கடவுளாக்த் தெரிந்தாள்.





சிறுகதை

# நட்பின் தடங்கள்

-மருதோடை நிலா-

வந்திய தேவன் வானமகளிடம் இருந்து, விடைபெறும் வேளை அது. மேகக் குழந்தைகளால் ஆடை பூண்டிருந்த வானமகளில், காரிருள் சூழ்ந்து கொள்ளவும், அந்த பேருந்தில் இருந்து வைஸ்ணவி இறங்கவும் சரியாக இருந்தது. மழை பெய்யப்போவதை உணர்ந்த வைஸ்ணவி, 'சே சே என்ன இது இந்த நேரத்தில மழை வேற, அம்சவி பார்த்துக்கொண்டு இருக்கப் போறாள்' என தனக்குள் முணுமுணுத்துக் கொண்டவள், மழைத்தூறல் அதிகரிக்கவே, எதிரே இருந்த பாழடைந்த குடிசையினுள் ஒதுங்கிக் கொண்டாள்.

தனியே ஒதுங்கியவள் மழைத்தூறலை வெறித்துக் கொண்டிருக்க, எதிரே பறந்து வந்த பேப்பர் ஒன்று, வைஸ்ணவியின் முகத்தில் ஒற்றிக் கொண்டது. அதனை எடுத்துத்திருப்ப "என் விழி விளிம்பில் எட்டிப் பார்க்கும் கண்ணீர் துளிகளை முத்துக்களாகக் கோர்த்து உதிர்ந்து போன நட்புக்கு மாலையாக" - தோழி வர்ஷி என்றிருந்த வரிகள் வைஸ்ணவியின் மனதை நெருடியது. ஆவல் மேலிட பேப்பர் பறந்து வந்த திசையை நோக்கி இவளின் விழிகள் அளாவினது.

செல் அரித்த நிலையில் ஒரு டைரி. ஏதேதோ எண்ணங்கள் இதயத்தை ஆக்கிரமிக்க, அடுத்த பக்கங்களைப் புரட்டினாள். புன்னகை சிந்தும் இரு பெண்களின் நிழற்படங்கள் டைரியை அலங்கரித்திருந்தன. அடுத்து அவர்களைப் பற்றிய நினைவுப் பூக்கள் மலர்ந்திருந்தன. அந்த எழில் மிகு சிற்றூரில் அருகருகே அமைந்திருக்கும் இரு வீடுகள். அதில்தான் இந்த நட்பிதயங்களும். தனா என செல்லமாய் அழைக்கப்படும் வந்தனாவும், வர்ஷி என செல்லமாய் அழைக்கப்படும் மேகவர்ஷியும்.

அங்கு அடர்ந்து வளர்ந்துள்ள மரங்களைக் கேட்டால் இவர்களின் நட்பின் கதை சொல்லும். அடையாளச்சின்னமாய் இருவரது பெயர்களும் பொறிக்கப்பட்டிருக்கும். விட்டுக்கொடுப்பு இருவரிடமும் கொட்டிக்கிடக்கும். செல்லச் சண்டைகள், சின்ன ஊடல்கள் எல்லாம் சில நொடிகள்தான். இவ்வாறுதான் இவர்களின் இனிமையான நட்பின் யாத்திரை நகர்ந்து கொண்டிருந்தது. அவற்றை விட ஓயாமல் ஒலித்துக்கொண்டிருக்கும் வானொலி சூரியன் எப். எம். இல் "கடவுள் தந்த அழகிய வாழ்வு" என்ற சரணின் காந்தக்குரல் உச்சஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருந்தது. சற்று முன் கலகலப்பாய் பேசிக் கொண்டிருந்த இரு இளங் குரல்கள், சட்டென மௌனித்துப் பாடலை ரசித்துக்கொண்டிருந்தன. பாடல் முடியவும், "சரி தானம்மா உன்னோட பேவரிட் சோங் கேட்டாச்சு, இனி பேசலாமா" என்ற வர்ஷி, அன்றைய நாளின் இனிமைகளை வந்தனாவிடம் ஒப்புவிக்க, இவளும் தன் பங்கை சிறப்பாக்கினாள்.

இவ்வாறு காலவோட்டத்தில் நாட்களும் கரைந்தன. அன்று மார்ச் - 20 வந்தனா பூமியில் அவதரித்த நாள். தன் ஸ்நேகிதியின் பிறந்த நாளில் என்ன கொடுக்கலாம் என எண்ணியவள், நெடிய சிந்தனையுடன் 'எழில் ஜூவெல்லரிக்குள்' நுழைந்து தனதும் வந்தனாவினதும் பெயர்கள் பொறிக்கப்பட்ட அழகிய மோதிரம் ஒன்றைத் தெரிவுசெய்தவள், அவளுக்கு அதிகம் பிடித்த பூனைக்குட்டி பொம்மை ஒன்றையும் வாங்கிக்கொண்டு விரைந்தாள்.

வந்தனாவின் வீட்டை அண்மித்தவள், "தனா வீட்டில நிறைய ஆட்களா இருக்குது. ஓ இண்டைக்கு பேர்த்டே பார்ட்டி தானே அதுதான்" என எண்ணிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தாள். வர்ஷியின் சப்த நாடிகளும் ஒடுங்கிப் போயிற்று. "ஐயோ த...த...னாம்...மா எ...என் த...தனா..." இதற்கு மேல் வர்ஷி எதுவுமே எழுதவில்லை. இனி வர்ஷி??? வினாக்குறியுடன் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கு அடுத்த பக்கங்களை புரட்டிய வைஸ்ணவிக்கு தோல்வியே கிடைத்தது.

"சே எவ்வளவு சுவாரஸியமான நட்பு. தனாவிற்கு என்ன நடந்திருக்கும்? இப்போ வர்ஷி எங்க இருப்பாங்க? க்ளைமாக்ஸில போய் சொதப்பிடுச்சே" தன்னையே நொந்து கொண்ட வைஸ்ணவி, மழை குறையவும் தன் கையிலிருந்த டைரியை இறுகப்பற்றியவாறு, தன் ஒன்று விட்ட சகோதரி அம்சவியின் வீடு நோக்கிப் பயணித்தாள். அங்கே உறவுகளுடன் நல விசாரிப்பில் அன்றைய நாள் இனிமையாகக் கழிந்தது. அடுத்த நாள் அம்சவியின் சகோதரியின் 1ஆம் ஆண்டு திவசம். அதற்காகவே வந்திருந்தாள். டைரியில் மூழ்கியிருந்தவளை அம்சவியின் அழைப்பு கலைத்தது. அம்சவிக்கு டைரி பற்றிய விடயங்களைக்கூற "வைஸ்ணாக்கா நல்ல நட்புக்கு என்ன நடந்திருக்கும். நீ ரெஸ்ட் எடு. நாளைக்கு திவசம் மயானத்துக்குப் போறம். ரிலாக்ஸா இருந்து யோசிப்போம்" இது அம்சவி. இவ்வாறு அன்றைய நாளும் விரைய, அடுத்த நாள் மயானத்திற்குச் சென்றார்கள். சகோதரிக்கான கடமைகளை நிறைவேற்றிவிட்டுத் திரும்புகையில், எதிரே ஒரு கல்லறை 'வந்தனா' என்ற பெயரைத் தாங்கி நின்றது.

இதைக் கண்ணுற்ற அம்சவி "வைஸ்ணாக்கா இன்னைக்கு மார்ச் 20 தானே" எனவும் தலையசைத்த சகோதரியிடம் "வந்தனா பேர்த்டே இன்னைக்குத்தானே அக்கா. ஒருவேளை அந்த வந்தனா செத்திருப்பாங்களோ" என்ற தங்கையை "அம்மு உ...உனக்கு..." வாக்கியத்தை நிறுத்தாமலே எதிர்ப்பக்கம் பார்த்தாள். 'வந்தனா' பெயரைத் தாங்கிய கல்லறையை ஒரு பெண் அணைத்துக் கொண்டிருந்தாள். அருகில் அவள் கணவனும் பெண் குழந்தையும் மௌனமாக நின்றனர். அவர்களை இவர்கள் இருவரும் நெருங்கவும்' "வர்ஷி ப்ளீஸ் அழாதேங்க" என அவள் கணவன் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தான்.

அந்த நட்புள்ளங்கள் இவர்கள்தான் என உறுதிப்படுத்திக் கொண்ட வைஸ்ணவி, தன் ஹேண்ட் பேக்கில் இருந்த டைரியை நீட்டவும் "ஓ மை கோட் இ... இது உ...உங்களுக்கு எ...எப்படி", என்ற வண்ணம் அதிர்ச்சியடைந்த வர்ஷியிடம் நடந்த சம்பவங்களைத் தொகுத்துக் கூறினாள். "வர்ஷி வாங்க வீட்ட போய் பேசலாம். சிஸ்ரஸ் பக்கத்தில தான் எங்க வீடு' வாங்க" என்ற வர்ஷியின் கணவனைப் பின் தொடர்ந்தனர். அங்கு "வந்தனா இலவச மருந்தகம்" என்ற பெயரைத் தாங்கிய வண்ணம் மிகப்பெரிய மருத்துவமனை இருந்தது.

Dr.மேகவர்ஷி (M.B.B.S)

என்றிருந்ததைக் கண்ட பின்பே, மேகவர்ஷி ஓர் மருத்துவர் என்ற விடயம் புரிந்தது. உள்ளே வந்தனாவின் புகைப்படங்களும், அவளைப்பற்றிய கவி வரிகளும் கண்ணீர்க் கதறலாய் விரிந்திருந்தன. பின்பு டைரியின் மிகுதியைத் தொடர்ந்தாள் மேகவர்ஷி. பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லச் சென்ற மேகவர்ஷியை வந்தனாவின் மரணச் செய்தி வரவேற்றது. எதிர்பாராத வந்தனாவின் விண்ணுலகப் பயணம் மேகவர்ஷிக்குப் பேரிடியாக விழ சிலையாகிப் போனாள். அப்போது தான் வந்தனாவின் கைக்குள் ஒரு மடல், பெற்று விரித்தாள் மேகவர்ஷி.

"என் இனிய நட்பே வர்ஷி"

நான் இன்னும் சில நாட்களில் உன்னை விட்டு நிரந்தரமாகப் பிரியப் போகிறேன். இதை உன் இதயம் தாங்காது. என் கண்ணில் சிறு தூசு விழுந்தால்கூட காற்றோடு சண்டை போடுவாய் என்னம்மா செய்வது? என் மரணத்தை இலகுவாக ஏற்றுக்கொள்ள, நீயொன்றும் கீதா உபதேசம் செய்த கிருஸ்ண பரமாத்மா இல்லை. என்னில் உயிரையே வைத்திருக்கும் தோழி என்பது எனக்குத் தெரியும்மா. ஒரு மாதத்திற்கு முன்பு தான் எனக்கு இரத்தப்புற்றுநோய் இருக்கும் விடயம் தெரியவந்தது. சின்ன விடயத்தைக்கூட உன்னுடன் பகிர்ந்துகொள்ளும் நான் எப்படித் துடித்துப் போனேன் தெரியுமா?

உடைந்து போகாதே வர்ஷிம்மா. நீ அழுதால் எனக்குப் பிடிக்காதில்லையா? என் இறுதி ஆசை இதுதான், நீ யுனிவர்சிற்றி எண்டர் பண்ணி Dr.மேகவர்ஷி (M.B.B.S) ஆக என் கல்லறைக்கு வரவேண்டும். வாழ வேண்டிய வயதில் சாவை அணைத்துக்கொள்ளும் இளைஞர், யுவதி, குழந்தைகளுக்கும் புற்றுநோய் தங்களுக்கு இருப்பதை அறியாமலே கருகிக் கொண்டிருக்கும் ஜீவன்களுக்கும் இலவசமாய் மருத்துவம் செய்யவேண்டும். இந்த மடல் உன் கைகளுக்கு கிடைக்கும் போது நான் இறந்திருக்கலாம். உன் தனாவுக்குப் பிரியமான ஒற்றை வெள்ளை ரோஜாவோடு என்னிடம் வந்து, என் கல்லறைக் காதுகளுக்கு என் கனவுகளை நனவாக்கியதாய் கூறுவாய் என்ற நம்பிக்கையில் இறுதி யாத்திரையில் இருந்து விடைபெறும் உன் ஸ்நேகிதி.

ஆயிரம் முத்தங்களுடன்

-வந்தனா-

கேட்டுக்கொண்டிருந்த வைஸ்ணவியும், அம்சவியும் நீர்த்திரையிட்ட கண்களைத் துடைத்து விட்டு மேகவர்ஷியை நோக்க, தன் தோழியின் நினைவால் அவள் பெயரையே வைத்திருந்த தன் செல்ல மகள் வந்தனாவை இறுக அணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். அப்போது குட்டி வந்தனா. "மம்மி" அழாதே மம்மி உன் தனா குட்டி சொல்லுறான். நீ அழுதா நான் அழுவன். எங்களைப் பார்த்து டாடீ அழுவார். பிறகு இந்த அன்ரிமாரும் அழுவாங்க. எம்மா எல்லாரும் அழுதா அழகாவா இருக்கும் உன் பிரண்டு வந்தனா அன்ரிக்கு அழுதா பிடிக்காதில்ல" என மழலை பொழிந்த 'குட்டி' மெதுவாக நகர்ந்து வானொலியைத் திருப்ப அதில் தனாவிற்குப் பிடித்த "கடவுள் தந்த அழகிய வாழ்வு உலகம் முழுதும் அவனது வீடு" பாடல் காற்றலையில் கரைந்தது இவர்களின் உள்ளங்களும் கரைந்தன.

*

# பதிவாளர் அலுவலகங்களுக்கு

பிறப்பு, இறப்பு, விவாகம் போன்ற பதிவுகளுக்காக, பதிவுசெய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக பதிவாளர் அலுவலகங்களுக்கு விண்ணப்பங்களைக் கொடுப்பது வழக்கம். இது, பதிவாளர்கள் கவனிக்க வேண்டியவை தொடர்பான விண்ணப்பமாகும்.

வன்னியிலுள்ள மாவட்ட மேலதிக பதிவாளர் பணிமனைகளில் மக்கள் படுகின்ற பாடுகள்தான் இந்த விண்ணப்பத்தை எழுதத் தூண்டின. அந்தப்பாடுகள் இதோ.

2007ஆம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு



# மேலும் ஒரு விண்ணப்பம்

மாவட்டங்களில் விவாகப்பதிவு நெருக்கடிக்குள்ளாகியது. இதைப்போல, வவுனியா வடக்கு, மன்னார் கிழக்குப் பிரதேச மக்களின் விவாகப்பதிவுகளும் இடைஞ்சல்களைச் சந்தித்தன.

குறிப்பாக, இக்காலப்பகுதியில் தம்மிடம் அனுமதிபெற்றே விவாகப் பதிவுகளைச் செய்யவேண்டும் என்று விடுதலைப் புலிகள் விதித்த சட்டம் இந்த விவாகப்பதிவுகளை இடைஞ்சலாக்கியது. ஆனால், பிறப்பு, இறப்புப் பதிவுகளைப் பொறுத்தவரை 2008 ஜூன், ஜூலை மாதம் வரையிலும் பிரச்சினை ஏற்படும் நிலையில் இருக்கவில்லை. ஆனால், இவைகூட இப்போது பிரச்சினையாகவே இருக்கின்றன.

இந்த பதிவுகள் ஒழுங்காக இல்லாத காரணத்தினால் உதவிகளைப் பெறமுடியாமல் சனங்கள் சிரமப்படுகின்றனர். பதிவுகள் சரியாக இல்லாத காரணத்தினால், நிவாரண உதவிகள், மேலதிக அலுவலக நடவடிக்கைகள், வங்கிச்செயற்பாடுகள் எல்லாவற்றையும் செய்ய முடியாதிருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

ஆனால், மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, அவர்களுக்கு உதவுவதற்காக தாம் கடுமையாகப் பாடுபடுவதாக மேலதிகப் பதிவாளர் அலுவலகங்கள் சொல்கின்றன. இந்தப் பணிமனைகள் இப்படிச் சொன்னாலும் சனங்கள் இங்கெல்லாம் அலைவதும், இந்தப் பணிமனை வாசல்களில் குவிந்திருப்பதும் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டென்பதையே காட்டுகின்றன.

விடுதலைப்புலிகள் விதித்த விவாகப்பதிவுத்தடையை மீறி ஆயிரக்கணக்கானவர்கள் திருமணம் செய்துகொண்டனர். இவர்களில் 50வீதமானவர்கள் திருமணத்திற்குரிய வயதை எட்டமுன்னரே விவாகம் செய்துகொண்டவர்கள்.

இவர்களுக்கு குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அதேவேளை சிலருடைய குழந்தைகள் இறந்திருக்கின்றன, சிலருடைய கணவர்மார் இறந்திருக்கிறார்கள், சிலருடைய மனைவிமார் இறந்திருக்கிறார்கள், சிலர் குடும்பமாகவே இறந்துள்ளனர். ஆனால், திருமணப்பதிவு இருந்தால்தான் எத்தகைய நிவாரணத்தையோ, உதவியையோ, நட்டஈட்டையோ பெறமுடியும். அதற்குத் திருமணப்பதிவு இல்லை. எனவே இவர்கள் சட்டரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும், பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவாளர் செயலகத்தின் அசமந்தப் போக்கினால், 2007 நவம்பர் மாதத்துக்குப் பின்னர் இந்த மாவட்டத்தின் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகள் சரிபார்க்கப்பட்டு கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், அந்தக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகள் எல்லாம் மீண்டும் காலம் பிந்திய பதிவுகள் என்ற அடிப்படையில் பதியப்படவேண்டியுள்ளன. இவ்வாறு காலம் பிந்திய பதிவுகளை மேற்கொள்வதில் பல பிரச்சினைகள் உண்டு. முக்கியமாக, காலம் பிந்திய பதிவுகளுக்கான உறுதிப்படுத்தல் சான்றுகள் பலவற்றை சம்பந்தப்பட்ட பொதுமக்கள் பெறவேண்டும். அப்படியான உறுதிப்படுத்தச் சான்றுகளைப் பெறுவதென்பது இலகுவான காரியமல்ல. இந்தச் சான்றுகளைப் பெறுவதற்காக சனங்கள் அங்குமிங்குமாக அலைகின்றனர். ஏற்கனவே பலவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இப்போது இப்படி அலையவேண்டியுமிருக்கிறது.

2007ஆம் ஆண்டு நவம்பரில் இருந்து 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலும் சுமுகமான நிலைநிலவியது. அலுவலகங்கள் கிளிநொச்சியில் இயங்கியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதே நிலைதான் ஏறக்குறைய ஏனைய வன்னிமாவட்டங்களிலும்.

-ஜோசப் தயாளன்

காலம் பிந்திய பதிவுகள் நிவாரண உதவிகளைப் பெறுவதிலும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் நடைமுறைரீதியான பிரச்சினைகளை உருவாக்கியிருப்பதால், என்ன செய்வது என்று தெரியாத நிலையில் பலரும் இருக்கின்றனர். குறிப்பாக வன்னியில் உள்ள மக்களில் 40 வீதமானவர்கள் இத்தகைய நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இதற்கு மேலதிக மாவட்டப்பதிவாளர் தரத்திலான அதிகாரிகள் இல்லாமை ஒரு குறைபாடு என சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். போர்க்காலத்தில் ஆவணங்களை இழந்தோருக்கும், பதிவுகளை மேற்கொள்ள முடியாதோருக்கும் ஒரு சிறப்பு வழிமுறையின் மூலம் பதிவுகளைச் செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்யாமையே அடிப்படைப் பிரச்சினை என்கின்றனர் வேறு சிலர்.

பொதுவாகச் செயற்றிறன் குறைந்த நடவடிக்கைகளே பதிவுத்தாமதங்களுக்கும் பதிவுகளிலுள்ள குழப்பங்களுக்கும் காரணம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மை.

தொண்டர் அமைப்புகள் தொடக்கம் அரச திணைக்களங்கள் வரையில் பதிவுகளை முக்கியத்துவப்படுத்துகின்றன. அப்படியாயின் இடைக்கால ஏற்பாடாகவோ,மாற்று ஏற்பாடாகவோ பதிவுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் வழங்கப்படவேண்டும்.

பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த மாற்று அமைவுகள் செய்யப்படுதல் அவசியம். இதேவேளை, இந்தப்பதிவுகளை விரைவாகச் செய்வதற்காக சனங்களில் சிலர் லஞ்சம் கொடுக்கவும் முற்படுகின்றனர். *

## விற்பனைக்கு

கொழும்பு 12 புதுக்கடை தொடர்மாடியில் கீழ் தளத்தில் உள்ள வீடு விற்பனைக்குண்டு. மற்றும் கொழும்பு மெயின் வீதியில் கடை ஒன்றும், விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு

0712044577

## அவலங்களைப் பகிர்ந்து கொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர் கொண்டு இப்போது அகதி முகாம்களில் வாடும் எமது உறவுகள், தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி '.

எழுதுங்கள்!

உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

'உயிர் வலிக்கும் கணங்கள்'

சுடர்ஒளி வாரமலர்,

இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு - 14.

# உலகில் எவரும் தனித்து விடப்பட்டவரல்லர். தனிமனிதர் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகும்!

ஒவ்வொருவருக்கும் பொதுப் பிரச்சினைகளில் ஏதேனும் ஒரு வகையில் ஒரு தொடர்பு ஏற்படுகின்றது. ஒரு கடமை பிறக்கின்றது. குடிமக்களில் யாரும் எந்த விடயத்திலும் அக்கறையற்றவர்களாக இருந்திட முடியாது.

ஒருவரையொருவர் கலந்தாலோசித்து செயல்பட்டிட வேண்டும் என்ற கொள்கை எந்தளவுக்கு முக்கியமானதென்றால், கருத்துக்களையும்

-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-

ஆலோசனைகளையும் வழங்கிட வேண்டும் என்பவற்றோடு அல்லாமல், அவற்றையும் பொதுமக்களின் நலனுக்காகச் செயல்படுத்திட ஒவ்வொருவரும் தீவிரமாக உழைத்திடவும் வேண்டும்.

அரசியல் கருத்துக்களைப் பரிமாறி, ஆலோசனைகளை வழங்கி செயல்பட்டிடும் முறை ஒரு ஜனநாயக விதி என்பது மட்டுமல்ல, ஆள்பவர்களும் ஆளப்படுபவர்களும் பின்பற்றிட வேண்டிய ஒழுக்க நியதியாகும்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நல்ல ஆலோசனைகள் வழங்கிட முன்வரவேண்டும். நல்ல ஆலோசனை வழங்குவதன் நோக்கம் சீரிய வழிமுறையில் ஒவ்வொருவரும் வாழ்ந்திட வேண்டும் என்பதேயாகும். இதனால் மக்களின் உரிமைகள் மதிக்கப்படுவதோடு அவரவர் கடமைகளும் செவ்வனே நிறைவேற வழிவகை ஏற்படும்.

ஆலோசனைகள் தூய்மையான எண்ணங்களோடும் பொதுமக்களின் நல்னையே குறிக்கோளாகக் கொண்டதாகவும் இருந்திடவேண்டும்.




தனி மனிதர் ஒருவர் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு பகுதியாவார். உலகில் எவரும் தனித்து விடப்பட்டவரல்லர். அத்துடன் ஒவ்வொரு தனி மனிதரும் தான் வாழும் சமுதாயத்தின் ஒரு அங்கமாவார். தான் வாழும் நாட்டின் பயனுள்ள குடிமகனாகவும் ஒருவர் இருக்க முடியும்.

ஆகவே, ஒருவர் தனது உரிமைகளை அடுத்தவர்களோடு பொருந்திப் போகின்ற வகையிலேயும், அடுத்தவர்களுக்கு நன்மை பயக்கின்ற விதத்திலேயும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் தனி மனிதர் தன் விருப்பப்படி ஒரு முடிவினை எடுத்திடும்போது பெரும்பான்மையான மக்கள் வேறொரு முடிவினை எடுத்திட்டால் தனிமனிதரும் பெரும்பான்மையோருடன் ஒத்துப் போவதே சிறப்பாகும். ஆனால், பெரும்பான்மையினரின் முடிவு அநீதியானதாக இருக்கக்கூடாது.

எனினும், பொதுமக்களின் கருத்தைத் தயார் செய்வதில் தனிநபர் ஒருவர் தனது கருத்தின் உண்மையை எடுத்துச் சொல்லி, மக்களை ஏற்றிடச் செய்யும் உரிமை பெற்றவர். ஆனால், அவர் இதில் குழப்பங்களை ஏற்படுத்திடவோ அவதூறுகளைப் பரப்பிடவோ கூடாது.

பெரும்பான்மையோர் வேறொரு முடிவைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பது தெளிவான பிறகு, அவரும் தனது முடிவைத் திருத்திக்கொள்வதே நலம். ஏனெனில் பொதுப் பிரச்சினைகளின் முடிவுகள் தனி மனிதனோடு மட்டும் சம்பந்தப்பட்டவையன்று. அவை அனைத்து மக்களையும் தழுவியது. ✱

அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள்,
சந்தேகங்கள் தொடர்பான
கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்
உளநல ஆலோசகர்
**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
**" A.H.A. HUSSEIN**
**KAYAR ROAD,**
**ERAVUR .**
abdulhussein525@gmail.com

# என் நண்பி சுயநலவாதியா? சந்தர்ப்பவாதியா?

கேள்வி :
நான் 19 வயதுடைய உயர்தரம் படிக்கும் மாணவன். அக்கா, தங்கைகள், அப்பா, அம்மா என ஒரு சிறிய குடும்பம். அப்பா கடின உழைப்பாளி, நேர்மையானவர். கல்விதான் எமது சொத்து. என் பிரச்சினை என்னவென்றால், நான் உயர்தரம் படிக்கும் போது சக மாணவியொருவர் என்னிடம் வந்து கதைப்பார். நான் விரும்பாதபோது கூட அவர் என்னை அணுகிக் கதைப்பார். இது பற்றி நான் எவ்வளவு எடுத்துக் கூறியும் அந்த நண்பி கணக்கெடுக்கவில்லை. எந்தக் கண்ணோட்டத்திலும் நான் அவளை நோக்கவில்லை.

இப்பொழுது அவளும் நானும் விஞ்ஞானப்பிரிவில் படிக்கிறோம். இப்போது என் மனம் அவளை நாடுகிறது. ஆனால், அவள் என்னை இப்பொழுது ஏறெடுத்தும் பார்ப்பதில்லை, பதிலாக வேறொரு மாணவனுடன் நட்பு வைத்திருக்கிறாள். அவளுக்கு நான் எந்தத் தீங்கும் செய்யவில்லை. அப்படியிருக்க, அவள் ஏன் என்னை வெறுக்க வேண்டும்?

எப்படியிருந்தாலும், என்னால் அவளை மறக்க முடியவில்லை. எப்படியாவது கதைக்க வேண்டும் போல் உள்ளது. இப்பொழுது பரீட்சையும் நெருங்குவதால் மனதை ஒருநிலைப்படுத்திப் படிக்க முடியவில்லை. குழம்பிப் போய் இருக்கிறேன். தக்க பதிலைத் தாருங்கள்.

பதில் :
உங்கள் சக மாணவி சுயநலவாதியா, சந்தர்ப்பவாதியா என்றும் உங்களது கேள்வியில் வினவியிருந்தீர்கள்.

அந்த மாணவி சந்தர்ப்பவாதியோ சுயநலவாதியோ அல்ல என்றே நினைக்கத் தோன்றுகிறது. உங்களை அவள் நாடி வந்தபோது நீங்கள் தூர ஓடிவிட்டீர்கள். அவள் இப்போது ஒதுங்கும்போது நீங்கள் நெருங்குகிறீர்கள்.

நீங்கள் கல்வியில் உயர வேண்டும் என்றும், படிப்புத்தான் உங்கள் சொத்து என்றும் கூறுகிறீர்கள். அதுதான் வளர்ச்சிக்கான வழியும் உண்மையும்கூட.

எனவே, அதற்கான வழியைத் திறந்து விடும் சந்தர்ப்பமும் இப்போது வந்திருக்கிறது. எதிர்கொள்ளப்போகும் பரீட்சையில் முழுக்கவனத்தையும் செலுத்தி உங்கள் கெட்டித்தனத்தை வெளிக்காட்டுங்கள். மற்றவை அனைத்தையும் மூட்டை கட்டி வைத்து விடுங்கள்.

காதலும், வாழ்க்கையும் அறிவோடும். ஆற்றலோடும் இன்ன பிற சிறப்புக் குணாம்சங்களோடும்தான் உரசிப் பார்க்கப் படவேண்டும்.

முதலில் உங்கள் காதலையும் வாழ்க்கையையும் அறிவாற்றலோடு உரசிப் பாருங்கள். அதனடிப்படையில் எல்லாம் சீராகவும் சிறப்பாகவும் இருக்கும்.

இப்போது உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ''தடுமாற்றம்'' எதிர்கால விஞ்ஞானப் பட்டதாரியின் உருவாக்கத்தை எவ்வகையிலும் தடுக்கக்கூடாது.

கேள்வி:
சமூகத்தில் பலர் நேரந்தவறாமை, வாக்குறுதி கடைப்பிடிக்காமை, கண்ணியமும் மதிப்பும் தராமை போன்ற பல விடயங்களிலே பலவீனமாக இருப்பதால் சண்டை சச்சரவுகளும், வெறுப்புகளும், மனஸ்தாபங்களும் உருவாகின்றனவே! இப்படிப்பட்ட விடயங்களுக்குக் காரணமாக இருப்பவர்களை மாற்றவே முடியாதா?

பதில் :
காலம் பொன்னானது; நேரம் பொன்னானது என்றெல்லாம் எத்தனையோ பொன்மொழிகள் பாடசாலைச் சுவர்களிலும், பாடப்புத்தகங்களிலும் இன்னும் தேவையான இடங்களில் எல்லாம் எழுதப்பட்டிருக்கும். ஆனால், அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதில்தான் சிக்கல் இருக்கிறது.

நேரமும் காலமும் மிகப் பெறுமதியானது என்பதனால்தான் புனித திருக்குர்ஆனில் இறைவன் ''காலத்தின் மீது சத்தியமாக மனிதன் நிச்சயமாக நஷ்டத்திலேயே இருக்கிறான்'' என்று குறிப்பிடுகிறான்.

நேரத்தினதும் காலத்தினதும் முக்கியத்துவம் கருதியே காலத்தின் மீது சத்தியம் செய்யப்பட்டிருப்பதை இங்கு நோக்கலாம்.

நேரத்தைத் தவறவிட்டவர்கள் தமது வாழ்க்கையையே பாழாக்கிவிட்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

நீங்கள் மேலும் குறிப்பிட்டிருக்கும் வாக்குறுதி கடைப்பிடிக்காமை, கண்ணியமும் மதிப்பும் தராமை போன்றவற்றாலும் சமூகத்தில் பல பிரச்சினைகள் ஏற்படுவது உண்மைதான்.

இத்தகையவர்கள் வளர்க்கப்பட்ட விதம், வளர்ந்த சூழல் என்பன இந்த நிலைமைகளுக்குக் காரணங்களாய் அமைந்து விடுகின்றன.

வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விடுவோர் மற்றவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்காதவர்களில் ஒருசாராரை அதாவது, தங்களது பலவீனத்தை உணர்ந்துகொள்வோரை மாற்ற முடியும். உணராதவர்களை மாற்றியமைப்பது சற்றுச் சிரமம்தான். அத்தகையவர்கள் தாங்கள் மாட்டுப் படும்போது மட்டும் உணர்ந்துகொள்ள வழியுண்டு. ✱

**பலரின் வேண்டுகோளுக்கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.**

# எண்ணம் போல் வாழ்க்கை

நமது உடலுக்கும் மனத்திற்கும் எப்போதுமே தொடர்பு உண்டு. மனதின் சிந்தனைக்கு ஏற்ப உடம்பும் செயல்படுகிறது. மனதில் பயம் தோன்றினால் உடலும் பாதிப்படைகிறது.

அதனால்தான் மனதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். எண்ணியபடியே ஆகிறாய் என்பது முதுமொழி.

இந்த மனதின் மூலமாக நம்மையே நாம் வசியம் செய்து கொள்ளலாம்.

''நான் வலிமையுள்ளவன். நான் முன்னேறிக்கொண்டே இருக்கிறேன்.

என்னைச் சூழ்ந்துள்ள பிரபஞ்ச ஆற்றல் என்னைப் பாதுகாக்கிறது.


எனக்கு மனச் சஞ்சலமே இல்லை''

என்பது போல உங்களது விருப்பத்துக்கு ஏற்றாற்போல் தினமும் காலையிலும் இரவிலும் உறங்கச் செல்வதற்கு முன்பும் இதைப் பலமுறை மனதிற்குள் சொல்லிக் கொண்டே இருந்தால், உங்கள் உள்மனமும் இதை அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படுத்த ஆரம்பித்து விடும். அதன்படியே வாழ்க்கையிலும் மாற்றங்கள் ஏற்படும். 'சஜஷன்' என்று இதற்குப் பெயர். தூண்டிவிடும் வார்த்தைகள் என்று சொல்லலாம்.

ஆகவே மனதை உறுதியுடன் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்தால் வெற்றிகள் தொடரும். அதற்கு வாக்கியங்கள் நிச்சயம் உதவி செய்யும்.

தினமும் செய்து வந்தால் மனோசக்தியின் ஆற்றல் உங்களுக்கே புரியும். அதை வளர்த்துக் கொண்டு பயன்பெறுங்கள். ✱

# இதயநலம் காக்கும் உடற்பயிற்சிகள்



உடல் ஆரோக்கியமாக இருக்க உதவும் முக்கியமான விஷயங்களைப் பட்டியலிடுங்கள் என்றால், அந்தப் பட்டியலின் முதன்மையான இடத்தில் உடற்பயிற்சி என்பது இருக்கும்.

உடற்பயிற்சியின் அவசியம் பற்றி காலம்காலமாக நாம் பேசி வந்தாலும், அதன் உண்மையான முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் முழுமையாக யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அப்படி உணர்ந்திருந்தால், இதய நோயாளிகளின் எண்ணிக்கை நம் நாட்டில் அதிகரித்திருக்காது.

பல நோய்களில் இருந்து நம்மைக் காக்கும் பாதுகாப்பு அரண்களாக உடற்பயிற்சிகள் அமைகின்றன. இதய நோய்களால் பாதிக்கப்படாமல் தப்பிப்பதற்கு, உடற்பயிற்சிகள் எத்தகைய நன்மைகளை அளிக்கின்றன என்பதை பார்ப்போம்.

இதயம் வலுவான தசைகளால் ஆன விசை அமைப்பு என்பதை நீங்கள் அறிவீர்கள். இதயம் நன்கு செயல்பட வேண்டும் என்றால், தமனிகளின் மூலமாக ஒவ்வொரு செல்லுக்கும் தேவையான இரத்தம் கிடைக்க வேண்டும். அப்போதுதான் தசைகள் வலுவாக இருந்து இதயத்தை நன்றாக இயங்க வைக்க முடியும். இதயத்தில் உள்ள தசைகளை வலுவாக்க ஒருவரின் வயது, உடல் அமைப்பு ஆகியவற்றுக்கு ஏற்ப உடற்பயிற்சியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தினமும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி, அந்த உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். உடற்பயிற்சியில் ஈடுபட முடியாத பெண்கள் அன்றாடம் தங்களுடைய வீட்டு வேலைகளில் ஈடுபட்டாலே போதுமான உடற் பயிற்சியை பெறலாம்.

என்னென்ன உடற்பயிற்சிகளைச் செய்யலாம் என்பதைப் பார்க்கும் முன்பு, உடலுக்கு எந்த வகையில் அவை உதவுகின்றன என்பதைப் பார்த்துவிடலாம்.

## உடற்பயிற்சியின் பயன்கள்

இதயத்தில் இருந்து, இரத்தம், இரத்தக் குழாய்களின் மூலமாக நமது உடலில் உள்ள உறுப்புகளுக்கு செல்லுகின்றது. எதிர்பாராத காரணங்களால் அதாவது, இரத்தக் குழாய்களில் தடை இருந்தாலோ அல்லது அவை பாதிக்கப் பட்டிருந்தாலோ இரத்தம் சரிவர உறுப்புகளுக்குப் போய்ச் சேராது. இந்த




இக்கட்டான நிலையை ஈடுகட்டும் வகையில் முக்கிய உறுப்புகளுக்கு இரத்த ஓட்டம் தடைப்படாமல் இருக்க மாற்று இரத்தக் குழாய்கள் இருக்கின்றன. இந்த இரத்தக் குழாய்களை இணை இரத்தக்குழாய்கள் (Collateral Circulation) என்று சொல்வார்கள்.

உடற்பயிற்சிக்கும் இந்த இணை இரத்தக் குழாய்களுக்கும் என்ன தொடர்பு என எண்ணுகிறீர்களா? இருக்கிறது.


இந்த இணை இரத்தக் குழாய்கள் இதயம் உருவாகும்போதே உருவாகிவிடுகின்றன. ஆனால், முக்கியமான வேலைகளை முதன்மை இரத்தக் குழாய்களே முழுநேரமும் செய்துவிடுவதால், இணை இரத்தக் குழாய்கள் செயலற்றுத்தான் காணப்படும். அவசர காலத்தில் தானே நமது சேவை தேவை என்ற அலட்சியத்தில் இவை அளவில் சுருங்கியும், வளைந்தும், நெளிந்தும் காணப்படும். அந்த நிலையில் திடீரென முதன்மை ரத்தக் குழாய்கள் செயலற்றுப் போகும்போது இவை விழிப்படைந்து வேலை செய்யச் சற்று நேரம் பிடிக்கும்.

ஆனால், இளமைப் பருவத்தில் இருந்து நாம் அன்றாடம் உடற்பயிற்சி செய்வதன் மூலம், இந்த இணை இரத்தக் குழாய்களை நன்கு இயக்கி, அவற்றை எப்போதுமே தயார் நிலையில் வைத்திருக்கலாம். அதன் மூலமாக, திடீரென இதயத்தின் முதன்மை இரத்தக் குழாய்கள் அடைபடும்போது, இந்த இணை இரத்தக்குழாய்கள் விரைவாகச் செயல்பட்டு, மாரடைப்பு போன்ற சிக்கலான பிரச்சினைகளால் மரண ஆபத்து ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

நீங்கள் தொடர்ச்சியாகத் தினமும் உடற்பயிற்சி செய்து வருவதன் மூலம் மாரடைப்புக்கான வாய்ப்பையும் பெருமளவு குறைத்துவிடலாம். மாரடைப்புக்கு அடிப்படை காரணம், இதயத் தமனிகள் முழுமையாக அடைப்பட்டு இதயத்தசைகள் சுருங்கி, இதயம் இயங்கத் தேவையான உயிர்வளி சத்துகள் போன்றவை கிடைக்காததுதான். அன்றாட உடற்பயிற்சிகள், இதயத் தசைகளின் சுருங்கும் ஆற்றலை அதிகமாக்குகின்றன. அத்தோடு உடற்பயிற்சி செய்யும் போது அதிக அழுத்தத்துடன் இரத்தம் இரத்தக் குழாய்கள் வழியே செல்கிறது.

இதயத் தமனிகளில் ஏற்படும் அடைப்புகளை அதிக அழுத்தத்துடன் வரும் இரத்தமானது ஓரளவுக்கு அகற்றுகிறது. இதன் மூலமாக மாரடைப்புக்கான வாய்ப்பு குறைக்கப்படுகிறது. அன்றாட உடற்பயிற்சியின் மூலமாக இதயத் தமனி நோய்களையும், மாரடைப்பையும் கணிசமான அளவு தடுக்க முடியும்.

(தொடரும்)



# நல்லவர்களுடன் சேருங்கள்



தூள் சேர்ந்திருக்கும் நிலத்தின் தன்மைக்கேற்ப மணம், சுவை, நிறம் ஆகிய தன்மைகளை தண்ணீர் பெறுகிறது. அசுத்த நீருடன் சேரும்போது, அது அசுத்தமாகிறது. அதேபோல, உடன் பழகுபவர்களின் தன்மைக்கேற்பவே குணங்களும் அமையும்.

தீயவர்களுடன் சேர்வதால் தீமை உண்டாகுமே தவிர, வேறு நன்மைகள் ஏதும் ஏற்படாது. நல்ல குணமுடையவர்கள், தீயோர்களுடன் நட்பு கொள்ளாமல் விலகியே இருப்பர்.

ஒருவனுக்கு அமையும் நட்பைப் பொறுத்தே, அவனுக்கு அறிவும், நடத்தைகளும் அமைகிறது. நல்லவர்களுடன் சேர்வதால் மனம் சுத்தமாகவும், செயல்கள் நல்லதாகவும் இருக்கும். ஒருவன் தான் செய்த நற்செயல்களால் மட்டுமே இறந்த பின்பும் புகழ்பெற்றிருக்க முடியும். அப்படிபட்ட செயல்கள் பெற நல்ல குணமும், நல்லோர்களின் நட்பும் அவசியம் வேண்டும்.

ஒழுக்கத்துடன் வாழ்வதற்கு நல்லவர் சேர்க்கையை விட, வேறு எதுவும் உதவி செய்யாது. அதேபோல், தீயவழியில் ஈடுபட்டு மனம் போன போக்கில் வாழ்ந்து, துன்பத்தில் வீழ்வதற்கு, தீயவர் சேர்க்கையைவிட வேறு எதுவும் துணையாக இருக்காது.

ஒரு செயலைச் செய்ய முன், அதற்கு வரும் இடையூறுகள், விளையும் பயன், தேவையான பொருள், கருவி, காலம், ஆற்றல், இடம் போன்றவற்றை நன்கு சிந்தித்துவிட்டு அதில் இறங்க வேண்டும்

இந்தக் குணங்கள் நல்ல நண்பர்களின் நட்பினாலேயே வரும். ஓர் செயலை செய்யத் தொடங்கியவுடன் பார்த்துக் கொள்ளலாம் என்பது முட்டாள்தனம்.

எனவே, நல்ல நண்பர்கள் யார் அவர்களுடைய குண நலன்கள் என்ன என்பதை அறிந்து நட்பு கொள்ளுங்கள். ★

## மிளகாய் பஜ்ஜி



**தேவையானப் பொருட்கள்:**

குடை மிளகாய் - 10
கடலை மாவு - 4 மேசைக்கரண்டி
அரிசிமாவு - 2 மேசைக்கரண்டி
மைதாமவு - 2 மேசைக்கரண்டி
மஞ்சள் தூள் சிறிதளவு
உப்பு - தேவைக்கு
எண்ணெய் - 200 மில்லி

**செய்முறை**

குடை மிளகாயைப் பாதியாகக் கீறி, விதை நீக்கி, காம்போடு கழுவி வைக்க வேண்டும். எண்ணெய் தவிர அனைத்துப் பொருட்களும் சேர்த்து கெட்டியாகக் கரைத்து வைக்க வேண்டும். அடுப்பில் பாத்திரத்தை வைத்து எண்ணெய் விட்டு அது கொதித்ததும், மாவில் மிளகாய் நன்றாகதொட்டு கொதிக்கும் எண்ணெயில் பொரித்து எடுக்கவும். சூடான பஜ்ஜி தயார்.



படம்-நெல்லு



படம்-அவர்களும் இவர்களும்



## ஹரி இயக்கத்தில் சூப்பர் ஸ்டார்!

இப்போது கேள்விக்குறியுடன் இருக்கும் இந்தச் செய்தி விரைவில் ஆச்சரியக்குறியாக மாறுவதற்கான சாத்தியம் தெரிகிறது.

ஆர்.எம்.வீரப்பனின் சத்யா மூவிஸ் மீண்டும் படம் தயாரிக்கும் முனைப்பில் கதை இலாகாவைப் பழையபடி பரபரப்பாக்கியுள்ளது. இவர்களின் முதல் தயாரிப்பில் ரஜினி ஹீரோவாக நடிக்க அதிக சாத்தியம் உள்ளது எனக் கூறப்படுகிறது.

இந்தப் படத்தை ஹரி இயக்குவார் என்பது புதிய செய்தி. 'சிங்கம்' கண்டபடி ஓடுவதாலும், ஹரியின் படங்கள் என்றால் ஓடும் உத்தரவாதம் உண்டுஎன்பதாலும் ஹரியின் பெயர் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனக் கூறுகின்றனர்.தற்போது ரஜினியின் மருமகன் தனுஷை வைத்து இயக்கும் படத்தின் கதை விவாதத்தில் ஹரி பிஸியாக உள்ளார். அது முடிந்ததும் இந்தச் செய்தி வெளிவரக் கூடும்.

## ஜெயம் ரவி - கார்த்தி நேரடி மோதல்!

மோதல் என்றால் நேரடி மோதல். ஆம், ஜெயம் ரவி, கார்த்தி நடித்த படங்கள் ஒரே தினத்தில் திரைக்கு வருகின்றன.அண்ணன் ஜெயம் ராஜா இயக்கத்தில் ஜெயம் ரவி நடித்திருக்கும் படம் 2தில்லாலங்கடி'. தமன்னா ஹீரோயினாக நடித்திருக்கும் இந்தப் படம் தெலுங்கில் வெற்றி பெற்ற 'கிக்' படத்தின் 'ரீமேக்'.

ஜெயம் ராஜாவின் 'ரீமேக் இதுவரை சோடை போனதில்லை என்பதால் இந்தப் படமும் நிச்சயம் வெற்றி என்று அனைத்து தரப்பினரும் நம்புகின்றனர். போதாததற்கு வடிவேலு, சந்தானம் என்று பெரிய பார்ட்டிகளும் படத்தில் இருக்கிறார்கள். கூடவே சன் பிக்சர்ஸின் அபரிதமான விளம்பரம். இந்தப் படம் எதிர்வரும் 23ஆம் திகதி திரைக்கு வருகிறது.

இதே தினத்தில் திரைக்கு வரும் இன்னொரு படம் 'நான் மகான் அல்ல'. 'வெண்ணிலா கபடிக்குழு' சுசீந்திரனின் இரண்டாவது படைப்பான 'நான் மகான் அல்ல' படத்தில் கார்த்தி, காஜல் அகர்வால் நடித்துள்ளனர். படத்துக்கு இப்போதே அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது. போட்டி பலமாக இருப்பதால் கடைசி நேரத்தில் ஏதேனும் ஒரு படம் பின் வாங்கினாலும் ஆச்சரியமில்லை.

தொகுப்பு-
எஸ்.ஜெய்



படம்-சிக்குபுக்கு



## மீண்டும் சன் பிக்ஸர்ஸ் தயாரிப்பில் நகுல்!

சன் பிக்சர்ஸின் ஆஸ்தான
என சன் பிக்சர்ஸ் வெளியிட்
களும் ஹிட்டானது சன் பிக்
அதேவேளை, நகுலின் ஏ
கோடியில் சம்பளம் கேட்கிற
களால் நகுலை வைத்துப் ப
இருந்தவருக்கு மீண்டும் சன்
தயாரிக்கும் படத்தில் ஹீரோ
'கோரிப்பாளையம்' போன்ற
நடிக்க ஒப்பந்தம் செய்யப்ப



# காவல்காரன் இப்ப காவல் காதல் ஆனது

மலையாளத்தில் நயன்தாரா - திலீப் நடித்து சித்திக் இயக்கிய 'பொடிகார்ட்' படத்தை தமிழில் விஜயை வைத்து இயக்கி வருகிறார் சித்திக். அசின் நாயகியாக நடிக்கும் இந்தப் படத்திற்கு 'காவல்காரன்' என்று பெயரிடப்பட்டிருந்தது. எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நடித்து சத்யா மூவிஸ் தயாரித்து 1967ஆம் ஆண்டு வெளிவந்த 'காவல்காரன்' படத்தின் தலைப்பை விஜய் படத்துக்கு வைக்கக்கூடாது என்று சத்யா மூவிஸ் நிறுவனம் எதிர்ப்புத் தெரிவித்தது.

இதுதொடர்பாக தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்துக்கு சத்யா மூவிஸ் நிறுவனம் ஒரு கடிதம் அனுப்பியது.

அதில,

''விஜய் இப்போது நடித்து வரும் புதிய படத்துக்கு 'காவல்காரன்' என்று பெயர் வைத்து இருப்பதாகத் தகவல் வருகிறது. இந்தத் தலைப்பின் உரிமையை யாருக்கும் நாங்கள் கொடுக்கவில்லை. எனவே, அந்தப் படத்துக்கு 'காவல்காரன்' என்று பெயர் வைப்பதற்கு அனுமதிக்கக் கூடாது'' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து தமிழ்திரைப்பட தயாரிப்பாளர் சங்கம் விஜய் படத்தின் தயாரிப்பாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது.

அதில்,

பழைய படத் தலைப்பை வைக்கும்போது சம்பந்தப்பட்ட தயாரிப்பாளரிடமிருந்து அனுமதி பெறுவதுடன், மறுப்பு இல்லாத சான்றிதழும் வாங்க வேண்டும். அது கிடைக்காத பட்சத்தில் அந்தத் தலைப்பை வைக்கக் கூடாது என்று தயாரிப்பாளர் சங்கத்தில் விதி இருக்கிறது. எனவே உங்கள் படத்துக்கு வேறு தலைப்பை வைத்துக்கொள்ளுங்கள்' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதைத் தொடர்ந்து விஜய் படத்தின் பெயர் 'காவல் காதல்' என்று மாற்றப்பட்டிருக்கிறது.

# பிரசாந்தின் தங்கையாக ஸ்னேகா

'விடியல்', 'பவானி ஐ.பி.எஸ்', 'முரட்டுக் காளை', 'அறுவடை', 'நூற்றுக்கு நூறு', மலையாளத்தில் 'ஷிகார்' உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார் ஸ்னேகா.

மலையாளத்தில் மம்முட்டியுடன் மூன்று படங்களில் ஜோடி சேர்ந்து விட்ட நிலையில், இப்போதுதான் மோகன்லாலுடன் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தப் படத்தில் நடிக்கும் மற்றொரு நடிகையான அனன்யாவுக்கு அம்மாவாக ஸ்னேகா நடிக்கிறார் எனச் செய்திகள் கிளம்ப,

''அம்மாவாக நடிக்க வேண்டிய அவசியமில்லை. அனன்யாவின் கரெக்டரும் என் கரெக்டரும் வெவ்வேறு நேரங்களில் வருகிறது. அம்மா மகளாக வரும் காட்சிகள் ஒன்று கூட இல்லை'' என சமீபத்தில் விளக்கமளித்தார்.

இந்நிலையில் தியாகராஜன் இயக்கத்தில், முதல்வர் கருணாநிதியின் கதை வசனத்தில் உருவாகி வரும் 'பொன்னர் சங்கர்' படத்தில் பிரசாந்தின் தங்கையாக நடிக்கிறார் ஸ்னேகா.

# சூர்யாவோடு சிறு சந்திப்பு...!

கே- ''அழகான கண்கள் கபடி ஆட, மென் புன்னகையில் மிளிர்கிறார் சூர்யா. ரஜினி, கமலுக்கு அடுத்தபடியான தமிழ்ச் சினிமாவின் வியாபாரம் இன்று... சூர்யாவுக்குத்தான்! இதுபற்றி என்ன சொல்றீங்க?''

ப- ''கேட்டதைவிட, நினைச்சதைவிட எல்லாமே அதிசயமாக அடுத்தடுத்து நடந்துட்டே இருக்கு. இந்த வெற்றி ஆரம்பத்தில் எனக்கு வரலை. அப்படி வராமல் இருந்தது நல்லதுதான்னு இப்ப தோணுது. என்னை இப்ப எல்லோருக்கும் பிடிச்சிருக்கு. நீங்கள் என்ன பண்ணினாலும் பிடிக்கும்னு சொல்ற வார்த்தைகள் காதில் வந்து விழுது. இந்த மாதிரியான போட்டியால் கூட என்னைப் பிடிக்கலாம். இதிலிருந்து இனி இறங்கக் கூடாது. மேலே மேலே போகணும். இப்போதெல்லாம் சாமி கும்பிடும்போது எதுவும் கேட்கத் தோணலை. நன்றி மட்டும்தான் கடவுளுக்குச் சொல்லிட்டே இருக்கேன்.

இப்படி ஒரு அப்பா, அம்மா, பிருந்தா, கார்த்தி, ஜோ, தியா, குட்டிப் பையன், இந்த வெற்றி எல்லாம் கிடைச்ச பிறகு... கடவுளுக்கு நன்றிதான் சொல்லணும்!''

கே- ''எப்படி கணக்கு சரியாப் போடுறீங்க? நிறையப் பேருக்கு இந்தக் கணக்கு தப்பாகுதே?''

ப-''வாரணம் ஆயிரம்' வெற்றி வேற மாதிரி. எல்லோருக்கும் அது நினைவுகளாக மாறியிருந்தது. டைரக்டர் வெற்றிமாறன் பார்த்துட்டு, சிகரெட் குடிக்கிறதை விட்டுட்டேன்னு சொன்னார். எஸ்.எம்.எஸ்களால் என் இன்பொக்ஸ் நிரம்பி வழிந்தது. இவங்க எல்லாம் வேற. ஹரியுடன் நான் 'சிங்கம்' நடிச்சதில் என் கைக்கு வந்தவங்க வேர்வை ஒழுகி, கஷ்டப்படுற மக்கள். வேட்டியை மடிச்சுக் கட்டி, பைக்கில் விரட்டி, 'துரைசிங்கம் ரொம்ப டாப்பு'ன்னு கை வலிக்குற மாதிரி குலுக்கிச் சொன்ன மக்கள். இப்ப கோபமே வரலை. கும்பிடத்தான் தோணுது.

எல்லோருக்கும் பிடிக்கிறவனாக இருக்கணும்னு நினைச்சுக்கிட்டேன். எல்லா வயசுக்கும் பிடிக்கணும். நிச்சயமா, ஒரே மாதிரி படங்கள் பண்ண மாட்டேன். 'சிங்கம்' மாதிரி நான் இன்னொரு தடவை கோபப்பட்டால் எனக்கே பிடிக்காது. அடுத்து ஏ.ஆர்.முருகதாஸ் படம். நான் நினைப்பது நடந்தால், முருகதாஸ் படம் எனக்குப் பெரிய லெவல். அடுத்து கே.வி.ஆனந்த். ஒவ்வொரு டைரக்டரிடமும் என்னை அர்ப்பணிக்கிறேன். நான் ஒண்ணும் மகா நடிகன் கிடையாது. ஆனால், என்ன கொடுக்குறாங்களோ, அதில் என் அதிகபட்ச சக்தியைத் தருவேன். அவ்வளவுதான். இதைத்தான் நீங்கள் கணக்குன்னு சொல்றீங்க!''

கே- மற்ற பெரிய ஹீரோக்கள் நடிக்கிற படங்கள் தோல்வியடையுது. உங்க படங்கள் வெற்றி அடையுது. ஏன்?

ப- ''எவ்வளவோ விஷயங்கள் இருக்குங்க. படத்தை வெளியிடுகிற திகதி, என் டைரக்டரோட உழைப்பு, படத்தோட தரம்... இப்படி நிறைய இருக்கு. மத்தவங்க யாரும் தப்பா நினைச்சிடக் கூடாது. கட்டாயப் படுத்துறேன்னு சொல்லிடக் கூடாது. நான் என்னுடைய படங்களை ரிப்பீட் பண்றது கிடையாது. மத்தக் காரணங்களை நீங்க தேடிக்குங்க!''

கே-''நீங்கள் அறிமுக இயக்குநர்கள் படங்களில் நடிப்பது இல்லையே, ஏன்?''

ப-''ஒவ்வொரு தடவையும் எதிர்பார்ப்பு, வியாபாரம் மேலே ஏறிக்கிட்டே போகுது. எவ்வளவோ கோடிகள் புழங்கிப் படம் வெளியே வருது. இப்படிப்பட்ட வேளையில் கொஞ்சம் அனுபவ இயக்குநர்களைப் பார்த்தால், நம்பிக்கையாக இருக்கு. ஒரு கதையைச் சொன்னால் எப்படி இவர் கொண்டுவருவார்னு ஒரு வடிவம் மனசுக்குள் வருது. கொஞ்ச நாட்கள் கழிச்சுப் பரிசோதனை முயற்சிகளில் இறங்கலாம். அறிமுக இயக்குநர்களிடம் ஒரு கமர்ஷியல் படத்தை நான் எதிர்பார்க்கவில்லை.

அடுத்தடுத்து அப்படிச் செய்யும் எண்ணங்கள் இருக்கு!''

கே- ''கார்த்தி உங்களுக்கு வீட்டுக்குள்ளே போட்டின்னு விளையாட்டுக்குச் சொல்லிட்டு இருந்தோம். நிஜமாவே அது வரும் போலிருக்கே. உணர்கிறீர்களா?''

ப- ''கார்த்தி எடுத்தவுடனேயே ஒரு நல்ல நடிகனாக எழுந்து வந்தவன். அந்த நடிப்பெல்லாம் எனக்குப் பிறகுதான் கிடைச்சது. பக்கத்திலேயே ஓட ஓர் ஆள் இருந்தால் நல்லதுதானே!''

கே- 'ரத்த சரித்திரம்' வன்முறை அதிகம் இருக்கும் போலிருக்கே?''

ப-'ரத்த சரித்திரம்' 18 வயசுக்கு மேற்பட்டோர் பார்க்க வேண்டிய படம். ரத்தமும் சதையுமாக ஒரு வாழ்க்கையைத் தரிசிக்கிற படம். நான் ராம்கோபால் வர்மாவோட ரசிகன். என் வாழ்க்கையில் அவர்கூட ஒரு படம் பண்ணிட்டேன்னு சொல்வது எனக்குப் பெருமை. கமர்ஷியல் படத்துக்கும் கலைப் படத்துக்கும் இடையில் வந்து நிற்கும் இந்த 'ரத்தசரித்திரம்!''

கே-''உங்க புதுக் குட்டி எப்படி இருக்கார்''?

ப- ''நல்லா இருக்கார். அழகழகாப் பெயர் தேடிட்டு இருக்கோம். பார்க்க ஜோ மாதிரி இருக்கார். கலர் நம்ம கலர். அழறதே கிடையாது. தியா, தன் தம்பிக் கிட்ட காட்டுற செல்லம் ரொம்ப விசேடம். ரெண்டு பேரும் ரொம்ப ஃப்ரெண்ட்ஸ்!''

கே- ''உங்களை கமலுக்கு ஒப்பிடலாமா?''

ப-''அவர் மாதிரி ஆக வாய்ப்பே கிடையாது. அவரது கதை எழுதலாம். மனசை உருவுற மாதிரி வசனம் எழுத முடியும். படம் எடுக்க முடியும். எந்த சினிமாவையும் தனியாப் பிரிச்சுப் போட்டுப் பேச முடியும். நான் குடும்ப ஆளு. அவர் மாதிரி எல்லாத்தையும் விட்டுட்டு சினிமாவை மட்டும் நினைச்சுக்கிற ஆளு கிடையாது.

ஷூட்டிங் தவிர ஒரு மணி நேரம் வெளியே சுத்திட்டு ஜோ, தியா, பையன்னு கொஞ்சிட்டுத் திரிகிற ஆளைப்போய் இப்படிச் சொல்லிட்டீங்களே. 'எனக்குப் பயமா இருக்கு'ன்னு ஒரு விழாவில் சொன்னேன். கமல் சார் சிரிச்சுட்டு, 'அந்தப் பயத்தை மட்டும் அப்படியே வெச்சுக்க'ன்னு சொன்னார். ரஜினி சார் ஒரு விமானப் பயணத்தில், 'நீ ஹீரோ மட்டும் கிடையாது. நடிகன். சண்டை போடு, டூயட் பாடு. ஆனால், இரண்டு படத்தில் நல்லா நடிச்சிடு'ன்னு சொன்னார்.

எல்லாத்தையும் மனசில் வைச்சிருக்கேன். 'பயமா இருக்கு'!''

(அருமையாகச் சிரிக்கிறார் சூர்யா!)



ஆஸ்தான நடிகராகிவிட்டார் நகுல். 'காதலில் விழுந்தேன்', 'மாசிலாமணி'
வெளியிட்ட நகுலின் இரு படங்களும் 'சூப்பர் ஹிட்'. இந்த இரு படங்
து சன் பிக்சர்ஸால்தான் என்று சொல்லும் அளவுக்கு உள்ளது.
நகுலின் ஏனைய படங்கள் சரியாகப் போகவில்லை. இந்நிலையில்
ரம் கேட்கிறார் என்று நகுல் மீது குற்றச்சாட்டு வேறு. இந்தக் காரணங்
வைத்துப் படம் பண்ண யாரும் முன்வரவில்லை. வீட்டில் சும்மா
மீண்டும் சன் பிக்சர்ஸே கை கொடுத்திருக்கிறது. அடுத்து சன் பிக்சர்ஸ்
த்தில் ஹீரோவாக நகுல் நடிக்கிறார். அத்துடன், 'நாடோடிகள்',
ம்' போன்ற படங்களைத் தயாரித்த மைக்கல் ராயப்பன் தயாரிப்பிலும்
செய்யப்பட்டுள்ளார் நகுல். சம்பளத்துக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

# கவிதைப்புனல்

## கல்வியின் சிறப்பு

கல்விக்கு நிகரான பொருளெதுவும் இல்லை
கற்றுவிட்டால் அதன்மதிப்புக் களவேதும் இல்லை
வில்லுக்குக் கணையன்ன நாம்பயிலும் கல்வி
வாழ்வுக்குத் துணையாக என்றுமெமைக் காக்கும்
சொல்லுக்கும் செயலுக்கும் நல்லூக்க மளிக்கும்
சான்றோர்கள் கைகொடுத்து உபசரிக்க வைக்கும்
எல்லையிலா விடர்வரினும் கற்றுயர்ந்தாற் போதும்
எம்மண்ணின் சுதந்திரத்துக் குறுதுணையாய் நிற்கும்

மண்ணிழந்து மனையிழந்து பொருளெல்லா மிழந்தோம்
மனம்சோர்ந்து மடியவில்லை உறுதியுடன் எழுவோம்
எண்ணத்திற் றெளிவுண்டு எழுச்சிபெற் றுயர்வோம்
ஏமாற்றி யெமையடக்கும் சக்திகளுக் கஞ்சோம்
விண்முட்டப் புகழ்பெற்ற தமிழ்மொழியி னாட்சி
வீறுகொண் டெழுந்துநிற்கும் தமிழினத்தின் காட்சி
கண்ணின்மணி யாமெங்கள் கல்வியினம் காக்கும்
கைகொடுத்துக் கரைசேர்த்துக் களிப்புறவே வைக்கும்

கள்வரினாற் கொள்ளையிடும் பொருளில்லைக் கல்வி
கற்றறிவைப் பெருக்கிவிடின் கைகொடுத்துக் காக்கும்
அள்ளியள்ளி யற்றவர்க்குக் கொடுக்கின்ற போதும்
அளவிடற்கு மரிதான நிதியெனவே பெருகும்
துள்ளியெழுந் தோடிவரும் குழந்தைகளும் நாடும்
தூயகலை பயின்றிடுவார் துணிவுபெற் றெழுவார்
விள்ளுதற்கு மரிதான கல்வியெமக் களிக்கும்
விலையில்லாப் பெருநிதியாம் வீடடைய வைக்கும்

அறிஞனெனப் பிறரழைத்து அறிவுரைக ளோடு
அறநெறிகள் வளர்த்திடவே உறுமுறைகள் கேட்பர்
பிறநாட்டு வல்லுநர்கள் பேரவையி லிருத்தி
திறனாய்வுப் பேருரையைச் செவிமடுக்க விழைவர்
அறியாமை யென்னுமிருள் அகற்றிமெஞ் ஞான
நெறிகாட்டும் கல்வியினால் அறமோங்கி வளரும்
வறுமைநிலை யெய்திடினும் கல்விகற்றாற் போதும்
வளம்பெருக்கு மறிவினாற்றல் வீடடைய வைக்கும்

-ஞானம்-

## குறிஞ்சிக் கோவில்கள்

### திஸ்பனை ஸ்ரீ அருள்மாரி





மடுவோடை பாயும் கரையோர மேட்டில்
மரச்சோலை பொலிந்து குலுங்கும்
நடுப்பரப்பில் தோட்ட நீள்இல்ல நிரைகள்
நிமிர்ந்திங்கு நெஞ்சை வாங்கும்
நெடும்பாதை வந்து கிளைவிசும் முகட்டு
முச்சந்தி முகப்பில் கோயில்
தொடுவானம் நீலக் குடையாகி சுருக்கிப்
புத்துலகு ஒன்றைச் சமைக்கும்

ஓடைநீர் முடுக்கில் கடமோசை எழுப்பி
இடுக்கினில் தாவிப் பாடும்
ஆடைவெண் முகிலைத் தடுத்தெடுத்து வாரி
அணிமேரு அடுக்கம் பூணும்
கூடைகள் நிறைக்கும் குளிர்தளிர் நிரைகள்
குன்றத்தில் பொலிந்து இலங்கும்
மேடையாம் முகட்டில் முடைநீக்குங் கோயில்
திஸ்பனை ஊரில் ஓங்கும்

உயிர்பெற்ற சிற்ப உருவங்கள் பொற்புக்
கோபுரக் கொலுவில் காட்சி
துயருற்ற மக்கள் இடும்பைகள் நீக்கும்
திருமாரி கோயில் மாட்சி
பெயர்பெற்ற ஊரில் சீர்பெற்று ஓங்கும்
பரந்தெங்கும் அம்மை ஆட்சி
மயில்வீரன் சேயோன் தும்பிக்கை முத்தோன்
முக்கண்ணர் மாயோன் காட்சி

குலைவாழை மூங்கில் தோகைவிரி கன்னல்
முகவாயில் பூண்டு இலங்கும்
கலையழகு பொலியுந் திருக்கோயில் சூழல்
கண்கொள்ளா அழகில் குலுங்கும்
அலைபாயும் மக்கள் பெருவெள்ளம் ஆண்டு
விழாநாட்கள் பொங்கி யோங்கும்
மலையகம் பேணும் தோட்டங்கள் தோறும்
அருள்மாரி ஆட்சி ஓங்கும்

(தொடரும்)

-கவிஞர் எஸ்.எஸ். காந்தி

கால்பார்த்து நடந்துவரும் மாதராரின்
கலங்கமற்ற நல்லுடமைக் கற்புதன்னில்
வேல்பாய்த்து விளையாடும் அரக்கரின
வித்தையினால் பரிதவிப்போர் எத்தனைபேர்
பால்வார்த்துப் பசிதீர்க்கும் தாய்க்குலத்தைப்
பலிகொள்வார் தலையெதிர்த்துப் போரிடுங்கள்!

விழிகாந்தம் இதழ்கோவை மேனிதங்கம்
விரிந்தசடை கார்முகிலோ? இடைகொடியோ?
மொழிசாந்தம் பிறைநுதல் முகம்நிலவு
மொக்கிரண்டும் மாதுளையோ? மோகனத்தாள்
வழிவழியாய் வரும்சுகத்தை ஈவாளென
வர்ணிப்பார்! வலைவிரிப்பார்! காமம்வெல்லும்!

கனிகையரின் கட்டழகைக் கண்டதன்பின்
கனியென்றே சுவைத்தின்பங் காண்பதற்கு
இனிப்பிறக்கும் கற்பனைகள் கொஞ்சமல்ல
எக்கணமும் காமன்கணை பாய்ந்திடலாம்
மனிதனுக்குள் மிருகவெறி மிகைக்குமாயின்
மானமொடு வாழ்வரையும் எண்ணிப்பாரார்!

## வாழ்வே நாசம்

சிற்றின்பத் துள்ளிருந்து காமன்செய்த
சில்மிசத்தின் தேசத்தைக் காண்போரவர்
பற்றிவரும் கொள்கையிலும் மதனகாமம்
பாசிசமாய்க் கிளர்ந்தெழுந்தே கற்பெரிக்கும்
சுற்றினிலே பெண்மயிலார் கறைபடிவர்
இருந்தென்ன? அழுதென்ன? உடன்மடிவர்!

ஒருவனுக்கு ஒருத்தியென்று உறவுதந்து
உயிலெழுதி வைத்தானே இறைவனன்று
இருக்கின்ற சுகம்வழங்க உரிமை பெற்று
இருப்பவளும் நமதுயிரின் பாதிச் சொத்து
தெருத்தெருவாய் நாயினைப்போற் திரிவோர்தம்
தேடலெல்லாம் பெண்களெனில் வாழ்வே நாசம்!

-கவிஞர் ஏ.ஆர். நாகூர்-கந்தளாய்.

# கிராமிய நாடகங்கள்

நாட்டுமக்களின் உள்ளக் கருத்து, குணச்சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியவற்றைக் கிராமிய நாடகக்கலைகளினூடாகப் புரிந்துகொள்ள முடியும். கிராமங்களில் வாழும் மக்கள் வளர்த்த அழகுக் கலையே கிராமிய நாடகம். இது பொதுமக்களின் விலைமதிக்க முடியாத சொத்து. நாட்டின் கலாசார பாரம்பரியத்தின் முக்கிய அம்சமாக இருப்பதால் கிராமிய நாடகத்திற்குத் தேசிய முக்கியத்துவம் உண்டு. கிராம மக்களின் உணர்ச்சிகளையும் செயல்களையும் வெளியிடும் சாதனமாக அமைந்திருப்பதால், அவர்களின் உள்ளத்திற்கு அழகையும் இன்பத்தையும் அளிக்கும் ஆற்றல் கொண்டதாகக் காணப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாக ஈழத்திலே யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, சிலாபம் ஆகிய பகுதிகளிலே கிராமிய நாடகங்கள் ஆடப்பெற்று வந்தன. யாழ்ப்பாணத்திலும் சிலாபத்திலும் இவற்றை ஆடுவோர் தொகை இன்று அரிதாகிவிட்டது. ஆனால், மட்டக்களப்பிலும் மன்னாரிலும் வாழும் மக்களின் பொருளாதாரம், சமூகவாழ்க்கை, சமயம் ஆகியவற்றோடு கிராமிய நாடகங்கள் பின்னிக் கிடக்கின்றன. மன்னார் பகுதியில் கிறிஸ்தவ மத அடிப்படையிற் பாடப்பட்ட வடபாங்கு, தென்பாங்கு நாடகங்களும் சபாக்களும் வாசாப்புக்களும் ஆடப்பட்டு வந்துள்ளன. மட்டக் களப்பிலே தென்மோடி, வடமோடிக் கூத்துக்களும் விலாசங்களும் ஆடப்படுகின்றன.

பொதுவாக நோக்குமிடத்து இக்காலத் தமிழ்ச் சமூகம் தனது பழைய கலைச் செல்வங்களை மறந்துவிட்டது. மறக்கப்பட்டு மறைந்து கொண்டிருக்கும் கலைகளில் ஒன்று மக்கள் வயர்த்த கிராமிய நாடகக்கலை, மேலைத்தேயப் பண்பாடு, கல்வி ஆகியவற்றின் தாக்கத்தால் பல பழைய கிராமிய நாடகங்கள் இன்று ' கைவிடப்படுகின்றன. அதனால் அவை மறைந்து வருகின்றன. ஆகவே, தமிழ் மக்களாகிய நாம் அவற்றைப் பாதுகாத்து, எமது பாரம்பரியங்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியவர்களாக உள்ளோம்.

கிராமிய நாடகங்களை 'நாட்டுக் கூத்து' என்றே அழைப்பார்கள். இவை பெரும்பாலும் கோயில் முன்றலில் ஆடப்படுகின்றன. கிராமிய நாடகம் ஆடுவதற்கென அமைக்கப்படும் மேடை கூத்துக்களரி என அழைக்கப்படும். இது நாற்பது அடி விட்டமுள்ள வட்டமாக இருக்கும். மேடைக்கு அடைப்புக் கிடையாது. எல்லாப்பக்கமும் திறந்தே இருக்கும். களரியை வளைத்திருந்து மக்கள் கூத் தாட்டம் பார்ப்பர். இரவிர வாக நாடகம் பார்க்க மக்கள் ஒன்று கூடுவர்.

கிராமிய நாடகத்தில் இசை, ஆட்டம், உரையாடல் ஆகிய மூன்றும் இடம்பெறும். ஆயினும், பாட்டும் ஆட்டமுமே முக்கியமானவை. கதைத் தொடர்ச்சிக்கும் விளக்கத்திற்கும் இடையிடையே உரையாடல் இடம்பெறும். ஆட்டமே சந்தற்பங்களையும் பாத்திரங்களின் பண்புகளையும், கதைப் போக்கினையும் விளக்கும். கிராமிய நாடகம் ஆட்டத்தை அடித்தளமாகக் கொண்டது. மட்டக்களப்பு நாட்டுக் கூத்தில் இன்றும் ஆட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. மத்தள அடிக்கும் சல்லரியின் இசைக்கும் ஏற்ப நடிகர் ஆடுவார். நாட்டுக் கூத்துக்கு மத்தளம் இன்றியமையாதது. மத்தள அடியே பாத்திரங்களின் ஆட்டமாற்றங்களையும், இடமாற்றங்களையும் காட்சி மாற்றங்களையும் குறிக்கும். கூத்து முடிந்ததும் கூத்தாடிய அத்தனை பேரும் களரிக்கு வந்து சாமிமேற்பாட்டுப்பாடி ஆடுவர்.

கூத்துப் பழகுவது பற்றிய மரபும் கவனிக்கத்தக்கது. அதிகமாக அரிவு வெட்டு முடிந்த பின்பே கூத்து ஆரம்பமாகும். குரலுக்கும் தோற்றத்திற்கு மேற்பப் பாத்திரங்களை அமைப்பர். தொடக்கத்தில் இரவு பத்து மணிவரை கூத்துப் பழகுவர். நான்கு ஐந்து மாதங்கள் பழகியபின் சதங்கை அணிதல் நடைபெறும். அரங்கேற்றத்திற்கு ஒரு கிழமைக்கு முன் மேடை உடுப்பு அணியாமல் முழுக் கூத்தினையும் இரவுமுழுவதும் ஆடுவர் இது அடுக்குப் பார்த்தல் எனப்படும். பின்னர், குறிப்பிட்ட நன்னாளிலே அரங்கேற்றம் நடைபெறும். இது முதலாம் களரி எனப்படும்.




மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் கிராம நாடகம் தென்மோடிக் கூத்து. வடமோடிக் கூத்து, விலாசகூத்து என மூவகைப்படும். இவற்றுள் இப்பொழுது தென்மோடி, வடமோடி நாட கங்களே பெரும் வழக்கிலுள்ளன. தென்மோடிக்கும் வடமோடிக்கும் கதைப் போக்கு, இசை, ஆடல், உடை முதலியவற்றில் வேறுபாடு உண்டு. வடநாட்டுப் புராதன இதிகாசக் கதைகளைக் கொண்டவை வடமோடி நாடகங்கள். இராம நாடகம், தர்மபுத்திர நாடகம், டப்பிரவாக நாடகம், பதினெட்டாம் போர், குருக்கேத்திரன் போர், சூரசம்மாரம், செல்வ நாடகம், பாண்டவர் வனவாசம், கர்ணன் போர் போன்றவை இன்று இலங்கையில் ஆடப்படும் வடமோடி நாடகங்களாகும். இவை போர் செய்து வெற்றி பெறுவதைக் குறிக்கும். இவற்றில் வீரம், கோபம், அழுகை முதலிய சுவைகள் விரவி வரும் ஈழத்தில் நடிக்கப்படும் தென்மோடி நாடகங்களில் பவளவல்லி நாடகம், நொண்டி நாடகம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை பெரும்பாலும் தமிழ் நாட்டுக் கதைகளைக் கூறுவனவாய், காதற்சுவை பயந்து, காதல் கைகூடுவதோடு முடிகின்றன. இவற்றில் நகை, வியப்புப் போன்ற சுவைகளே பெரும்பாலும் வரும் மேலும், தென்மோடியிற் பழைய முறைப்படி இசை அமைந்திருக்கும்.

ஆட்டத்திலும், பாட்டிலும் வடமோடிக்கும் தென்மோடிக்கும் வேறுபாடுண்டு. தென்மோடி ஆட்டங்கள் வடமோடி ஆட்டங்களிலும் நுணுக்கமானவை. கடினமானவை. இதனாலே தென்மோடி நடிகர் வரவு ஆட்டம் ஆடியதும் களைத்துப் போவதனால், வரவைக் குறிக்கும் பாட்டை அண்ணாவியார் அல்லது பக்கப்பாட்டுக்காரர் பாடுவர். வடமோடி ஆட்டம் நுணுக்கமற்ற காரணத்தினாலே வரவு ஆட்டத்தின் பின்னர் தமது வரவுப் பாட்டை நடிகரே பாடுவர். தென்மோடிப் பாட்டுக்களை இழுத்துப்பாட, வடமோடியிற் சாதாரணமாகச் சொல்லப்படும். வடமோடியில் நடிகர் ஒரு பாட்டைப் படிக்கப் பக்கப்பாட்டுக்காரர் தொடர்ந்து அதனை முழுதாகப் படிப்பார். தென் மோடியில் கடைசிப் பகுதியை மட்டும் பிறபாட்டுக்காரர் தொடர்ந்து படித்து விட்டுப் பாட்டு முழுவதற்குமுரிய தருவைப் பாடுவர். இவ்வாறு தரு பாடப்படும்போது, தருவின் தாளத்திற்கேற்ப நடிகர் ஆடுவர். தரு பாடும் வழக்கம் தென் மோடிக்கு மட்டுமே உண்டு.

ஒவ்வொரு மோடிக் கூத்துக்கும் உடையும் வேறு வேறாக அமையும். வடமோடியில் வில்லும் அம்பும் தண்டாயுதமும் கட்டாரியும் ஆயு தங்களாக இருக்கும். தென்மோடியில் வாள் ஒன்றே ஆயுதமாகும். தாளக்கட்டுக்கு ஏற்ப ஆடும் ஆட்டங்களே. ஒவ்வொரு பாத்திரத்திற்குமேற்பத் தாளக்கட்டு வேறுபடும்.

உதாரணமாக, வடமோடியில் அரசன் களரிக்கு வரும்போது, தாளக்கட்டு முதலில் பாடப்பட்டு எட்டுமுறை தொடங்கிப் பன்னிரண்டு முறைவரை உலா ஆடப்படும். அதன்பின் பொடியடி, விசா ணம், எட்டு முதலிய ஆட்டங்கள் இடம் பெறும்.

மன்னார் பகுதியில் வழங்கும் கிராமிய நாடங்களின் வகைகள் மாதோட்டப் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு என இருவகைப்படும். மாதோட்டப் பாங்கைத் தென்பாங்கென்றும் தென்மெட்டென்றும், யாழ்ப்பாணப் பாங்கை வடபாங்கென்றும் வடமெட்டென்றும் வழங்குவதுண்டு. வடபாங்கிற் கடவுள் வாழ்த்து விருத்தப் பாவிலமையத் தென்பாங்கில் வெண்பாவிலமையும். இந்நாடகங்களிற் சுருக்கமாக அமைவன வாசகப்பாக்கள். வாசகப்பா என்ற சொல், வசனம் கலந்த பாட்டு எனப் பொருள்படும். ஒரு கதையை ஒருவர் மாதோட்டப் பாங்கிற் பாட இன்னொருவர் யாழ்ப்பாணப் பாங்கிற் பாடுதலுமுண்டு. ''மன்னார் மாவட்டத்தில் வழங்கும் நாடகங்கள் சிங்கள மொழியிலும் காணப்படுகின்றன. சிங்கள நாடக அமைப்பும் பாவகைகளும் மன்னார்ப் பகுதிக் கூத்துக்கள் போன்றவையே. விருத்தம், இன்னிசை, கலிப்பா, கலி, கொச்சகம், வெண்பா, தோடயம் போன்ற பாக்களும் பாவினங்களும் சிங்கள நாடகங்களிலும் அதே பெயர்களுடன் வழங்கப்படுகின்றன'' என்று ஒரு கட்டுரையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறியுள்ளார்.

தென்னிந்தியக் கிராமிய நாடகங்கள் ஈழத்துக் கிராமிய நாடகங்களுடன் சில அம்சங்களிலே தொடர்புடையன. கன்னட மாநிலத்து யஷகான நாடகத்திற்கும் மட்டக்களப்பு வடமோடி நாடகத்துக் கும் பல ஒற்றுமைகள் உள்ளன. ஒப்பனை, உடை, விறுவிறுப்பு, ஆட்டம், களரி போன்றவை இருவகை நாடகத்தி லும் ஒத்திருக்கின்றன. கதகளிக்கும் வடமோடிக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. வடமோடி போலவே கதகளியும் ஆட்டம், இசை, அபிநயம் ஆகியவற்றின் மூலம் கதையை உணர்த்துகின்றது. உடையலங்காரம், தயாரிப்பு, களரி அமைப்பு, ஒளியமைப்பு முதலியவற்றிலும் ஒற்றுமையைக் காணலாம்.

தமிழகத்தில் தெருக்கூத்துப் பல்லாண்டாக இருந்து வந்தும் இப்போது வழக்கற்றுப் போகின்றது. இலங்கையில் வீதி நாடகம் என்று அழைக்கப்படும் தெருக்கூத்து மக்களை விழிப்புணர்ச்சி ஊட்டுவதற்காக இன்றும் ஆடப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும். ஈழத்தில் மட்டக்களப்பிலும், மன்னாரிலும் கிராமிய நாடகம் பொதுமக்கள் வாழ்க்கையோடு பின்னிக்கிடக்கின்றது. மேலும், அவை அவர்களின் அழகுக் கலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. *

# சங்கீதப் பழக்கப்போன கழுதையின் கதை

**பாரதியார் கதை**
(சென்றவாரத் தொடர்ச்சி)

## தட்டிக்கொண்டான் செட்டிக் கதை

தட்டிக்கொண்டான் செட்டி கதை சிறிது நேரம் அதைக் குறித்துத் தர்க்கம் நடந்தது. கடைசியாக சந்நியாசி அரை மனது போலே ஒப்புக்கொண்டான். செட்டி வீட்டுப்பக்கத்தில் ஒரு தோட்டம். அந்தத் தோட்டத்தில் ரம்மியமான குடிசை. அங்கு சாமியார் குடியேறினான். போஜனம் மாத்திரம் கோயிலிலிருந்து கொண்டுவரும்படி செட்டி திட்டஞ் செய்தான். சந்நியாசி பரிசாரகனிடம் ''எனக்குப் புளியோதரை பிடிக் காது'' என்று ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னான்.

சாமியாருக்குப் பகல், இரவு, போஜனம் பின்வருமாறு செட்டியும் பரிசாரகனுமாகப் பேசித் தீர்மானம் செய்து கொண்டார்கள் - காலையில் மூன்றாம் நாழிகை - வெண் பொங்கல், தயிர் வடை, நெய்த்தோசை, பால்.

நடுப்பகல் - பஞ்சபஷ்ய பரமானத்துடன் அன்னம். பிறபகல் - பழங்கள், பால். இரவு - நடுப்பகல்போல; ஆனால், அன்னத்திற்குப் பதில் தோசை.

இரண்டு நாள் கழிந்தவுடன் செட்டி இன்னும் இரண்டு நாள் இருக்கச் சொன்னான். இப்படியாகப் பல தினங்களாயின.

மதுரை மாணிக்கஞ் செட்டி - ''தட்டிக்கொண்டானிடம் மானி அய்யனை அனுப்பினோமே, ஓரோலை கூட வரவில்லையே? என்ன செய்கிறானோ தெரியவில்லையே'' என்று யோசிக்கலானான்.

ஒருநாள் மாலையில் தட்டிக்கொண்டான் செட்டியும் ஆரூட ஸ்வாமியும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

செட்டி கேட்டான் - ஆனைக்கொரு காலம் வந்தால், பூனைக்கொரு காலம் வருமென்ற பழமொழியின் அர்த்தமென்ன?''

ஆரூட ஸ்வாமி சொல்லுகிறார் - கஜவதனம்; ஆனையென்பது விநாயகரைக் குறித்தாலும் குறிக்கலாம். அப்போது பூனைக்கிடமில்லை. பூனை இல்லையா? எலிவாகனமோ இல்லையோ? அந்த எலிக்கு விரோதம் ஒரு பூனை இராதோ? அந்தப் பிள்ளை யார் வீட்டு எலிக்கு ஒரு காலம் வந்தால் மேற்படி பூனைக்கு ஒரு காலம் வராதா? இப்படியும் ஒரு அர்த்தம் சொல்லலாம்.

வேதாந்தமாகவும் பொருள் சொல்லலாம்; ''ஆனையாவது மதம். பூனையாவது விவேகம். மதத்தின் காலம் போனால் விவேகத்தின் பெருமை விளங்கும்'' என்பது ஞானார்த்தம்.

இங்ஙனம் ஆரூடஸ்வாமி சொல்வதைக் கேட்டுத் தட்டிக்கொண்டான்.

செட்டி கேட்டான். ''மதமென்றால் சைவம், வைஷ்ணவம் அப்படியா?''

உடனே ஆரூட ஸ்வாமி - ''ஹூம்? ஹூம்! ஹூம்! அப்படியில்லை. காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறும் உட்பகை. இதிலே, ஐந்தாவதாகிய மதம் அதாவது கர்வம். மதம் பிடித்துபோய் நடக்கிற குணம். அது தீர்ந்த பிறகுதான் விவேகமேற்படும்''

செட்டி கேட்டான் - ''ஸ்வாமிகளே, என்னிடம் ஒரு கணக்குப் புஸ்தகம் இருக்கிறது. இருந்தது - நேற்று மாலையில் இருந்தது இன்று பகல் பார்த்தேன்; காணவில்லை. அந்த விடயம் வெளியே தெரியக்கூடாது. பகிரங் கமாகத் தேடக்கூடிய புஸ்தக மில்லை. இன்னார் எடுத்தவரென்று தெரியவில்லை. ஸ்வாமிதான் உத்தரவாக வேண்டும்'' என்றான்.

அப்போது ஆரூடஸ்வாமி- ''என்னை யஷிணி திருவாரூருக்குக் கூப்பிடுகிறது. நான் இன்றிரவு புறப்பட்டுப் போய் நாளை மாலையில் அங்கிருந்து திரும்புவேன். வந்த பிறகு சொல்லுவேன்'' என்றான்.

செட்டி - ''தெய்வமே துணை'' என்றான். சாமியார் - ''குருவுந்துணை'' என்றார். செட்டி - ''எனக்கு நன்மை கிடைக்குமா?''. சாமியார் - கிடைக்கும்''. செட்டி - ''என் துக்கம் தீருமா?''. சாமியார் - ''தீரும்''. செட்டி - ''கணக்கு என் கைக்குத் திரும்பி வந்தால் நான் எந்தத் தருமத்துக்கும் அவ்விடத்தில் கட்டுப்பட்டிருப்பேன்''.

சாமியார் - செட்டியாரே, செட்டியாரே... எமக்கு நீர் எவ்விதமான தர்மமும் செய்ய வேண்டாம். உம்முடைய கடமையை நேரே கவனித்தால் அதுவே போதும்''.

செட்டி - ''என் கடமை யாது?''

சாமியார் - ''இப்போது ஒரு ஸூத்ரம் மாதிரியாகச் சொல்லிவிட்டுப் போகிறேன். திருவாரூக்குப் போய் திரும்பி வந்தவுடனே அதை விளக்கிச் சொல்லுகிறேன். அதற்கு முந்தி உமக்கே பொருள் விளங்கினாலும் விளங்கிப் போகும். அந்த ஸூத்ரம் எப்படி என்றால்.... மயேமஏ இவ்வளவுதான். இது கிரந்தம். எழுதி வைத்துக்கொள்ளும்''

செட்டி அப்படியே ஒரு ஓலை நறுக்கில் எழுதி வைத்துக்கொண்டான்.

இரண்டு வாரங்களுக்கப்பால் தஞ்சாவூர்த் தட்டிக்கொண்டான். செட்டிக்குப் பின்வருமாறு ஒரு காகிதம் வந்தது.

மதுரையில் ஆரூட ஸ்வாமி தஞ்சை த.கொ. செட்டியாருக்கு ஆசீர்வாதம். ''நான் தங்களிடம் சொல்லிய ஸூத்ரத்துக்குத் தாத்பர்யம் என்னவென்றால், 'மற்றவனை ஏமாற்றியவனை மற்றவன் ஏமாற்றுவான்''

ரஸிகசிரோமணி என்ற கழுதை சொல்லுகிறது - ''தட்டிக்கொண்டான் செட்டி மதுரை மாணிக்கஞ் செட்டியின் காலிலே விழுந்து தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டான். நட்டத் தொகையில் பாதி பெற்றுக்கொண்டு மாணிக்கஞ்செட்டி தனது மைத்துனனை மன்னித்து விட்டான். அவனுடைய இடத்தில், தனது தஞ்சாவூர் கார்யஸ்தனாக மானி அய்யனையே நியமனம் செய்தான். ஆரம்பத்தில் மானி அய்யனை உபயோகமில்லாதவனென்றெண்ணி நகைத்தது மடைமையென்பதை மாணிக்கஞ்செட்டி தெரிந்துகொண்டு தனக்குப் பார்ப்பான். செய்த உபகாரத்தையும் அவனுடைய திறமையையும் வியந்து அவனுக்குப் பலவிதமான ஸன்மானங்கள் செய்தான். அதுபோலவே, ஓ கருவம் பிடித்த மதுகண்டிகையென்ற குயிற் பெண்ணே, நீ இப்போது என்னை நகைக்கிறாய். இன்னும் சிறிது காலத்துக்கப்பால் என்னுடைய திறமையைக் கண்டு நீயே ஆச்சரியப்படுவாய்'' என்றது.

தொடரும்...



# உடற்பயிற்சியால் உடலுக்கு நன்மையுண்டு

ஒரு பிரபல வீரர் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தபோது இறந்துவிட்டார். ஜொகிங் வீரர் ஒருவர் ஜொகிங் செய்யும்போதே மாரடைப்பால் இறந்தார். இதுபோன்ற செய்திகள் கடந்த பல ஆண்டுகளாக அடிபட்ட படிதான் உள்ளன. இதற்கெல்லாம் அவர்களது குடும்ப வரலாறு ஓரளவாவது காரணமாக இருக்கலாம் என்னும் உண்மை மறக்கப்பட்டு, அவர்கள் இறந்தபோது செய்த செயல் முக்கியத்துவம் பெற்று விடுகிறது.

பலர் உடற்பயிற்சியே செய்வதில்லை. இது ஒரு தவறு என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் உட்கார்ந்த இடத்திலேயே வாழ்வை ஓட்டிவிடும் எண்ணத்திற்கு மேற்கண்ட செய்திகள் உரமிடுகின்றன. ஆனால், இக்கால வாழ்வில் உடற்பயிற்சிக்குத் தனி இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதைப் பல்வேறு உண்மைகள் விளக்கிக் காட்டுகின்றன.

இக்காலத்தில் பெரும்பாலான இறப்புகள் மாரடைப்பு, நாளத்தாக்கு (ஸ்ட்ரோக்)களால் நேருகின்றன. வெளிநாடுகளில் மட்டுமல்ல, எமது நாட்டிலும் இது மிக மிக உண்மை. மாரடைப்பையும், நாளத்தாக்கு தலையும், உடற்பயிற்சியால்தான் குறைக்க வேண்டும் என்று அண்மைக் காலச் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

உடற்பயிற்சியினால் மாரடைப்பு வந்தது என்பதைவிட, பின்வரும் காரணங்கள் அதற்குப் பின்னணியாக நின்றுள்ளன என்பதே சரியாக இருக்கும்.

உடற்பயிற்சி செய்யாமல் இருந்து, நன்றாகச் செய்ய ஆரம்பிக்க இரண்டு வாரங்களில் உயர் இரத்த அழுத்தம் சுமார் 10 mm அளவு குறைந்துவிடுகிறது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

உடற்பயிற்சி செய்யத் தகுதியுள்ள ஆளுக்கு உயர் இரத்த அழுத்தம் வரும் வாய்ப்பு 30 வீதம் குறைவு என்று ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஒழுங்கான உடற்பயிற்சி நல்ல உடல்நலத்திற்கு வழிவகுப்பது உண்மை என்று தோன்றுகிறது.

அளவுக்கு மீறிய உடல் எடை இதய நோயின் காரணிகளில் ஒன்றாக உள்ளதை நீண்ட காலத்திற்கு முன்னரே ஆராய்ச்சிகள் சுட்டிக் காட்டியுள்ளன. உடல் எடை இழப்பதற்கும் உடலை நலமாக வைத்திருக்கவும் மிக முக்கியத் தேவைக ளில் உடற்பயிற்சியும் ஒன்று. எமது உடலின் தசைகள் மட்டுமே கொழுப்பை எரிக்கின்றன. மற்ற திசுக்கள் யாவும் மாப் பொருள் (கார்போஹைட்ரேட்) களைக் கொண்டே உயிர்வாழ்கின்றன.

தசைகள் மாப் பொருளினாலோ, கொழுப்பினாலோ இயங்கக்கூடும். என்றாலும் அவை மாப் பொருள்களையே பெரிதும் பயன்படுத்துகின்றன. எனவே, திட்டமிட்ட உணவும் உடற்பயிற்சியும் நலமான உடல் எடை இழப்பிற்குத் தேவையாக இருக்கின்றன.

உணவானது மாப் பொருள்களின் கூட்டுப் பொருள்களாகவும், நார்பொருள் மிகுந்ததாகவும் இருக்கவேண்டும். ஏனெனில், அவை மெதுவாக எமது உடலால் உட்கவரப்படுகின்றன. மிக்க குறைவாகவே கொழுப்பாக மாற்றப்படுகின்றன.

சேமிக்கப்பட்ட கொழுப்பை இடம் மாற்றவும், எரிக்கவும் எமது உடலானது இரண்டாம் நிலை எரி பொருளான கொழுப்பை எரிக்கும்படி செய்யப்பட வேண்டும். இதை தசைகளின் இயக்கத்தால் மட்டுமே செய்யமுடியும். ஓடுதல், நடத்தல் அல்லது பிற இயக்கங்கள் போன்ற தொடர் செயல்பாடுகள் சிறந்தவை.

டென்னிஸ் விளையாடுதல், தோட்டம் போடுதல் அல்லது பிற வேலைகள், ஓடிப்போய்ப் பேருந்தைப் (பஸ்) பிடித்தல் போன்ற விட்டுவிட்டு நடைபெறும் செயல்பாடுகள் எதுவும் துணைபுரிவதில்லை. இப்படிப்பட்ட செயல்களின்போது உடலானது எமது தசைகளில் சேமிக்கப்பட்டுள்ள மாவுப் பொருள்களையே பெரிதும் பயன்படுத்துகிறது. பின்னர் ஓய்வு எடுக்கும்போது மீண்டும் தேவையான மாப் பொருள்களை அதிகரித்துக்கொள்கிறது.

இப்படிக் குறைந்த நேரத்தில் உடலிலுள்ள மாவுப் பொருள்களை செலவழித்து விடுவதால், எமக்குக் களைப்பு உணர்வு உண்டாகிறது. நாம் ஓய்வு எடுக்கும்போது, கல்லீரலில் உள்ள மாப் பொருள்கள் இடம் மாற்றப்படுகின்றன. கல்லீரலில் உள்ள மாப் பொருள்கள் முழுவதும் அகன்றதும் பசி எடுக்கிறது. பசி எடுத்தால் இழந்த மாப் பொருளின் அளவை ஈடு செய்ய சாப்பிடத் தோன்றுகிறது. உடலின் கொழுப்பு கொஞ்சமும் தொடப்படுவதில்லை.

தொடர்ச்சியான உடற்பயிற்சியே கொழுப்பை பயன்படுத்திக் கொள்ளும்படி தசைகளைத் தூண்டுகின்றது. நல்ல உடற்கட்டுள்ள மனிதர், நாளொன்றுக்கு 20 நிமிடங்களோ அல்லது அதற்கும் சற்று அதிகமாகவோ தொடர்ச்சியான நல்ல உடற்பயிற்சியில் ஈடுபடலாம்.

உடலளவில் இயலாத மனிதர் கொழுப்பைப் பயன்படுத்த தன் தசைகளை இயக்குவது கடினம். எனவே, உடல்நலம் முக்கியம். இந்த உடல் நலத்தைப் பெற ஒழுங்கான நீண்ட கால உடற்பயிற்சி செய்வது ஒன்றுதான் வழி.

உடல்நலத்தில் பெரும் முன்னேற்றத்தைக் காண நாடித் துடிப்பு அளவு உடற்பயிற்சியின் போது அதனுடைய உச்ச அளவில் 70 வீதத்தை அடையவேண்டும். இதற்கு ஓர் எளிய வழிமுறையைக் கையாளலாம். ஒரு மனிதனின் உச்சநிலை நாடித்துடிப்பு அளவு என்ன என்பதை அறிய 220 இல் அவனது வயதைக் கழிக்க வேண்டும். இதுதான் அவனது உச்சநிலை நாடித்துடிப்பு அளவு.

இதைவிடக் குறைவான நாடித்துடிப்பு அளவு இருந்தால், இன்னும் அதிக நேரம் உடற்பயிற்சி செய்யவேண்டும். நீங்கள் நடத்தலைத் தெரிந்து கொண்டீர்களானால், சிறந்த பயனைப் பெற ஒவ்வொரு நாளும் 40 நிமிடங்கள் நடக்கவேண்டும்.


புவிஈர்ப்பு விசையுடன் தொடர்பற்ற உடற்பயிற்சிகள் (நீந்துதல்) உடல் எடைக் குறைப்புக்கும் அவ்வளவு நல்லதல்ல. கொழுப்பைச் சிறந்த முறையில் எரிக்கும் தசைகள் நமது கால் தசைகளைப் போன்ற தாங்கும் தசைகளாகும்.

நடை ஓட்டப் பயிற்சியும், மூச்சு மண்டலப் பயிற்சிகளும் மூட்டுகளைச் சேதப்படுத்தும். ஆகையால் சரியான காலணிகளை அணிந்து, மென்மையான தரையில் பயிற்சியை அதிகரித்துக்கொண்டு போவதும் அபாயகரமானதுதான், உடலானது படிப்படியாகச் சரிக்கட்டிக் கொள்ளத் தக்க நேர இடைவெளி தாருங்கள். அளவுக்கு மீறி உடற்பயிற்சியில் ஈடுபடுகிறவர்களும், அதிவிரைவாக இயங்கிப் பயிற்சி செய்கிறவர்களும் காயம் படும் அபாயத்திற்கு ஆளாவார்கள்.

விரைவாக நடந்துவிட்டு வருவதுதான் மிகச் சிறந்த உடற்பயிற்சி. ஆயினும் நீங்கள் எப்படிப்பட்ட உடற்பயிற்சியைச் செய்தாலும் அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கவேண்டும். அதனை நீங்கள் ஒழுங்காகச் செய்து வரவும் வேண்டும்.

### புகைத்தல்

இதயக் கோளாறுக்கு இன்னொரு காரணம் - புகைத்தல். உடற்பயிற்சி செய்பவர்கள், புகைக் கும் ஆர்வத்தை இழக்கிறார்கள். ஏனெனில், புகைத்தல் உடற்பயிற்சி செய்யும் தகுதியைப் பெருமளவு குறைத்துவிடு கிறது என்பதை அவர்கள் விரைவிலேயே உணர்ந்துகொள்கின் றனர். உடற்பயிற்சி செய்கிறவர்களி டையே புகைக்கும் பழக்கம் பெருமளவு குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



### மன உளைச்சல்

ஒழுங்காக உடற்பயிற்சி செய்கிறவர்கள் உடல் மன உணர்வு சார்ந்த இறுக்க நிலைகளைச் சிறப்பாக ஏற்றுக் கையாளக் கூடியவர்களாக இருக்கின்றனர். உடல்நலம் உடையவர்கள் வாழ்வின் துன்ப - இழப்புகளை எளிதாக ஏற்றுக் கையாள் கின்றனர். உடற்பயிற்சி இயக்க நீர் (ஹோர்மோன்) சார்ந்த எண்டார்பன்களை உடலில் சுரக்கச் செய்து, இயற்கையான நல உணர்வைத் தோற்றுவிக்கிறது. உடற்பயிற்சி செய்கிறவர்கள் நன்றாக உறங்குகிறார்கள்.

மூன்று வகைக் களைப்புகள் உள்ளன. மனக்களைப்பு, தூக்கம் கெட்டதால் களைப்பு, உடல் களைப்பு என்பவையே அவை. மனக் களைப்பும் தூக்கம் கெட்டதால் உண்டாகும் களைப்பும் நன்கு உறங்குவதால் அகலுகின்றன. உடல் களைப்புத்தான் உறக்கத்தை வருவிக்கும், மனஉளைச்சலை நீக்கும் மாமருந்து. வேலை விட்டு வீட்டுக்கு வந்ததும் மனச்சோர்வு வருகிறது. ஒரு கிலோ மீட்டர் தூரம் ஓடினால், அது நீங்கி, அமைதியான உணர்வு தோன்றுகிறது.

நெற்றியிலுள்ள தசைகள் மூலம் மன அமைதியின்மை அளவிடப்படுகிறது. நல்ல தொடர்ச் சியான உடற்பயிற்சியில் ஈடுபடுவதனால் இதயநோய், நாளத்தாக்கு (ஸ்ட்ரோக்) ஆகியவற்றையும் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

***



# அதிக புரோட்டின் தேவையா?

சத்துள்ள உணவு அருந்தவேண்டும் என்றால் அதிகமான புரோட்டின் தேவை என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அது அல்ல.

18 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உளவியல் ஆராய்ச்சி நிபுணர்கள் சத்துள்ள உணவு என்றால், புரதச் சத்துள்ள உணவு என்று கண்டுபிடித்தார்கள். அவர்கள் அதைக் கண்டுபிடிப்பதற்கு அடிப்படை நம்முடைய தசை நார்கள் முழுவதும் புரோட்டினால் ஆனவை என்பதால்தான். இயல்பாகவே இந்த புரோட்டினை நிறைய உட்கொண்டால் உடல் வலுவானதாக இருக்கும் என்று நினைத்து கொஞ்சம், கொஞ்சமாக கணக்குகள் போட்டு நாளொன்றுக்கு 115 கிராம் வரை தேவை என்று மதிப்பிட்டார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், கட்டுமஸ்தான தசைவாகு உள்ள உழைக்கும் மனிதன் 50 கிராமுக்கு குறைவாகவே புரோட்டின் எடுத்துக் கொள்கிறான். தசைகள் வலுவாக உள்ளன.

இந்த உண்மையை கவனித்து மேலும் ஆராய்ச்சிகள் செய்தபோது, இப்போது நாள் ஒன்றுக்கு ஆண்களுக்கு 56 கிராமும், பெண்களுக்கு 45 கிராமும் புரோட்டின் ஒரு நாளைக்குப் போதுமானது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.


அதிகப்படியாக புரோடின் உணவைச் சாப்பிடும் விலங்குகள் ஆக்ரோஷம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. அதேசமயத்தில் உடல் பலம் அதிகம் இல்லாததாகவும், விரைவில் இறக்கக் கூடியதாகவும் உள்ளன. அதே சமயத்தில் தாவரங்களில் உள்ள குறைவான புரோட்டினை உட்கொள்ளக்கூடிய யானை, குதிரை போன்ற விலங்குகள் அதிக பலமும், கூடுதல் வாழ்நாளும் உள்ளதாக இருக்கின்றன.

இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில், இன்னும் தீவிரமாக ஆராய்ந்து பார்க்கும் போது, அதிகமான புரோட்டின் உடலுக்குப் பல தீங்குகளை விளைவிக்கிறது என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அதிகமான புரோட்டின் உட்கொள்ளும் போது, சிறுநீரகத்தில் Load (சிறுநீரகத்தின் வேலைப் பளு) அதிகமாகிறது. புரோட்டின்களில் சிறந்தவை விலங்கு புரோட்டின்கள் தான் என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

அதற்குக் காரணம் உடலுக்குத் தேவையான 22 வகை புரோடின்களில் குறிப்பிட்ட 11 வகை உணவின் மூலமாகத்தான் கிடைக்கவேண்டும் என்று கண்டுபிடித்தார்கள். அந்தத் தேவையான எல்லா 11 வகைகளும் விலங்குப் பொருட்களில் தேர்ந்து கிடைப்பதால் இவை First Class Protein (சிறந்த புரோடின்) என்று தீர்மானம் செய்யப்பட்டது.

மாமிசம், மீன், முட்டை, பால் உணவுகள் அனைத்தும் First Class Protein ஆகும். ஆனால், தாவரப் புரோடின்களான பருப்பு வகைகள், பயறுகள், நிலக்கடலை, பாதாம் போன்ற கொட்டை உணவுகள் இவற்றில் 11 வகைகளும் கிடைக்காததால் இவை தரம் குறைவா னவை என்று கருதப்பட்டது. ஆனால், உண்மையில் மனிதர்களின் குடல் அமைப்பு தாவர



உணவுகளை எடுத்துக் கொள்வதற்குத் தான் ஏற்றதாக அமைந்துள்ளது.

விலங்கு உணவுகள் அதிகம் எடுத்துக் கொள்ளும் மனிதர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாக இருப்பதால், நோய்வாய்ப்பட்டால் குணமடைவதற்கு அதிக காலமாகிறது. உணர்ச்சி வசப்படுவதால் கூடுதலாக இருக்கிறது.

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம் பெற்ற சம்பவங்களை பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் எல்லாளன் எழுதிய 'தனி மரம்' என்ற உண்மைக்கதை வெளி வந்துள்ளது.

# தனிமரம்

எல்லாளன்

இருளைக் கிழித்துக்கொண்டு சூரியன் தனது கடமைக்கு புறப்பட்டு வருகின்ற அந்த அதிகாலைப் பொழுது வழமை போலவே அந்தக்கிராமம் எழுச்சிகொள்ளத் தொடங்கிவிடும். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திருவையாறு எனும் செழிப்பான விவசாயக் கிராமம் அது. ஒரு காலத்தில் கிளிநொச்சிக் குடியேற்றம் நடந்தபோது படித்த வாலிபர்களுக்கே 3 ஏக்கர் வீதம் ஒவ்வொருவருக்கும் காணிகள் வழங்கப்பட்டன. இங்கு 75 வீதமான மக்களின் பரம்பரை தொழிலே விவசாயம்தான். அங்கு ஒவ்வொரு காணிகளிலும் மா, பலா, தென்னை என பல்வேறு பயன்தரும் மரங்களும் பச்சை பசேலென வாழை, காய்கறித் தோட்டங்களும் கண்ணைப் பறிக்கும். வீதிகளில் பயணம் செய்தால் கிருமிநாசனிகளின் மணம் மூக்கைத் துழைக்கும். இந்த அழகிய விவசாயக் கிராமத்திலேதான் காந்தனின் வீடும் உள்ளது.

காந்தனின் குடும்பத்தில் மூன்று சகோதரர்கள். மூத்த அண்ணா வினோத் 2000 ஆம் ஆண்டு நடந்த யுத்தத்தில் சாவை அணைத்துக்கொண்டார். இரண்டாவது அக்கா மல்லிகா க.பொ. த. உயர்தரம் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார். குடும்பத்தில் மூன்றாவதும் கடைக்குட்டியும் காந்தன்தான். காந்தன் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்தான். சாந்தனின் அப்பா மணியமும் ஒரு விவசாயிதான். காந்தனும் அக்காவும் காலையில் பாடசாலைக்கு புறப்படுகின்ற நேரத்தில் அப்பா மணியமும் அவரது சைக்கிள் கரியரில் மரக்கறிகள், வாழைக்குலைகள் கட்டிக்கொண்டு சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்வார். இந்த கிராமத்தில் மிகவும் செல்வச் செழிப்பாக வாழ்ந்துகொண்டிருந்த குடும்பங்களின் வரிசையில் காந்தனின் குடும்பமும் விதிவிலக்கல்ல. காந்தனும், அக்கா மல்லிகாவும் பெற்றோரின் செல்லப்பிள்ளைகள். இரண்டு பேருமே கல்வியில் மட்டுமன்றி கலை, விளையாட்டு என எல்லா செயற்பாடுகளிலும் முன்னணி மாணவர்களாகவே திகழ்ந்தனர். காந்தனுடைய குடும்பம் கொடூர போரின் சூழலில் இரண்டு தடவைகள் இடம்பெயர்ந்து குறிப்பிட்ட சில காலம் வேறிடத்தில் இருந்துவிட்டு மீண்டும் சொந்த இடம் திரும்பி சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. இவ்வாறு இடம்பெயர்ந்து வேறிடத்தில் இருந்து மீண்டும் சொந்த இடம் திரும்பிய வேளையிலும் இவர்களது கல்வி செயற்பாடுகளில் எதுவிதமான வீழ்ச்சியும் ஏற்படவில்லை.

தமது நல்ல பரீட்சை பெறுபேற்றுக்காக விருப்பத்துடன் போட்டிபோட்டு காந்தனும் அக்கா மல்லிகாவும் கல்வி கற்று வந்தனர். அக்கா நான் டாக்டராக வருவேன் என்றால், நான் என்ஜினியராக வருவேன் என்று காந்தன் உறுதியுடன் கூறுவான். இதை அம்மாவும் அப்பாவும் கேட்டுக்கொண்டு சிரித்து மகிழ்வர்.

இவ்வாறான காலவோட்டத்தில் 2005 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் மீண்டும் கொடூர யுத்தத்தினால் கிளிநொச்சி இடம்பெயர்வு ஏற்பட்டபோது காந்தனின் குடும்பமும் கையில் கிடைத்த பொருட்களுடன் மட்டும் கிளிநொச்சியில் இருந்து விசுவமடு, சுதந்திரபுரம், தேவிபுரம், இரணைப்பாலை என உயிருக்கு அஞ்சி இடம்பெயர்ந்து, இடம்பெயர்ந்து இறுதியாக அம்பலவன் பொக்கணையில் தற்காலிகமாக வீடமைத்து (டெண்ட்) இருந்தது. அப்போது ஓரிரு நாட்களில் அங்கும் அகோர எறிகணை வீச்சு, பல் குழல் வீச்சு. ஓடுவதற்கு இனியும் இடமில்லாத காரணத்தால் எல்லோருமே அங்கு பதுங்குகுழி அமைத்து பதுங்குகுழி வாழ்க்கை வாழ ஆரம்பித்தனர்; ஷெல் சத்தம் இல்லாத நேரம் மட்டும்தான் வெளிவேலைகள். ஏனைய முழுநேரமும் பதுங்கு குழியில்தான்.

2009 ஏப்ரல் 19 ஆம் திகதி அதிகாலை ஷெல் சத்தம் சற்று குறைந்திருந்த வேளையில் அப்பா மணியம் தமது பதுங்கு குழியை திருத்தும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார். வீட்டிடுக்கு தண்ணீர் எடுப்பதற்காக பக்கத்து குழாய்க் கிணற்றுக்கு அக்கா மல்லிகாவும் காந்தனும் புறப்பட்டபோது, "பிள்ளைகள் கவனம். ஷெல் சத்தம் ஏதும் கேட்டால் பக்கத்து அன்ரி வீட்டுப் பங்கரில் இருந்துவிட்டு ஷெல் சத்தம் நின்றதும் வாங்கோ. அவசரப்பட்டு வர வேண்டாம்" என்ற அம்மாவின் வார்த்தை கண்டிப்பாக இருந்தது. "நான் சொன்னபடி செய்வேன். இவன்தான் சொல்லுக் கேட்கமாட்டான். இவனுக்கு இன்னும் ஒருக்கா சொல்லுங்கோ" என்று அக்கா சொன்னபோது அக்காவின் வாயை பொத்திக்கொண்டு "உங்கட பிரசங்கத்தை நிப்பாட்டுங்கோ" எனக் கூறி அக்காவை இழுத்துக்கொண்டு குழாய்க்கிணற்றுக்கு போனபோது அங்கு நீர் நிரப்ப நிறைய சனம். எல்லோரும் அமைதியான நேரம் (ஷெல் சத்தம் இல்லாத) மட்டுமே குடிதண்ணி கூட எடுக்க வேண்டும். அதுதான் அன்றைய சூழ்நிலை. காந்தனும் அக்கா மல்லிகாவும் நீர் நிரப்ப வரிசையாக நின்றனர். ஒரு சில நிமிடநேரத்தில் ஏற்கனவே இராணுவம் கைப்பற்றியிருந்த பகுதியிலிருந்து 'டுபு...டுபு...டுபு...' என்று மல்ரி ஷெல் அடிக்கும் சத்தம் கேட்க எல்லோரும் பதற்றப்பட்டு விழுந்துபடுக்கின்றனர். "அக்கா விழுந்து படுங்கோ" என்று சொல்லி காந்தனும் மணல் தரையில் விழுந்து படுக்கின்றான். கண் இமைக்கும் நேரத்தில் பெரிய தொடர்ச்சியான வெடியோசைகள். எங்கும் ஒரே புகைமண்டலம். சிறிது நேரத்தில் "ஐயோ அம்மா..." என்ற கதறல் ஒலி எங்கும் காதைப் பிளக்கின்றது. பதற்றத்துடன் தண்ணியும் எடுக்காமல் இருவரும் வீடு நோக்கி ஓடினார்கள். அங்கு போனபோது வீடு இருந்த இடத்தையே காணவில்லை. வீட்டுக்கு மேலே ஷெல் விழுந்து வெடித்த சிதறல்கள் மட்டுமே. அம்மாவும் அப்பாவும் சிதறி இரத்தமும், சதைத்துண்டங்களுமே எஞ்சியிருந்தன. இறந்த தாய், தந்தையின் உடலைக் கூடப் பார்க்க முடியாத கொடுமை காந்தனுக்கும், மல்லிகாவுக்கும் ஏற்பட்டது. "இரண்டு பேருமே எங்களைத் தனியாக விட்டு விட்டுப் போய்விட்டீங்களே...? இனி என்ன நாங்கள் செய்வது" என நிலத்தில் விழுந்து புரண்டு அழுதனர். எங்கும் ஒரே அழுகுரல்கள்.



யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? பக்கத்து வீடுகளிலும் மரண ஓலங்கள்தான். அந்த சத்தங்களுக்கு மேலாக வேட்டுச்சத்தங்களும், ஷெல் சத்தங்களும் காதைப் பிளந்தன. "எங்களுக்கு இது என்ன கொடுமை; இனியும் நாங்கள் எங்க போறது?" பெற்றோரை இழந்த துயரில் காந்தனும், மல்லிகாவும் தேம்பிக்கொண்டிருந்தனர். சண்டை கடுமையாக நடந்து கொண்டிருந்தது. அன்று மாலை அம்பலவன் பொக்கணைப் பிரதேசம் முழுமையாக இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் வருகின்றது.

ஒலிபெருக்கி மூலம் இராணுவம், மக்கள் இந்தப் பகுதியில் இருக்கக் கூடாது. ஏற்கனவே இராணுவம் நிலைகொண்டிருந்த ஆனந்தபுரம் பக்கம் உடனே செல்லுங்கள் என்று கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. இந்த செய்தியைக் கேட்ட காந்தனும், மல்லிகாவும் ஏனைய மக்களுடன் சேர்ந்து ஆனந்தபுரத்தை நோக்கி சென்றனர். அங்கு மக்கள் கூட்டமாக சென்றபோது இராணுவம் இடையில் மறித்து, ஆண், பெண், குழந்தைகள், வயோதிபர்கள் என வேறுபாடின்றி கடுமையான உடல் சோதனை நடத்தினார்கள். அந்தச் சம்பவம் காந்தனை மிகவும் பாதித்தது. எல்லா சோதனையும் ஆண் இராணுவம் தான் செய்தது. தான் ஆண் என்பதால் பரவாயில்லை. அக்காவின் நிலையை யோசிக்கும்போது தலையே வெடிக்கும் போலிருந்தது. ஊரை இழந்தோம்; பெற்றோரை இழந்தோம். உறவுகளை இழந்தோம், உடமைகளை இழந்தோம். கடைசியாக எம்மிடம் மீதமுள்ள மானத்தையும் இழக்கின்றோம். இதை யாரிடம் சொல்வது? புலம்பினான்.

இராணுவத்தின் சோதனைகள் முடிந்து. இளம்பெண்கள், இளைஞர்கள் எனத் தரம் பிரிக்கப்பட்டு 150 ,இற்கும் மேற்பட்ட பேருந்துகளில் ஏற்றப்படுகின்றார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அக்காவை பிரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. உடனே காந்தன் பக்கத்தில் நின்ற இராணுவச் சிப்பாயிடம் போய், "சேர்... நான்... அக்கா தனியா.... நான் அக்காவுடன் போகவேண்டும்" எனக் கெஞ்சிக்கேட்டான். அந்தச் சிப்பாய் நக்கல் சிரிப்புடன், "அக்காவா?" கொச்சைத் தமிழில் "நீங்கள் உங்கட பஸ்ஸில் போறது. அக்கா அங்க வாறது... எல்லாம் ஒரு இடத்துக்குத்தான் வாறது" என்றான். அதை நம்பியவனாகக் காந்தன் தனது பேருந்தில் ஏறிக்கொண்டான்.

பேருந்துகள் ஒன்றன் பின் ஒன்றாக இராணுவ பாதுகாப்புடன் புறப்படுகின்றன. எல்லாப் பேருந்துகளும் எங்கே போகின்றன என்று எவருக்குமே தெரியாது. எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பது மட்டும்தான். மறுநாள் வவுனியாவில் உள்ள பல்வேறு முகாம்களிலும் மக்கள் இறக்கப்பட்டனர். காந்தன் சென்ற பேருந்து செட்டிக்குளம் இராமநாதன் முகாமில் நின்றது. அந்த முகாமில் முப்பதுக்கு மேற்பட்ட பேருந்துகளில் மக்களை இறக்கினார்கள். பேருந்தில் இருந்து இறங்கியதும் காந்தன் ஓடி ஓடி சென்று அக்காவை ஒவ்வொரு பேருந்துகளில் தேடினான். ஆனால் ஏமாற்றம் மட்டுமே காத்திருந்தது. அக்காவை காணவில்லை. அழுதான் முழு சோகத்திலே அந்த முகாம் கூடாரத்தினுள் காந்தனின் கண்ணீருடனான வாழ்க்கை. காந்தன் தான் எப்படியும் அக்காவை வேறு முகாம்களில் தேடி கண்டுபிடித்து விடுவேன் என்ற நம்பிக்கையுடன் இருந்தான். அவன் தனது முகாமில் இருந்துகொண்டே பத்திரிகை ஊடாகவும், வேறு முகாம் நிர்வாக அதிகாரிகள் ஊடாகவும் அக்காவைத் தேடிக் கடிதங்கள் அனுப்பிக்கொண்டே இருந்தான். ஒரு இடத்தில் இருந்தும் பதில் இல்லை.

இப்படியாக 7 - 8 மாதங்கள் முகாம் கூடாரத்தில் வாழ்க்கை உருண்டோடியது. இனி மீள்குடியேற்றம் செய்யப்போகிறார்களாம் என்ற செய்தி பரவிக் கொண்டிருந்தது. அதற்கான பதிவு வேலைகளும் முகாம்களில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. காந்தன் மீள தனது சொந்த இடத்துக்கு போறதுக்கு விருப்பமில்லாதவனாக முதலில் என் அக்காவைத் தேடிப் பிடிக்க வேண்டும். அதற்குப் பிறகு யோசிப்போம் என சிந்தித்தவனாக வவுனியாவில் உள்ள பள்ளி நண்பன் ஒருவனின் வீட்டிற்கு சென்று அங்கு நண்பனின் உதவியுடன் வவுனியாவில் அக்காவை தேடலாம் என்ற நம்பிக்கையுடன் வவுனியா சென்றான். அங்கு சென்ற அவன் நண்பனுடன் வவுனியாவில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள அனைத்து முகாம்களுக்கும் ஐ.சி.ஆர்.சி., மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள், பொலிஸ் நிலையங்கள் என காந்தனின் கால்படாத இடமே இல்லை என்று சொல்லலாம். அப்படி மிகவும் கஷ்டப்பட்டு அக்காவை தேடியும் அக்கா பற்றிய ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. எல்லா இடங்களிலும் ஏமாற்றம் மட்டுமே காத்திருந்தது. செல்கின்ற இடத்தில் எல்லாம் அங்குள்ள அதிகாரிகளின் கைகளைப் பிடித்து, "என்ர அக்காவை எப்படியும் தேடித் தாங்கோ" என்று கெஞ்சிக் கேட்டான். அழுதும் மனம் குமுறுவான். "முயற்சி செய்கின்றோம். தகவல் ஏதும் இருந்தால் உங்களுடன் தொடர்பு கொள்கின்றோம்" என்ற பதில் மட்டுமே காந்தனுக்கு கிடைத்தது.

இப்படி காலம் உருண்டோடிக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் வவுனியா நகரத்துக்கு வந்த காந்தன் காட்டுத் தீ போல பரவிக்கொண்டிருந்த அன்றைய நாளிதழ் செய்தி, "வன்னியில் மீள்குடியேற்றம் செய்த பகுதி மலசலக்கூடக் கிடங்கிலிருந்து 10 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அந்த சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வருவதாக..." அதுதான் அந்த செய்தி. உடனே காந்தன் வைத்தியசாலைக்கு விரைந்து சென்று காத்திருக்கின்றான். அன்று மாலையே சடலங்கள் பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்படுகின்றன. சடலங்கள் 3 - 4 பொலித்தீன்களால் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றாக அடையாளம் காண பொலித்தீன் பைகள் பிரிக்கப்படுகின்றன. அவற்றை அடையாளம் காணுவதற்காக ஆயிரக்கணக்கான காணாமல் போனவர்களின் உறவினர்களின் கூட்டம். காந்தன் ஒவ்வொரு உருக்குலைந்த சடலங்களாக பார்த்து பார்த்து எட்டாவது சடலத்துக்கு கிட்ட வந்த போது பெரிய இடி தலையில் விழுந்த ஒரு உணர்வு. "ஐயோ! அக்கா!!" எனக் கத்துகிறான். பக்கத்தில் நின்றவர்கள் கூட விழித்து நிற்கின்றனர். "இது என் அக்காவுடையது தான்" கடைசியாக அக்கா அணிந்திருந்த நீல நிறச் சட்டையுடன் அக்காவின் நீண்ட கூந்தலும் காந்தனுக்கு அக்காதான் என்ற உண்மை நிலைமையை நன்கு விளங்க வைத்துவிட்டது. "அக்கா, நீயும் என்னைத் தனியா விட்டுவிட்டுப் போய்விட்டாயா...?" எனக் கதறி நிலத்தில் புரண்டு புரண்டு கதறினான். யாராலும் காந்தனை சமாதானப்படுத்த முடியவில்லை. நான் இனித் தனிமரம் தொடரும்தான். எனக்கு ஏன் வாழ்க்கை என அழுது புலம்பினான்; எனக்கு நடந்த துன்பம் போல தமிழனாகப் பிறந்த எவருக்கும் ஏற்படக்கூடாது. இனி நான் அநாதை எனக்கென்று இவ்வுலகில் ஒருவரும் இல்லை; என தேம்பித்தேம்பி அழுது நடைபிணமாக அங்கிருந்து அகன்றான். மின்னல் வேகத்தில் ஒரு ஞாபகம். கடைசியாக வன்னியில் ஒட்டப்பட்டிருந்த ஒரு துண்டுப் பிரசுரம் 'மானத்தோடு போராடாது விட்டால் மரணமும் புதைகுழியும் மட்டுமே எமக்கு எஞ்சியிருக்கும்' இதுதான் எனக்கு இன்று நடந்திருக்கின்றது. *

# பூமி பிளந்தபோது

5 புத்தாக்கம்: கே.கான் 6




# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை



ஒரு வீட்டில் நான்கு பூனைகள் வளர்ந்து வந்தன. இரண்டு பூனைகள் வெள்ளையாகவும்,மூன்றாவது கருப்பாகவும்-நான்காவது இளஞ்சிகப்பாகவும் இருந்தன. நான்கு பூனைகளும் அடிக்கடி சண்டையிட்டுக்கொள்ளும்.

ஒருநாள் அந்த வீட்டு ஆயாவுக்கு உடல் நலம் சரியில்லை. படுத்துவிட்டாள். பாவம், பூனைகளுக்கு ஒரே பசி. வீடு முழுக்கத் தேடிப் பார்த்தன. சாப்பிட ஒன்றுமே இல்லை.

அலுமாரியைப் பார்த்தபோது அங்கு ஒரே ஒரு ரொட்டித்துண்டு காணப்பட்டது. ஆனால், அவற்றுக்கு அது எட்டவில்லை.



உடனே கருப்புப் பூனையின் மேல் வெள்ளைப் பூனை ஏற, அதன் மேல் இன்னொரு கருப்புப் பூனை ஏற, அதன் மீது நான்காவது பூனை ஏறியது. ரொட்டித் துண்டை எடுத்தது.

நான்கு பூனைகளுக்கும் அதைப் பங்கு போட்டுச் சாப்பிட மனமில்லை. ஒன்றையொன்று ஏமாற்றி தானே சாப்பிட்டு விட வேண்டும் என்று ஒவ்வொன்றும் நினைத்தது.

அப்போது அவ்வழியாக ஒரு சுண்டெலி வந்தது. சுண்டெலியைப் பார்த்த பூனைகள் ரொட்டித் துண்டை மறந்து விட்டன. சுண்டெலியைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டன.

பாவம், சுண்டெலி. பூனைகளிடமிருந்து தப்பிக்க ஒரு தந்திரம் செய்தது. "பூனை அண்ணன்மார்களே, காலையிலிருந்து நான் ஒன்றும் சாப்பிடவில்லை. எனக்கு அந்த ரொட்டித்துண்டைக் கொடுத்து விடுங்கள். அதைச் சாப்பிட்டால் என் பசியும் அடங்கும், அத்துடன் என் உடலும் பெருக்கும். அப்புறம் என்னை நீங்கள் கொன்று சாப்பிடலாம்'' என்றது.

புத்தியில்லாத பூனைகள் அப்படியே செய்தன. ரொட்டித் துண்டைச் சாப்பிட்ட சுண்டெலி ஏப்பம் விட்டது. உடனே பூனைகள், "நான் தான் சுண்டெலியைச் சாப்பிடுவேன். எனக்குத்தான் சுண்டெலி'' என்று ஒன்றுடன் ஒன்று மோதிப் பாய்ந்தன.

தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்ட சுண்டெலி, "பூனையண்ணன்களே! வீணாக உங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ள வேண்டாம். அதோ, அந்த மாமரத்தின் அருகில் போய் நில்லுங்கள். நான் ஒன்று -இரண்டு-மூன்று என்று சொன்னவுடன் யார் முதலில் வந்து என்னைத் தொடுகிறீர்களோ, அவர்களே என்னைச் சாப்பிடலாம்'' என்றது.

பூனைகளும் அப்படியே போய் நின்றன. எலி சந்தோஷத்தோடு, "ஒன்று-இரண்டு-மூன்று'' என்று கூறியது. உடனே பூனைகள் ஒன்றையொன்று தள்ளிக்கொண்டு ஓடிவந்தன.

ஓடி வந்து என்ன பலன்? சுண்டெலி தான் அவற்றை ஏமாற்றிவிட்டு வலைக்குள் போய் ஒளிந்து கொண்டதே! பாவம், ஒற்றுமையில்லாத பூனைகள், கிடைத்த ரொட்டித் துண்டையும் இழந்து-கேவலம், சுண்டெலியிடமும் ஏமாளிப்பட்டம் வாங்கிக் கொண்டன.

–கூவளை சண்முகம்

# சதுரங்க ஆட்டக்காரன் 11



அன்று காலையில் பகீரதன் நவநீதனை அழைத்துக் கொண்டு காசோலையை வைப்பில் இடுவதற்காக நகரத்துக்குச் சென்றிருந்தான். வங்கிகளுக்குச் சென்று பழக்கமில்லாததால் தான் அவனைக் கூட்டிச் சென்றான்.

அந்த வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு "அம்மாவைப் பார்க்க மருத்துவ மனைக்குச் சென்று வருவோமா?" என்று நவநீதன் கேட்டான்.

"நாளைக்குப் போகலாம்: இப்போது அவசர வேலை ஒன்று இருக்கிறது" என்றான் பகீரதன்.

அதன் பிறகு அவன் மௌனமானான். அவனுடைய உள்ளம் ஏதோ ஓர் அபாயத்தை எதிர்கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. 'இனியும் தாமதிக்கக் கூடாது. அவள் என்னை நேரிலே கண்டால் நிச்சயமாக என்னை அறிந்துகொள்வாள். அதில் பிரச்சினை எதுவுமில்லை. ஆனால், தேவதைகள் சொன்னபடி என்னை அடையாளம் கண்டுகொண்ட பிறகு, பேச்சுவார்த்தைகள் தொடருமானால் நடக்கக் கூடாதது எதுவும் நடந்து விடுமோ என்று தான் பயமாக இருக்கிறது. உடனடியாக இதற்கு ஒரு முடிவு காண வேண்டும்; ஆனால், என்ன செய்வது என்று தான் தெரியவில்லை; எவ்வளவு யோசித்தும் எதுவுமே மூளைக்குப் படுவதில்லையே' என்று எண்ணலானான்.

"தம்பி, என்ன பலமான யோசனை?" என்று நவநீதன் கேட்டபோது, அவன் உடனே விஷயத்தை மாற்றி, "இனி நீங்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டுமே, அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"உங்களுடைய அபிப்பிராயம் என்ன?"

"கையில் காசு இருக்கிறது. அதைக் கொண்டு ஒரு கடையைப் போட்டுக் கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன். மூவரும் சேர்ந்து செய்யலாமே."

"அதுவும் நல்லது தான்."

அத்தோடு பேச்சை நிறுத்திக் கொண்ட பகீரதன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான்.

பஸ்ஸில் ஏறி வீட்டுக்குத் திரும்பி வரும்வரை அவன் வேறு எதுவும் பேசவில்லை.

அவர்கள் வீடு வந்து சேர்ந்த சிறிது நேரத்துக்குள் சத்தியசீலன் மருத்துவ மனையில் இருந்து திரும்பி வந்தான்.

பகீரதனைக் கண்டதும் அவன் மகிழ்ச்சியோடு, "தம்பி, உங்களுடைய முயற்சியால் அம்மாவின் ஒரு கண்ணுக்குப் பார்வை கிடைத்துவிட்டது. மற்றக் கண்ணையும் ஒபரேஷன் செய்து கட்டுப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் வந்ததும் நாங்கள் நினைத்திராததெல்லாம் நடந்து விட்டன. அது எங்களுடைய அதிர்ஷ்டம். அம்மா உங்களைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கிறார். இன்றும் கூட உங்களை எதிர்பார்த்துக் கொண்டு தான் இருந்தார். நீங்கள் வராதது அவருக்கு பெரும் ஏமாற்றமாக இருந்ததாம்" என்றான்.

"எப்போது அவர் வீட்டுக்கு வருவார்? டாக்டரைச் சந்தித்துக் கதைத்தீர்களா?"

"இல்லை. இன்னும் இரண்டொரு நாட்களில் வரமுடியும் என்று நினைக்கிறேன்."

"அப்படியா?" என்று சொல்லிவிட்டு அவன் மறுபடியும் யோசிக்கத் தொடங்கினான்.

'கடவுளே! என்னைக் காப்பாற்று. என் குடும்பத்தவர்களுக்கு நான் எவ்வளவோ செய்திருக்கிறேன். இன்னும் செய்வேன். ஆண்டவனே, நான் உன்னிடத்தில் சரணடைகிறேன். உன்னைத் தவிர எனக்கு உதவி செய்யக் கூடியவர் வேறு யாருமில்லை. உனது கோபத்துக்குரியவர்களினதோ, நெறி பிறழ்ந்தவர்களினதோ வழியில் என்னை நடத்திவிடாதே. இந்தப் பிரச்சினைக்கு நீயே ஒரு

**-ஸீயெம்மே அமீன்**

தீர்வை எனக்குத் தா' என்று மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டான்.

இதற்குள் அவனுடைய பேத்திகள் வந்து, "மாமா, பாட்டியைப் பார்க்க எங்களை எப்போது கூட்டிப்போவீர்கள்?" என்று கேட்டார்கள்.

"கூட்டிப் போகிறேன். இப்போது கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது. நாளைக்கு அப்பாவோடு சென்று பார்த்துவிட்டு வாருங்கள்" என்று சொல்லிச் சமாளித்தான்.

"நீங்களும் வர வேண்டும் மாமா, அப்போது தான் எங்களுக்குச் சந்தோஷம்" என்று ஒரு பேத்தி சொன்னாள்.

"சரி, சரி வருகிறேன். இப்போது போய் விளையாடுங்கள்" என்றான்.

அன்றைய தினம் இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவன் படுக்கைக்குச் சென்றான். ஆனால், நித்திரை வரவில்லை. அந்த யோசனையே அவனுடைய மனதைக் குடைந்து கொண்டிருந்தது. பாதி இரவு வரை யோசித்து யோசித்தே பொழுது கரைந்தது. கடைசியாக, திடீரென்று அவனுக்கு ஓர் உபாயம் மனதில் உதித்தது. 'மீண்டும் அந்தத் தேவதைகளைச் சந்தித்துவிட்டு வந்தால் என்ன? அவர்களிடம் நேரிலேயே கேட்டுவிடலாமே. அது தான் நல்லது; நாளைக்கே போகிறேன்' என்று முடிவுக்கு வந்தான்.

அதன் பிறகு தான் அவனுக்கு உறக்கம் வந்தது. அன்றிரவு அவன் விசாலாட்சியைச் சந்திப்பது போன்றும், அவள் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுவது போன்றும் கனவு கண்டான்.

காலையில் எழுந்ததும் சில உடைகளையும் உண்பதற்காகச் சில பொருள்களையும் எடுத்துக்கொண்டு ஊரின் எல்லையில் இருந்த காட்டை நோக்கி நடக்கலானான். காடு முன்பை விட இப்போது துப்புரவாக்கப்பட்டிருந்தது. எனவே, அப்பகுதியைச் சிரமமின்றிக் கடந்து சென்றான். அதற்கு அப்பால் அடர்த்தியற்ற காடு இருந்தது. இன்னும் முன்னால் செல்ல காடு அடர்த்தியாகிக் கொண்டு வந்தது. அப்பகுதியை மிகச் சிரமத்துடனே கடந்தான். இரண்டு மணித்தியாலங்கள் நடந்த பிறகு அவன் தேவதைகளோடு சதுரங்கம் விளையாடிய மட்டமான கல்லைக் கண்டான். அதன் மீது அமர்ந்தவனாக தேவதைகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். காலையில் இருந்து அந்தி மங்கும் வரை அங்கே காத்திருந்தான். ஆனால், தேவதைகள் வரவில்லை. அவனுக்குப் பெரும் ஏமாற்றமாகவும் தாங்க முடியாத துயரமாகவும் இருந்தது.

அவன் வீடு நோக்கித் திரும்பிச் செல்லும்போது தூரத் தொடங்கிய மழை, சிறிது நேரத்தில் தாரை தாரையாகக் கொட்டத் தொடங்கியது. அவன் மழையைப் பொருட்படுத்தாமல் நடந்துகொண்டிருந்தான். வீடு வந்து சேர்ந்ததும் அவனுக்குச் சளி பிடித்துவிட்டது. உடல் சோர்ந்து போய் விட்டது போல் அவன் உணர்ந்தான்.

அடுத்த நாளும் காட்டுக்குச் சென்றான். அன்றும் தேவதைகள் வரவில்லை. அன்றும் மழையில் நனைந்தபடி ஏமாற்றத்தோடு திரும்பி வந்தான். இப்போது அவனுடைய உள்ளம் கலவரமடையத் தொடங்கிற்று.

இப்படி நான்கு நாட்களாக அவன் காலையில் வீட்டை விட்டுச் செல்வதும் மாலையில் திரும்பி வருவதுமாக இருந்தான்.

ஐந்தாவது நாளன்று அவன்

## இளஞ்சுடர்

தயாரிப்பு: தினா

போகவில்லை. அவனுக்குக் காய்ச்சல் பிடித்துவிட்டது. படுத்த படுக்கையாக இருந்தான். தன்னுடைய உயிர் பிரிந்துவிடப் போகிறதோ என்று நினைத்தான். தேவதைகளைச் சந்திக்க முடியாமற்போன தனது துரதிர்ஷ்டத்தையிட்டு அவன் கிலிகொண்டவனாகக் காணப்பட்டான்.

(தொடரும்)

## கழுதையும் கட்டெறும்பும்



★கட்டெறும்பு ஊர்ந்து ஊர்ந்து
கழுதை அருகில் சென்றதாம்.

★கழுதைக் காலில் ஏறி ஏறிக்
காதுப் பக்கம் போனதாம்.

★காதில் புகுந்து மெல்ல மெல்லக்
கடித்துக் கடித்துப் பார்த்ததாம்.

★'காள்கா ளென்று கழுதை கத்த,
கட்டெறும்பு மிரண்டதாம்.

★காதி லிருந்து தரையை நோக்கிக்
கர்ணம் போட்டுக் குதித்ததாம்.

★அந்தச் சமயம் பார்த்துக் கழுதை
அதன்மேல் காலை வைத்ததாம்.

★காலில் சிக்கிக் கொண்ட எறும்பின்
கதை முடிந்து போனதாம்!

குழந்தைக் கவிஞர்
-அழ.வள்ளியப்பா

## விடுகதைகள்

1. பச்சை நிறப் பாப்பா வயிறு வெடிச்சு வெளுத்தா. அது என்ன?

2. தாயின் வாயில் பிறப்பது தரணி எங்கும் சிறப்பது. அது என்ன?

3. நீரிலே விளையும் பூ நிலத்திலே வேரோடாப் பூ. அது என்ன?

4. இலையில்லாத மரம் கலகலவென்று ஆடுது. அது என்ன?

5. ஓடுகின்ற முயலுக்கு விலாவிலே மச்சம். அது என்ன?

## விடைகள்

1. பருத்திக்காய்
2. தாலாட்டு
3. உப்பு
4. கொடிமரம்
5. வண்டிச்சக்கரம்



# விகடம்

-வே. தில்லைநாதன்

## சும்மா

அவனது மாறுவேடத்திலிருந்தும் காரியஸ்தரினால் அவனை எளிதில் அடையாளங்கண்டு கொள்ள முடிகிறது. ஆமாம், அவன் நாட்டை விட்டோடிய சிற்றரசன் வரதவர்மன் தான். அவருக்கு எள்ளளவும் ஐயமில்லை. அகவை எண்பதைத் தாண்டிவிட்டாலும் அவரது கண்பார்வை இன்னும் கூர்மையாகத்தான் இருக்கிறது.

காரியஸ்தரின் மனதில் சம்பவங்கள் ஓடி மறைகின்றன. அந்தத் தீவின் ஒரு பகுதியில் குறுநில மன்னனாகி முழுத் தீவையும் ஆண்டுகொண்டிருந்த அரசனுக்குத் திறை செலுத்திக்கொண்டிருந்த வரதவர்மன் திடீரென இனி அரசனுக்குத் திறை செலுத்தப் போவதில்லை என்று கிளர்ந்தெழுந்தவன். அதைக் கேள்வியுற்று வெகுண்டெழுந்த அரசன் படை நகர்த்தி வரதவர்மனது ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் இறங்கினான். இதற்கிடையில் உள்ளூர்க் கிளர்ச்சிக்காரர்களும் வரதவர்மனுக்கு எதிராகப் போராட்டங்களைத் தீவிரப்படுத்தத் தொடங்கினர்.

இருமுனைத் தாக்குதலுக்கஞ்சிய வரதவர்மன் அரியணையைத் துறந்து அயல்நாட்டில் தஞ்சம் புகுந்து அஞ்ஞாதவாசம் அனுபவித்து வந்தான். மிக நீண்ட காலமாக நாட்டுக்கு வராத வர்மனாக இருந்த வரதவர்மன் இப்பொழுது தோற்றியிருப்பது காரியஸ்தரைச் சிந்திக்க வைக்கிறது.

வரதவர்மன் ஒரு பெரிய அயல்நாட்டின் சக்திமிக்க மன்னனின் அனுசரணையுடன் இங்கு அரச கட்டில் ஏறியவன். அயல்நாட்டு மாமன்னன் சில அரசியல் காரணங்களினால் தீவைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகி வரதவர்மனை அரியணை ஏற்றுவதில் வெற்றி கண்டிருந்தான்.

அயல்நாட்டு ஆதரவின் நிமித்தம் ஆரம்பத்தில் பெருநிலப்பரப்பை ஆண்ட அரசனினால் வரதவர்மன் ஆட்சி பீடம் ஏறுவதைத் தடுக்க முடியவில்லை. வேண்டா வெறுப்புடன் சிற்றரசனுக்கு ஆசிர்வாதம் வழங்கியிருந்தான். ஆகவே, வரதவர்மனது அஞ்ஞாதவாசம் அவனுக்கு உவப்பூட்டியது.

வரதவர்மனின் ஆட்சியைப் பொறுத்தவரை அவன் நுண்ணறிவுடையவனாக இருந்தும் அரசியல் சூட்சுமங்கள் அறிந்தவனாக இருந்தும் அவனது பிரஜைகளின் மனங்களை அவனால் எளிதில் வெற்றிகொள்ள முடியவில்லை. மக்களுக்கு ஒரு பெரிய மனக்குறை இருந்தது. அயல் நாட்டு மன்னனின் ராஜதந்திரத்தை அறியாத அவர்கள் ஆரம்பத்தில் அவனை ஆபத்பாந்தவனாக எண்ணி அவனது துணையுடன் ஏற்படுத்தப்பட்ட சிற்றரசை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

ஆயினும், நாளடைவில் தமது தேவைகளை நாடி பிடித்துப் பார்க்காதது மட்டுமன்றி ஒரு தலையாட்டிப் பொம்மையையும் பேரரசன் அரசபீடம் ஏற்றியிருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் மக்களிடையே வலுத்தமையால் ஏற்பட்ட ஏமாற்றம் அவர்களுக்கு புதிய சிற்றரசன் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியது. அந்த நம்பிக்கையீனம் உள்ளூர்க் கிளச்சியாளர்களுக்குத் துணை போக சிறு நிலப்பரப்பில் அரசு ஆட்டம் கண்டது. அரசனும் அயல்நாட்டில் அடைக்கலம் பெற்றான்.

பெருநிலப்பரப்பில் வழிவழி வந்த ஆட்சியாளர்களுக்கு இது வாய்ப்பாகிவிடவே அவர்கள் வேறுநாட்டு அரசுகளுடன் உறவைப்பலப்படுத்தி அதன் மூலம் சிறு நிலப்பரப்பில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்க முயன்றனர். நீண்டகால மோதல்

வெற்றிதோல்வியை நிர்ணயிக்கத் தடுமாறிய நிலையில் பெருநிலப்பரப்பின் தற்போதைய மன்னன் சிற்றரசன் வரதவர்மனுக்கு அடைக்கலம் கொடுத்த நாடு உட்பட வேறுசில நாடுகளின் துணைகொண்டு சிறு நிலப்பரப்பில் ஏற்ப்பட்ட கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவந்தான்.

குறுநிலப்பரப்பில் இனிக் குறுநிலமன்னர்களுக்கு இடமேயில்லை என்ற தோற்றப்பாடு நிலவுகிற இன்றைய காலகட்டத்தில் வரதவர்மனின் வரவு காரியஸ்தரை ஆச்சரியத்துக் குள்ளாக்கியிருக்கிறது.

வரதவர்மனுக்குப் புகலிடம் கொடுத்திருக்கும் அந்த நாடு மீண்டும் இந்த நாட்டில் செல்வாக்குச் செலுத்த முனையுமென்பது காரியஸ்தரின் அறிவுக்கு எட்டாத விடயமன்று. ஆயினும் பெருநிலப்பரப்பின் மன்னன் இன்னொரு பலம்பொருந்திய நாட்டுடன் உறவைப்பலப்படுத்தி ஸ்திர நிலையில் இருப்பதனால் வரதவர்மனை அயல்நாடு எந்த அளவுக்கு பயன்படுத்தமுடியும் என்பதுதான் அவருக்குப் புரியவில்லை.

ஓர் உணவு விடுதியில் சில நண்பர்களுடன் உண்டு களித்து இளைப்பாறிக்கொண்டிருக்கும் வரதவர்மனின் அருகே சென்று பணிவுடன் நிற்கிறார் காரியஸ்தர். வரதவர்மன் அவரை ஏறெடுத்துப்பார்க்க, ''மன்னபிரான் எப்பொழுது நாடு திரும்பினீர்கள்?'' என்று அவனது காதில் அவர் குசுகுசுக்க ஒரு கையசைவில் அவரது பேச்சை நிறுத்திய வரதவர்மன் தோழர்களுக்கு விடைகொடுத்தனுப்பி அவரை உட்காருமாறு பணிக்கிறான்.

பின்னர் அவரை நோக்கி, ''தாங்கள் காரியஸ்தர் கண்ணபிரான் அல்லவா? என்னை எவ்வாறு அடையாளம் கண்டு கொண்டீர்கள்?''என்று கேட்கிறான்.

காரியஸ்தர் கனிவு ததும்பும் குரலில், ''சிறுவயது தொட்டே தங்களை மார்புமேலும் தோள்மேலும் போட்டு வளர்த்தவனல்லவா நான்? தங்களின் எந்த வேடமும் என் கண்ணுக்குத் தப்பாது மன்னவா. தாங்கள் நாடு திரும்பியதன் நோக்கத்தை அடியேன் அறிந்துகொள்ளல் கூடுமா?'' என்று கேட்கிறார்.

''சும்மாதான்'', என்கிறான் வரதவர்மன். எங்கிருந்தாலும் இந்த அழகிய பிறந்தமண்ணை மறக்க முடியாதல்லவா? அவ்வப்போது மாறுவேடத்தில் இங்கே வருவதுண்டு. அவ்வளவுதான். இங்குள்ள நிலைமைகள் எவ்வாறுள்ளன?'' என்கிறான் அவன்.

''இங்கே அரசரின் ஆதரவு பெற்றும் பெறாமலும் சிறுசிறு குழுக்கள் இயங்குகின்றன. எல்லோருக்குமே ஆதரவாளர்கள் உண்டு. எண்ணிக்கையில்தான் வேறுபாடு. எல்லோரும் அரசரின் ஆசியுடன் ஆட்சியமைக்க முயல்கிறார்கள்.''

''அரசரின் நிலைப்பாடென்ன?''

''அரசர் அவர்களை ஓர் இணக்கப்பாட்டுக்கு வருமாறு கேட்டிருக்கிறாராம். சிறு நிலப்பரப்பை இரு கூறாக்கி அதிகாரங்களற்ற இரு குறுநில மன்னர்களை உருவாக்க அவர் திட்டமிட்டிருக்கிறாராம். அதுவும் உங்களை ஆதரிக்கும் மன்னரைத் திருப்திப்படுத்துவதற்காகவே அரசர் அவ்வளவுக்காவது இறங்கி வந்திருப்பதாக வதந்திகள் உலவுகின்றன. உங்கள் மன்னரின் அழுத்தத்துக்கு முற்று முழுதாக அடிபணியாமலிருக்கும் பொருட்டு எமது அரசர் இன்னொரு பலம்வாய்ந்த அரசரின் துணையைப் பெற்றிருக்கிறாராம். அவர் பலமான நிலையில் இருப்பதாகத்தான் புலப்படுகிறது''.

''ஓஹோ''

''தங்களைக் கண்டதும் தாங்களும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காகத்தான் வந்திருக்கிறீர்களென்றெண்ணி நான் மகிழ்வுற்றேன், மன்னவா. இன்னொரு முக்கிய புள்ளியும் கடல் கடந்து வந்திருப்பதாகச் செய்திகள் உலவுகின்றன. தாங்களும் அதுகுறித்துக் கேள்வியுற்றருக்கலாம்.

(26ஆம் பக்கம் பார்க்க)

---

# எலிகளை விழுங்கும் தாவரம்

## கண்டுபிடிப்பு!

**அறிவியல்**

மனிதர்கள் மீது அப்படியே படர்ந்து அவர்களைக் கசக்கிக் கொன்று விடும் செடி, கொடிகளைப் பற்றி கதைகளில் படித்திருப்பீர்கள். ஆனால், உண்மையில் அப்படி ஒரு செடி இருப்பதை, விஞ்ஞானிகள் இப்போது கண்டுபிடித்துள்ளனர்.



இந்த செடியின் இலைகள், உயிருடன் உள்ள எலி போன்ற உயிரினங்களை அப்படியே சாகடிப்பதைப் பார்த்த விஞ்ஞானிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். செடி, கொடிகள் அடங்கிய தாவரங்கள் சுத்தமான சைவம்தான். அவைகளுக்கு உணவே, சூரிய ஒளி, தண்ணீர் என்பன தான். அதுவும் வேர்கள், இலைகள் மூலம் உணவை கிரகித்துக் கொள்ளும். ஆனால், அசைவ உணவை சாப்பிடும் தாவரம் பற்றிய தகவல் இப்போது தான் வெளியே வந்துள்ளது. பிரபல தாவர இயல் விஞ்ஞானிகள் ஸ்டூவர்ட் மெக்பெர்சன், அலாஸ்டியர் ரொபின்சன் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு பிலிப்பைன்ஸ் நாட்டில் விக்டோரியா மலைப்பகுதியில் செடி, கொடிகள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தனர். அப்போதுதான், இந்த மாமிசம் உண்ணும் தாவரம் பற்றி தெரிந்து கொண்டனர். இந்த மலைப்பகுதியில் கிறிஸ்தவ மத பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த மிஷனரிகள் இந்த அபூர்வ தாவரம் பற்றி கேள்விப்பட்டனர். அவர்கள் கொடுத்த தகவலை ஆராய்ச்சி செய்த போதுதான், இந்த தாவரம் பற்றி தெரிந்து கொண்டனர்.

இது குறித்து மெக்பெர்சன் கூறியதாவது: ''இந்த கண்டுபிடிப்பு மிக, மிக முக்கியமானது. 21ஆம் நூற்றாண்டு வரை, இப்படி ஒரு தாவரம் இருப்பதை கண்டு பிடிக்காமல் இருந்ததே மிகவும் அதிசயம் தான். இயற்கை உலகின் அதிசயம், அழகைப்பற்றி மக்கள் அறிந்து கொள்ள மிகவும் பாடுபட்டவர் சேர் டேவிட் அட்டன்பரோ. எனவே, அவர் பெயரிலேயே இந்த தாவரத்தை அழைக்க முடிவு செய்துள்ளோம். இனி, இந்த தாவரம், புநேபின்தஸ் அட்டன்பரோகி என அழைக்கப்படும். இந்த தாவரம் சிவப்பு, பச்சை நிறத்தில் உள்ளது. இதன் தண்டு, நான்கு அடி உயரம் வரை வளரும். விக்டோரிய மலை சரிவுகளில் பெரும் புதர்களுக்கு மத்தியில் மட்டுமே இந்த செடி வளர்கிறது.

இந்த செடியின் இலைகள் தான், அந்த செடிக்கு வாய் போல் உள்ளன. அதன் மேல் அமரும் எலி போன்றவற்றை அப்படியே பிடித்துக் கொள்கிறது. இலையில் சுரக்கும் ஒருவித வழுவழுப்பான என்சைம்களில் இருந்து எலிகள் தப்ப முடியாது. பின்னர், அந்த என்சைம்களே எலிகளை கொன்று விடுகின்றன. எலிகள் மட்டுமல்ல, பூச்சிகள் போன்ற சிறிய உயிரினங்களையும் இந்த தாவரம் கபளீகரம் செய்து விடும். தாவர இயலில் இந்த மாமிசம் உண்ணும் தாவரம் கண்டுபிடிப்பு மிக முக்கியமானது.''- இவ்வாறு மெக்பெர்சன் கூறினார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக தாவர இயல் முன்னாள் பேராசிரியர் இவர். 2007 முதல் இந்த தாவரம் பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். தன் ஆராய்ச்சியில், மாமிச தாவரம் பற்றிய உண்மைகளை முழுமையாக கண்டுபிடித்த பின்னர், சமீபத்தில் இந்த அதிசயத்தை உலகிற்கு அறிவித்தார். ✱



# திருமுருக கிருபானந்த வாரியார்

**25**

மரனின் உள்ளத்தில் பிரமனை விதைத்தவர். சிந்தனைக்குரிய வார்த்தைகளைச் சிரிக்கும்படி சொன்னவர். 64 ஆவது நாயன்மாராக வலம் வந்த அருள் மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் வாழ்க்கையில் இருந்து சில துளிகள்...

★ இந்தியாவின் வேலூர் அருகே, காங்கேயநல்லூரில் 1906 ஆம் ஆண்டு, மல்லையதாஸ பாகவதர் - கனகவல்லி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரோடு பிறந்தவர்கள் 11 பேர். இவர் நான்காவது குழந்தை!

★ வாரியாருக்கு அறிவு ஞானம் அனைத்தையும் வழங்கியவர் அவரது அப்பா. வீட்டிலேயே இலக்கியம், இலக்கணம், இசை எல்லாம் கற்றுக் கொடுத்தார். பிரம்மஸ்ரீ தென்மடம் வரதாச்சாரியாரிடம் வீணை கற்றார். எட்டு வயதில் வெண்பா பாடும் ஆற்றல் வந்தது. 12 வயதில் 10,000 பாடல்களை மனப்பாடம் செய்தார். மறையும் வரை எந்தப் பாட்டும் மறக்கவில்லை!

★ அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் கொடுத்தது. தஞ்சைப் பல்கலைக்கழகம் 'இலக்கிய முது முனைவர்' என்றது. காஞ்சி மகா பெரியவர் 'சரஸ்வதி கடாக்ஷமிர்தம்' என்று பாராட்டினார். அனைவருமே 'அருள் மொழி அரசு' என்று வணங்கினர். வாரியார் வாங்கிய பட்டங்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. ஆனால், வாரியார் பள்ளிக்கூடம் சென்று படித்ததே இல்லை!



★ சிறுவயதில், பாலாறுக்குத் தினமும் குளிக்கச் செல்வார். அப்போது தனது அம்மாவிடம் அரிசி வாங்கி, போகும் வழியில் எறும்புப் புற்று இருக்கும் இடங்களைத் தேடிச் சென்று அதில் அரிசியைப் போட்டுக் கொண்டே போவாராம்!

★ மகன் ஆன்மிகச் சொற்பொழிவு ஆற்ற ஊர் ஊராகப் போய் வருவது ஆரம்ப காலத்தில் அவரது அப்பாவுக்குத் தெரியாது. காங்கேயநல்லூர் முருகன் ஆலய ராஜகோபுரம் கட்டியதில் தந்தைக்கு ஏற்பட்டிருந்த ரூ.5,000 கடனைத் தனது சொற்பொழிவு வருமானத்தில் அடைத்தார் வாரியார். அதன் பிறகுதான் அதை அறிந்து பாராட்டினார் தந்தை!

★ வீர சைவ மரபனைச் சேர்ந்த சுவாமிகள் தம் ஐந்தாவது வயதில் கழுத்தில் சிவலிங்கம் அணிந்தார். 1936 முதல் தினமும் முருகனுக்குப் பூஜை செய்த பின்பே உணவு உட்கொள்வது வழக்கம்.

★ வாரியார் தனது 19 ஆவது வயதில் தாய்மாமன் மகள் அமிர்த லட்சுமியைத் திருமணம் செய்து கொண்டார். பிரம்மச்சர்யத்தைக் கடைப் பிடித்ததால், குழந்தைகள் இல்லை!

★ தியாகராஜ பாகவதர் கதாநாயகனாக நடித்து ஒரு வருடத்துக்கு மேல் ஓடிப் புகழ் பெற்ற 'சிவகவி' திரைப்படத்துக்கு வசனம் எழுதியவர் வாரியாரே!

★ வெளியூர் சென்றாலும் கூடவே பூஜைப் பெட்டியை எடுத்துச் செல்வது வழக்கம். தொடர்ந்து 57 வருடங்கள் ஒரு நாள்கூட இடைவெளி இன்றி பூஜை செய்தவர்!

★ எம்.ஜி.ஆருக்கு எத்தனையோ பட்டங்கள் இருந்தாலும், 'பொன் மனச் செம்மல்' என்பது அனைவராலும் சொல்லப்படுவது. அப்பட்டத்தை வழங்கியவர் இவரே!

★ வேலூரில் உரை நிகழ்த்த வாரியார் வந்திருந்தார். அப்போது திராவிடர் கழகத்தினர் 'கிருபானந்த 'லாரி' வருகிறது' என்று கிண்டல் அடித்துத் தட்டிவைப்பார்கள். தற்செயலாக வேறு ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்த தந்தை பெரியார், அவர் தங்கியிருந்த வீட்டு ஜன்னல் வழியே வாரியாரின் விரிவுரையைக் கேட்க நேர்ந்தது. 'வாரியாரும் நம்மைப் போல தமிழ் வளர்க்கும் முயற்சியிலும், சமுதாயத்தை மேம்படுத்தவுமே பாடுபடுகிறார். அவரைக் கேலி செய்வதா? உடனே, தட்டியெல்லாம் அகற்றுங்கள்!' என்று தன் தொண்டர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார் பெரியார்!

★ 'தாமரைக் கண்ணால் பெண்கள் நோக்கினர்' என்று கம்பர் கூறுகிறார். 'தாமரையோ செவ்வண்ணம் உடையது. மது அருந்தியவருக்கும், அளவுக்கு அதிக சினம்கொண்டாருக்கும் அல்லவா சிவந்த கண்கள் இருக்கும். அது எவ்வாறு பெண்களுக்குப் பொருந்தும்?' என்று கண்ணதாசன் கேட்க, அதை 'தாம் அரைக் கண்ணால்' என்று பிரித்துப் பொருள் கொள்ளலாம் அல்லவா?' என்று விளக்கம் கூறிக் கவியரசரை அசத்தினார்!

★ 'பெற்றெடுத்த தாயின் பெயரை இனிஷியலாகப் போடலாமே!' என்று பெண்களைப் போற்றும் ஒரு கருத்தை அக்காலத்திலேயே கூறியவர்!

★ திருப்புகழ் உரை நடை, மகாபாரதம், கம்பராமாயணம், கந்த புராணம், பெரிய புராணம் என்று இவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை 200 இருக்கும். அவை அனைத்தையும் படிக்கும்போது வாரியாரின் பேச்சைக் கேட்பதுபோலவே இருக்கும்!

★ 'எனக்கு அஜீரணம் என்பது என்னவென்றே இதுவரை தெரியாது. பசியெடுத்த பின் கையை வாய்க்குள் வைப்பவனும், பசி அடங்குவதற்கு முன் கையை வாயைவிட்டு எடுத்துக்கொள்பவனும் நோய்வாய்ப்பட மாட்டான்!' என்று ஒரு முஸ்லிம் அன்பர் கூறியதை நினைவில் வைத்திருக்கிறேன்! என்பார்!

★ 27 லட்ச ரூபாய் நன்கொடை வசூலித்து, திருப்பராய்த்துறையில் 'ராமகிருஷ்ண குடில்' அமைத்தார். ஆதரவற்ற சிறுவர்களின் புகலிடமாக அது விளங்கி வருகிறது!

★ தான் பிறந்த காங்கேய நல்லூரில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றை நிறுவினார். பள்ளிக்கு என உதவி கேட்டால் உடனே செய்வார்!

★ 'ஏழைகள், மாணவர்கள், விதவை சமுத்துவ உதவி வேண்டுவோர் பல தரப்பனருக்கும் நிதி உதவி செய்திட, 'திருமுருக கிருபானந்த வாரியார் பொதுநல நிதி அறக்கட்டளை' ஒன்றைத் தன் சொந்தப் பணத்தில் அமைத்தார்!

★ ஆன்மிகச் சொற்பொழிவுகளின் இடையே சிறுவர்களிடம் கேள்விகள் கேட்டு, சரியாகப் பதில் சொல்பவர்களை மேடைக்கு அழைத்து, புத்தகங்கள் பரிசளித்து ஊக்குவிப்பது வாரியார் வழக்கம்!

★ தமிழின் பெருமைபற்றி வாரியார் கூறியது இது... 'பாரிஸ் நகர நூல் நிலையத்தில் மடக்கிவைத்துள்ள பீரோக்களை நீட்டிவைத்தால், ஆறு மைல் நீளம் வரும். மிகப் பெரிய நூலகம். அதில் எண் ஒன்று போட்டு பைபிள் உள்ளது. எண் இரண்டு போட்டு திருக்குறளை வைத்திருக்கிறார்கள்!' மானம் என்ற சொல் தமிழில் தவிர வேறு எந்த மொழிகளிலும் இல்லை!

★ பழநி ஈசான சிவாச்சாரியார், டால்ஸ்டாய் எழுதிய 'நாம் செய்வது என்ன' என்ற புத்தகத்தை நீ ஒரு முறை படி. நான் படித்தால் அழுகை வருகிறது' என்றார். அந்நூலைப் படித்து முடித்ததும் பொன், பொருள், உலகம் ஆகிய பற்றுகள் அகன்றுவிட்டன வாரியாருக்கு. அன்று முதல், தான் அணிந்திருந்த தங்க ருத்திராட்ச மாலை, மோதிரங்கள் உட்பட அத்தனை அணிகலன்களையும் கழற்றி, காங்கேய நல்லூர் முருகனுக்கு அர்ப்பணித்து விட்டார் வாரியார்!

★ தன் விரிவுரைகளுக்குக் கிடைத்த வருவாயில் காங்கேய நல்லூரில் நாலு ஏக்கர் நிலத்தை வாங்கினார் வாரியார். அதில் இருந்து கிடைக்கும் வருவாயை வைத்து தினமும் தயிர் சாதம் தானமாக வழங்க உத்தரவிட்டார். 54 ஆண்டுகளாக இது தடை இல்லாமல் நடக்கிறது!

★ 'எம்பெருமான் திருவருளாலே...' என்ற வார்த்தைகள் இல்லாமல் அவர் பேசியதே இல்லை!

★ 20 வயதுக்கு மேல், மேல் சட்டை அணிந்தது இல்லை. ஆட்டோகிராப் கேட்பவர்களுக்கு 'இரை தேடுவதோடு இறையையும் தேடு' என்ற வார்த்தைகளையே பெரும்பாலும் எழுதிக் கையெழுத்து இடுவார்!

★ லண்டனில் சொற்பொழிவை முடித்துவிட்டு சுவாமிகள் திரும்பும் போது (7-11-1993), விமானத்தில் அமர்ந்த நிலையிலேயே மரணம் சம்பவித்தது. 'மரணம் 88 வயதான அவரது பூத உடலுக்குத்தான். அவருடைய ஆன்மாவுக்கு அல்ல, அவருடைய அழியாப் புகழுக்கு அல்ல. பூமிக்கு மேலே, சொர்க்கத்துக்கு அருகில் வாரியாரின் உயிர் பிரிந்திருப்பது வியப்பூட்டுகிறது!' என்று அன்று எழுதியது விகடன்!

# ஆரத் தழுவிக் கொள்வது உடலுக்கு ஆரோக்கியமானது

சினிமாப் படங்களில் காதலர்கள் கட்டித் தழுவிக் கொள்கிறார்கள். அதை அனைவரும் ரசித்துப் பார்க்கிறார்கள். ஆனால், நேரில் யாராவது இருவர் கட்டித் தழுவிக் கொண்டால் 'காலம் கெட்டு போச்சு, கலி முத்திப் போச்சு என்று' பேசிக் கொள்கிறார்கள். உண்மையில் தழுவிக் கொள்வது என்பது தவறான காரியமா?

'இல்லை, இல்லை தழுவிக் கொள்வது உயிரினங்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று' என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

காதலர்கள் மட்டுமே தழுவிக் கொள்ள வேண்டும் என்பது சொல்லாத விதிபோல பின்பற்றப்பட்டு வருகிறது. அவர்கள் கூட அந்தரங்கமாக, யாருக்கும் தெரியாமல்தான் கட்டிக் கொள்கிறார்கள். பொது இடங்களில் நபர்களோ, உறவினர்களோ, காதலர்களோ தழுவிக் கொள்வது அரிதாக உள்ளது.

மேலைநாடுகளில் பொது இடங்களில் தழுவிக் கொள்வது ஓர் இயல்பான நிகழ்வு. சில வேளைகளில் அங்கு பொது இடங்களில் ஆயிரக் கணக்கானவர்கள் தழுவிக் கொள்வது, முத்தமிட்டுக் கொள்வது போன்ற போட்டிகளே நடக்கின்றன. உண்மையில், தழுவிக் கொள்வது, உடலுக்கு ஆரோக்கியமானது. அதில் பல ரகசியங்கள் மறைந்து கிடக்கின்றன.

இன்றைய காலத்தில் அன்பை வெளிப்படுத்த மலர்கள் கூட பயன் படுத்துவது கிடையாது, வெறும் காகிதப் பூக்கள்தான். அதுவும் கூட அரிது. எல்லாம் கைபேசித் தொலைபேசி மூலம் தகவலாகப் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. அல்லது இணையதளமூடாக மின்னஞ்சலில் பறக்கிறது. நேரில் சந்தித்தால் கைகொடுத்துக் கொள்வது தான் வாடிக்கையாக இருக்கிறது. பொது இடங்களில் தழுவி அன்பை வெளிப்படுத்திக் கொள்வது அரிதானதாக இருக்கிறது. கலாசாரம் கருதி, அருவருப்பான தாகக் கூட கருதப்படுகிறது.

'தழுவிக் கொள்வதால் எய்ட்ஸ் பரவாது' என்று ஒரு விழிப்புணர்வு வாசகம் உண்டு. அதனைக் கூறி, தழுவிக் கொள்வது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்கள்.

''சமுதாய விலங்கான மனிதனுக்கு அன்பும் அரவணைப்பும் அவசியமானது'' என்கிறது உளவியல். அன்பை வெளிப்படுத்தும் எளிய வழி தழுவிக் கொள்வதுதான். அது அருவருப்பான தல்ல. மாறாக, தழுவிக் கொள்வதால் பல்வேறு நன்மைகள் உண்டு.

''நாகரிகமான முறையில் இடம், சூழல் கருதி இருவரின் விருப்பத்தின் பேரில் அதை முறையாக வெளிப்படுத்த வேண்டும்'' என்ற குரல் உலகின் பல பகுதிகளில் இருந்து ஒலித்து, இந்தியாவை வந்தடைந்திருக்கிறது. நாகரிகமாக இருந்தால் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்!



# அரசியல் சீர்திருத்தத்திற்கான பல்தரப்பு கலந்துரையாடலை ஊக்குவிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொடர்



புதிய தோர் தொலைக் காட்சி கலந்துரையாடல் நிகழ்ச்சித்தொடர் தற்போது TNL தொலைக்காட்சியில் ஒவ்வொரு திங்கட்கிழமையும், இரவு 7.25 மணிக்கும், MAX தொலைக்காட்சி யில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இரவு 10 மணிக்கும் ஒளிபரப்பாகின்றது. இந்நிகழ்ச்சியானது இலங்கையின் அரசியல் யாப்புச்சட்டம், மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி குறித்த பிரதான விடயங்கள் தொடர்பில் புத்திஜீவிகள் மத்தியில் நிலவும் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களை வெளிக்கொண்டுவந்து ஆக்கபூர்வ மான கருத்தாடல்களை தோற்றுவிப்ப தையும், அந்த விடயங்கள் தொடர்பில் மக்களி டமிருந்து எழும் கேள்விகளுக்கு பதில ளிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய பிரதேசங்களின் 11 மாவட்டங்களைச் சேர்ந்த இன,மத அரசியல் மற்றும் துறைசார் பின்னணிகளையுடைய பிரஜைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட மாவட்ட பல்தரப்பு அரங்கத்துடன் இணைந்து யங் ஏசியா தொலைக்காட்சி நிறுவனம் 'முக்காலம்' நிகழ்ச்சியினை தயாரிக்கின்றது.

ஒவ்வொரு 'முக்காலம்' நிகழ்ச்சியின் ஊடாகவும் நல்லாட்சிக்கு அவசியமான பிரதான ஒரு தலைப்பு குறிப்பு அவதானம் செலுத்தப்படுகின்றது. சட்டத்தின் ஆட்சி, பங்கேற்றலுக்கும் பிரதிநிதித்துவத்துக்குமான மக்களது உரிமை, வினைதிறன், வெளிப்படை தன்மை, பொறுப்புடைமை மற்றும் சமத்துவம் போன்ற நல்லாட்சிக்கு அவசியமான பிரதான விடயங்கள் இதில் உள்ளடங்குகின்றது.

தேசிய மற்றும் இனப்பிரச்சினைக்கு அடித்தளமிட்ட காரணிகள் தொடர்பாக அறிவார்ந்த கருத்தாடலையும் இணக் கப்பாட்டினையும் தோற்றுவிப்பதற்காக 2009ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்ட பல்தரப்பு அரங்குகளும் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றன. நிரந்தர சமாதானத்துக்கும் சகவாழ்வுக் கும் தடையாக உள்ள விடயங்களுக்கு அரசியல் சீர்திருத்தத்தின் ஊடாக நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுகளை முன்வைப்பதே பல்தரப்பு அரங்கத்தின் நோக்கமாகும்.

முக்காலம் நிகழ்ச்சி தொடரானது தேசிய முக்கியத்துவம் மிக்க இக்காரணி கள் குறித்த கருத்தாடல்களை தோற்று விப்பதன் ஊடாக மக்களை அறிவூட்ட எதிர்பார்ப்பதோடு, யுத்தத்துக்கு பின்னரான இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்த செயற்பாட்டிற்கு மக்களின் கூடுதலான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான அடித்தளத் தினையும் உருவாக்க முக்காலம் நிகழ்ச்சி முயற்சிக்கின்றது.

முக்காலம் நிகழ்ச்சி ஒவ்வொரு வாரமும் வானொலியூடாகவும் ஒலி பரப்பப்படுகின்றது. இதனை ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிற்பகல் 5 மணிக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத் தின் தமிழ் வர்த்தக சேவையிலும், ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் பிற்பகல் 5 மணிக்கு தென்றல் அலை வரிசையிலும், ஒவ்வொரு புதன்கிழ மையும் பிற்பகல் 5.30இற்கு யாழ் எப். எம் சேவையினூடாகவும், ஒவ் வொரு வியாழக்கிழமையும் பிற்பகல் 4.30இற்கு பிறை எம்.எம். ஊடாகவும் கேட்கலாம். ✱



# சக்தி டி.வியின் 'சமர்'



சினிமாவையே தங்களின் முக்கிய கரு பொருளாக வைத்து செயல்படும் வானொலி, தொலைக்காட்சிகளே எமது நாட்டில் கூடுதலாக செயல்படுகின்றன. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில தரமான நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படுகின்றன. அந்த வகையில் ஞாயிறு மாலை 6 மணிக்கு சக்தி டி.வியில் ஒளிபரப்பாகும் சமர் நிகழ்ச்சியை கூறலாம். முன்னர் இந்த நேரத்தில் மின்னல் என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பாகியது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியை நடத்திவந்த ரங்கா இன்று நாடாளுமன்ற அங்கத்தவராகிவிட்டார். அன்று மின்னிய மின்னல் இன்று மாயமாக மறைந்துவிட்டது. ஏன்? இந்த நிகழ்ச்சியை நடத்த சக்தி டி.வியில் திறமையானவர்கள் எவரும் இல்லையா? கடந்த 04.07.2010ஆம் திகதி நடந்த சமர் நிகழ்ச்சியில் நாடாளுமன்ற அங்கத்தவர் ரங்கா கலந்துகொண்டு சிறப்பித்தார். மலையகம், தோட்ட தொழிலாளர் சம்பந்தமான கேள்விகளுக்கு சரியான தகுந்த பதில்களை கொடுத்தார். தொழிற்சங்கவாதிகள் ஏன் மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்காது இன்றுவரை இழுத்தடித்து செல்கின்றார்கள் என்பதற்கு சரியான உதாரணங்களைக் கொடுத்தார். முக்கியமாக தொழிலாளர்களிடம் பெறப்படும் சந்தாப்பணம் பற்றிய விபரங்கள் முற்றிலும் உண்மையானது. ஒரு சங்கத்தில் சுமார் ஒரு லட்சம் அங்கத்தவர்கள் இருந்தால், அந்த சங்கத்துக்கு மாதம் 60X100,000= 60 லட்சம் ரூபா (6 மில்லியன் ) கிடைக்கின்றது. இது ஒரு உதாரணம் மாத்திரமே. இவ்வளவு தொகையான பணம் எங்கு செல்கின்றது? அதற்கு என்ன நடக்கின்றது என்பது எவருக்கேனும் தெரியுமா? சமர் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் இது போன்ற தகவல்கள் மக்களை சென்றடைய வேண்டும். சக்தி டி.வியே சினிமா என்ற மாயை யை சுற்றிச்சுற்றி வராது, தரமான சமர், மின்னல் போன்ற மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் சேவை செய்யும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவேண்டும். சக்தி டி.வியின் சேவைகளுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

எம். பாலகிருஷ்ணன்
வெள்ளவத்தை


பாட்லீட் பினான்ஸ் என்பது முதியோருக்கு தக்க மதிப்பளிக்கும் பாரம்பரியத்தோடு இணைந்து வளர்க்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அது நிதி தொடர்பான ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்கிறது. நாங்கள் முதியவர்களுக்கும் பலமூட்டும் தூண்களாகச் செயல்படுகிறோம். இலங்கையர்களை நிதி மூலமாக வலுவூட்டும் பொறுப்பினைக் கொண்டுள்ளோம்.

முதியோர்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு பாரம்பரியம்.

12% [வ.வ.வீ 12.68%]
ஒவ்வொரு மாதமும் வருடாந்த வட்டி

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ | முதிர்ச்சி | வ.வ.வீ |
|---|---|---|---|---|
| 1மாதம் | - | - | 9.50% | 9.92% |
| 3மாதங்கள் | - | - | 11.00% | 11.46% |
| 6மாதங்கள் | - | - | 11.50% | 11.83% |
| 1வருடம் | 11.50% | 12.13% | 12.50% | 12.50% |
| 2வருடங்கள் | 12.00% | 12.68% | 13.50% | 12.69% |
| 3வருடங்கள் | 12.00% | 12.68% | 14.50% | 12.79% |

வட்டி வீதம் உங்கள் முதலீட்டுத் தொகையின் அடிப்படையில் அதிகரிக்கும்.
வட்டி வீதம் அறிவிக்கப்படாமல் மாறுதலுக்குட்படலாம்.

வ.வ.வீ - வருடாந்த வருமான வீதம்

கொழும்பு: தினேஷ் 0772 069 796 டிரோன் 0772 702 366 மயூரன் 0773 522 916 உலகநாதன் 0773 464399

களுத்துறை: 0777 427 281 மாத்தறை: 0773 043 873 எம்பிலிப்பிட்டிய: 0777 688 720
நீர்கொழும்பு: 0772 620 662 பண்டாரவளை: 0773 043 874 பொலன்னறுவ: 0772 929 576
வவுனியா: 0773 342 113 யாழ்ப்பாணம்: 0776 751 839

BARTLEET GROUP

நிதி நிறுவனங்கள் 1988ன் சட்ட இல. 78ன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையால் பதிவு செய்யப்பட்டது.

BARTLEET FINANCE LTD BBB- (RAM)*
2வது மாடி, பாட்லீட் ஹவுஸ், 65, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2.
பக்ஸ்: 011 5333494 மின்னஞ்சல்: sanjeewas@bartleet.com
இணையதளம்: www.bartleetgroup.com
* RAM - மலேசிய கணக்கீட்டு நிறுவனம்.




ம. சம்பந்தன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** அர்த்தமுள்ள இந்துமதம் என்ற நூலை எழுதிய கவிஞர் கண்ணதாசனின் மகள் கிறிஸ்தவராகி விட்டாராமே?

**பதில்:** அப்படித்தான். தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு தானே!

எஸ். றோம்,
வவுனியா.

**கேள்வி:** சமீப காலத்தில் இராஜதந்திர ரீதியில் இலங்கை அடைந்த தோல்விகள் என்ன பித்தரே?

**பதில்:** இலங்கையில் இடம்பெற்றதாக நம்பப்படும் போர்க் குற்றங்களை விசாரிக்க ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கும் முகமாக நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டமை ஒன்று. ஐரோப்பிய ஒன்றியத்தால் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டமை மற்றது.

ஆர். டேவிட்,
கொழும்பு.

**கேள்வி:** ஜீ.எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டமை தொடர்பாக ஆடைக் கைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மறியல் போராட்டம் எதுவும் நடத்தியதுண்டா?

**பதில்:** ஆம். சென்ற வாரத்தில் கடவத்தை நகரில் அப்படியான ஒரு போராட்டம் இடம் பெற்றதே. தொடர்ந்தும் இத்தகைய மறியல் போராட்டங்கள் நடைபெறும் என்று நம்பலாம். பாதிக்கப்படப்போகும் பல்லாயிரக் கணக்கான யுவதிகளுக்குப் பயங்கரமான ஓர் எதிர்காலம் காத்திருக்கிறது.

எம். ஹாஸீம்

**கேள்வி:** பின்லேடனின் போராட்டம் நியாயமானதென நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** ஆம். அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளில் தலையிடாமல் ஒதுங்கியிருந்து, அவை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அவர் போராடுவதால் இந்தப் போராட்டம் நியாயமானதென்று தான் நான் கருதுகிறேன்.

என். சரவணன்,
நீர்கொழும்பு.

**கேள்வி:** நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது இடையூறு விளைவிக்கும் அமைச்சர்களைப் பற்றி?

**பதில்:** அவர்கள் இன்னமும் நாகரிகமடையாதவர்கள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

சின்னத்துரை,
ஹட்டன்.

**கேள்வி:** பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எப்போதாவது மீட்சி கிட்டுமா?

**பதில்:** அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதப்படும் நிலைதான் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இலங்கைப் பொருளாதாரத்துக்குக் கணிசமான பங்களிப்பை வழங்கும் அவர்களுக்குச் சிங்கள மக்கள் அனுபவிக்கும் சிறப்புரிமைகள் அனைத்தும் கிடைத்திட வேண்டும்.

தமிழ்ச் செல்வி,
கிளிநொச்சி

**கேள்வி:** கடந்த அசாதரண சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட வன்னிவாழ் தமிழர்களாகிய எமக்கு ஏதாவது கூற நினைக்கிறீரா?

**பதில்:** நடந்ததென்னவோ நடந்து விட்டது. நீங்கள் உயிர் பிழைத்து மீண்டதற்காக முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்தி விட்டு, எதிர்ப்படும் சோதனைகளையெல்லாம் வெற்றி கொண்டு, உற்சாகத்தோடும் முழு உறுதியோடும் தலை நிமிர்ந்து நிற்பேன் என்ற திடசங்கற்பத்துடன் செயலில் இறங்குங்கள். முயற்சியுடையவனுக்குத் தாண்ட முடியாத கடலுமில்லை. ஏற முடியாத மலையுமில்லை. நிச்சயமாக வெற்றி உங்களை வந்தடையும். உங்கள் வாழ்க்கை வளம் பெறும்.

எம். பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை


**கேள்வி:** சக்தி டீ.வியில் ஞாயிறு மாலை ஒலிபரப்பாகிய மின்னல் நிகழ்ச்சி மூலம் ஒருவர் எம்.பி. ஆகினார். அதன் பின்னர் அந்த நிகழ்ச்சியைக் காண முடியவில்லையே...?

**பதில்:** மின்னலுக்குப்பதிலாக 'சமர்' நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறதே. பாதிக்கப்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டு நேரடியாகவே கேள்விகளைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.

என். தேவன்,
இணுவில்.

**கேள்வி:** நான் தான் கடவுள் என்று ஒரு மனிதன் சொல்லாமா?

**பதில்:** பிற மனிதர்களைப் போல் பிறந்து வளர்ந்து, மறைவான விடயங்களை அறிய முடியாமலும், மலைகளையோ மரங்களையோ, கடலையோ துளைத்துக் கொண்டு பார்வையைச் செலுத்த முடியாமலும் இருக்கின்ற ஒரு (மனிதன்) பலவீனன், தன்னைக் கடவுள் என்று சொல்லிக் கொண்டால், அது உண்மையாக இருக்க முடியாது என்பதை உங்கள் பகுத்திறிவே சொல்லிவிடுமே. மனிதனால் கேட்க முடியாத, பார்க்க முடியாத, உணர முடியாத நிகழ்வுகள் ஆயிரமாயிரம்! அவற்றையெல்லாம் பட்டியல் போடக்கூட இந்த அற்ப மனிதனால் முடியாதே!




எம். பாலநாதன்,
வெள்ளவத்தை.

**கேள்வி:** நல்ல மனைவி என்றால் பொருள் என்ன பித்தரே?

**பதில்:** அது ஆளுக்கு ஆள் வேறுபடக் கூடும். நீர் எவ்வெவற்றை நல்லனவாக நினைக்கிறீரோ, அவற்றைக் கொண்டிருப்பவள் தான் உமக்கு நல்ல மனைவி.

## சொற்சிலம்பம் போட்டி இல. 427

சொற்சிலம்பம் 427 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 2010 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஓகஸ்ட் 08 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 425 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.427

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | | ■ |
| 5 | | | | ■ | ■ | ■ | 6 |
| | ■ | 7 | | | ■ | 8 | |
| ■ | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | ■ | |
| 13 | | | ■ | 14 | | | ■ |
| 15 | | ■ | 16 | | | ■ | 17 |
| | ■ | 18 | | | ■ | 19 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.425

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 த | 2 வி | டு | ■ | 3 சா | த | 4 க | ன் |
| 5 கு | ரு | ■ | 6 ப | சு | ■ | னை | ■ |
| 7 தி | ட் | ட | ம் | வ | 8 கு | ■ | 9 மி |
| ■ | ச | ■ | 10 ப | த | வி | ■ | ள |
| 11 ச | ம் | சா | ர | ம் | ■ | 12 பா | கு |
| வு | ■ | ■ | ம் | ■ | 13 சா | தி | ■ |
| க் | ■ | 14 நா | ■ | 15 க | று | ப் | 16 பி |
| 17 கு | மு | று | த | ல் | ■ | 18 பு | ரி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 427

**இடமிருந்து வலம்**

1. குண்டு துளைக்காத வாகனம்
5. வணக்கம்
7. இனிய ஓசை
8. மூட்டை
9. முயற்சி செய்/ நீண்ட காதுகளையுடைய வேகமாக ஓடக் கூடிய ஒரு பிராணி
10. (கண்ணீர்) சிந்த
11. குடிக்க
12. மதிப்பீடு/ எண்ணு
13. ஒரு விளையாட்டு
14. பகுதி
15. தேனீக்கள் மூலம் பெறப்படுவது
16. சீழ்
18. அகதிகள் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படும் இடம்
19. ஓர் உரிச்சொல்

**மேலிருந்து கீழ்**

1. துயரம்
2. பாதை
3. நாடாளுமன்றத் தலைவர்
4. செடி, கொடி முதலியன மழையின்மையால் அல்லது அதிக வெப்பத்தால் காயுதல்
6. அந்தணன்
8. புகையிலையால் தயாரிக்கப்பட்டதும், மூக்கினுள் போடுவதுமான ஒரு பொருள்.
9. பழநியில் குடியிருக்கும் கடவுள்.
10. வியாபாரம்
11. பிச்சைக்காரன்
12. மண்டையோடு
14. பள்ளத்தாக்குக்கு குறுக்காக போடப்படுவது
16. தோழன்
17. நதி

## சொற்சிலம்பம் போட்டி இல. 425
### பரிசு பெறுவோர்

1. கௌ.மு. சார்ல்ஸ்,
32/31, அன்னை திரேசா வீதி,
இரம்பைக்குளம்,
வவுனியா.
2. திருமதி. சரஸ்வதி பாலகிருஷ்ணன்,
11/8, A1/1, 49 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.
3. எஸ். சின்னராசா,
பிரதான வீதி,
பெரிய போரதீவு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 425
### பாராட்டுப் பெறுவோர்

01. திருமதி. பீ. ஜெயா, வவுனியா.
02. சி. கோமதி, கல்முனை.
03. இந்துமதி வடிவேல், செங்கலடி.
04. திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி மட்டக்களப்பு.
05. வே. கார்த்திகேசு, வாழைச்சேனை.
06. திருமதி. ஜே. சொலமன், கல்கிசை.
07. ம. கமலநாதன், மட்டக்களப்பு.
08. வை. தனபாலசிங்கம், சாவகச்சேரி.
09. திருமதி. விஜயகுமாரி அமரசிங்கம் மட்டக்களப்பு.
10. திருமதி. சந்திராணி தங்கத்துரை, கல்முனை.
11. திருமதி. எஸ். ஹமீட், கிருலப்பனை.
12. யோசப் டொரிங்டன் ஸ்பெக், மட்டக்களப்பு.
13. திருமதி. ரஞ்சினி சிவஞானம், மட்டக்களப்பு.
14. திருமதி. தி. சிதம்பரநாதன், கோப்பாய்.
15. சி.ம. தில்லைநாதன், நீர்வேலி.

# நித்தியானந்தாவைச் சந்தித்த தமிழ் நடிகை!

நித்தியானந்தாவுக்கும் நடிகைகளுக்கும் இடையே என்ன பந்தமோ தெரியவில்லை. இந்த பந்தம் இவரை விடாது துரத்தியபடி இருக்கிறது. நடிகை ரஞ்சிதாவுடன் இணைத்து வெளியான ஆபாசக்காட்சிகள் பெரும் சர்ச்சையைக் கிளப்பி சிறை வரை துரத்திச் சென்றது. நிபந்தனை பிணையில் இப்போது வெளியே வந்திருக்கிறார் நித்யானந்தா. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அவர் ஆற்றிய சொற்பொழிவில் தமிழ் நடிகை மாளவிகா கலந்துகொண்டிருப்பது பலரது புருவத்தை உயர வைத்திருப்பதுதான் ஹைலைட்.

நித்யானந்தா கடந்த ஜூன் மாதம் பிணையில் வெளிவந்தனர். அதற்காக அவருக்கு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அவற்றில் ராம்நகர் காவல் நிலையத்துக்குத் தகவல் அளிக்காமல் ஊரைவிட்டு வெளியே போகக்-கூடாது. சொற்பொழிவு ஆற்றக்கூடாது, மதப்பிரசாரம் செய்யக்கூடாது, வெளிநாட்டுக்குப் போகக்கூடாது என்கிற ஏகப்பட்ட தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இதனால் கடந்த சில வாரங்களாக அடக்கி வாசித்த நித்யானந்தா, தான் சொற்பொழிவு ஆற்ற அனுமதி வழங்குமாறு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருந்தார்.

இந்நிலையில்தான், கடந்த வெள்ளிக்கிழமையன்று கர்நாடக உயர் நீதிமன்றம் அந்த மனுவை விசாரித்து நித்யானந்தா, மாதம் ஒரு தடவை பக்தர்கள் மத்தியில் சொற்பொழிவு ஆற்றலாம் என்று அனுமதித்தது. அதனைத் தொடர்ந்தே கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கர்நாடக மாநிலம் பெங்களூர் ஆசிரமத்தில் பொது மக்களுக்காக சொற்பொழிவு ஆற்றப் போவதாக சீடர்களிடம் தெரிவித்தார்.

அதன்பேரில் நித்யானந்தா அவரது ஆசிரமத்தில் பக்தர்களுக்குக் காட்சியளித்தார். கடந்த 80 நாட்களாக அங்கும் இங்கும் அல்லாடிக்கொண்டு வாடிய முகத்தோடு காணப்பட்டவரா இவர்? என பந்தாவான பழைய களை புதிதாக முளைத்திருந்த மாறாத புன்னகையோடு மேடையில் தோன்றினார். வழக்கம் போல பந்தாவான சிம்மாசனம் போடப்பட்டிருந்தது. அதில் அமர்ந்ததும் தனது கணீர்க் குரலில் 'ப்ரீடம்' என்ற தலைப்பில்




சொற்பொழிவு துவங்கியது.

''கடந்த சில காலங்களாக பத்திரிகைகளில் எனக்கு பட்டம் கொடுத்திருந்தனர். எனது பெயருக்கு முன்னும் பின்னும் நிறைய பெயர்களைப் போட்டு எழுதினர். மைக்கேல் ஜாக்சன் இறந்த பின்னர் அவரைப் பற்றி அறிந்துகொள்ள அவரது கோடிக்கணக்கான ரசிகர்கள் அவரது வெப்சைட்டை தோண்டித் துழாவினார்கள். இதனால் இணையத்தளங்கள் நெருக்கடி ஆனது. உலக வரலாற்றில் ஒருவருடைய வெப்சைட்டுக்குள் நுழைவோர் எண்ணிக்கையில் மைக்கேல் ஜாக்சனுக்கே அதிகம் என்று சாதனை படைத்தது. ஆனால், அந்த சாதனையைப் போலவே என்னை பொலிஸார் தேடுகிறார்கள், கைது என்றெல்லாம் பிரச்சினைகள் எழுந்த போதும் கோடிக்கணக்கான மக்கள் இணையதளத்தில் ஒரே நேரத்தில் தேடத் தொடங்கினர். இதனால் இணையமே நெருக்கடி ஆகியது. ஜாக்சனுக்கு அடுத்து எனக்காகத்தான் இணையம் நெருக்கடி ஆனது.

அதேபோல் என்னை ஜெயிலில் அடைத்த போது என்னுடைய உருவம் மட்டுமே ஜெயிலில் இருந்தது. ஆனால், என்னுடைய ஆன்மா பல வெளிநாடுகளுக்கெல்லாம் போய்விட்டு வந்தது.

என்னுடைய பக்தர்களும் அகிம்சை வழியில் காந்தீய முறையில் போராடினார்கள். அவர்களது போராட்டத்துக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. தண்டனை என்பது நீதிபதியோ, நீதிமன்றமோ கொடுப்பதில்லை ஆண்டவன் கொடுப்பது. நான் நல்லவனா கெட்டவனா என்று கடவுள் சொல்லட்டும். என்னை வேறு ஒருவருடன் சேர்த்து காட்சிகளை வெளியிட்டனர், அசிங்கமாகப் பேசினார்கள். அந்தக் காட்சிகளில் இடம் பெற்றவை உண்மையானவை இல்லை.

அதற்கெல்லாம் நான் கவலை அடையவில்லை, இருபத்திரண்டு நாடுகளில் உள்ள நற்பத்தைந்து லட்சம் பக்தர்களுக்கு என்னைப் பற்றி தெரியும்'' என்று அவர் பேசிக்கொண்டே போக சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் உணர்ச்சிவசப்பட்டு காணப் பட்டனர். ஆசிரமத்தில் கூடியிருந்த பக்தர்களில் பெண் பக்தர் ஒருவருக்கு விசேஷமாக கவனிப்புகள் நடந்து கொண்டிருக்க, அவரை உற்றுப் பார்த்த போது அவர், நடிகை மாளவிகா என்றும் அறியமுடிந்தது. தமிழில் தனியார் ரி.வி. ஒன்றில் 'அண்ணி' தொடரில் நடித்துப் பிரபலமானவர். மாதவன் நடித்த 'ஜே. ஜே.' உள்பட பல தமிழ்ப் படங்களிலும், 'செல்லமே' தொடரிலும் தற்போது நடித்து வருகிறார்.

நடிகை மாளவிகா வந்திருப்பது ஊடகங்களுக்குத் தெரிந்து விடக்கூடாது என்பதில் ஆசிரமத்து ஊழியர்கள் அதிகம் கவனம் எடுத்துக்கொண்டனர்.

நடிகையின் நெருக்கத்தால் தான் நித்யானந்தா ஓடி ஒளிய நேர்ந்தது. நீதிமன்ற அனுமதியின் பேரில் நடத்தப்பட்ட முதல் சொற் பொழிவு நிகழ்ச்சியில் நடிகை ஒருவர் கலந்து கொண்டு சுவாமியிடம் ஆசி பெற்றதும் எல்லா நடவடிக்கையிலும் கலந்து கொண்டதும் பலரை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. ரஞ்சிதாவுடன் இணைத்து பேசப்பட்டதற்கே முழுமையான விடை இன்னமும் கிட்டவில்லை. அதற்குள் இன்னொரு நடிகையா?

வரும் இருபத்தைந்தாம் தேதியன்று குரு பூர்ணிமா பூஜை நடத்தப்போவதாக ஆசிரம நிர்வாகம் அறிவித்துள்ளது. ஆண்டுதோறும் நடத்தப்படும் பூஜைதான் இது என்றாலும், இந்த ஆண்டு பந்தா காட்ட வேண்டும் என்று நிர்வாகம் முடிவெடுத்து அதற்காக இப்போதே களம் இறங்கிவிட்டார் களாம். இது எங்கு போய் முடியுமோ?

---

## பால்மா...

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாப்பெட்டி கொண்டு வந்து அந்த குழந்தைக்கு கொடுத்து அவளின் பசியை ஆற்றினார்கள். வயதான காலத்தில் அவர்கள் பேத்தியின் பசியை ஆற்ற செய்த தானம்.

சம்பவம் - 5

அவர்கள் இராமநாதபுரம் வட்டக்கச்சியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள். அவர்கள் வீட்டில் ஏற்கனவே 6 பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து இரட்டை வாய்க்கால் பகுதியை அண்டி இருந்தபோது அருகில் இன்னுமொரு குடும்பம் வசித்து வந்தது. கணவன், மனைவி, மகன் (வயது 7), மகள் (வயது 2). வயிற்றில் 6, 7 மாதமாக இருக்கலாம். அங்கு ஏற்பட்ட எறிகணை வீச்சில் கணவனும், மகனும் அவ்விடத்தில் இறந்து விட மனைவி காயங்களுக்கு உட்பட்டு வைத்திய சாலை மூலம் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டு விட்டார். அந்த 2 வயது குழந்தை அதனது சித்தியின் பொறுப்பில் விடப்பட்டது. சித்தியினால் ஒரே ஏச்சும் பேச்சும், குழந்தையால் தனக்கு பல இடைஞ்சல்கள் என்று ஒரே குறை கூறுவாள். இந்த குழந்தை அயல் குடும்பத்துடன் நன்றாக ஒட்டிக் கொண்டது. அவர்களின் மூத்த மகள் 17 வயதுடையவள். பலவந்த ஆளிணைப்பால் திருமணம் செய்திருந்தாள். அவள் திருமணம் புரிந்து ஏறத்தாழ ஒருவருடம் இருக்கும். ஆனால் குழந்தைகள் இல்லை. இக் குடும்பத்தினர் அக் குழந்தையை தாங்கள் வளர்க்க விரும்புவதாக கூறி சித்தியிடமிருந்து வாங்கிக்கொண்டனர். நல்லது நடந்தது என்று எண்ணியோ தெரியாது அக் குழந்தையின் சித்தி மறுநாளே தன் இருப்பிடத்தை காலி செய்து சென்றுவிட்டார்.

இக்குடும்பத்தினர் இந்த குழந்தையை தமது மூத்த மகளின் மகள் என்றே ஏனையோருக்கு கூறி வைத்தனர். மிகுந்த நேசத்துடன் பராமரித்தனர். அவ்வீட்டு தலைவனும், மருமகனும் மாறி மாறி இரத்தம் கொடுத்து விட்டு மாப்பெட்டி கொண்டு வருவார்கள். ஏனைய சகோதர்களும் நன்றாக நேசம் கொண்டாடினார்கள். ஆனால் அக்குழந்தையோ 2 வயதுக்குரிய வளர்ச்சி, செயற்பாடு எதுவும் அற்ற ஒரு நோஞ்சான். ஆனால் சரியான பிடிவாதம். வீட்டில் எல்லோரையும் பாடாய்ப்படுத்தினாள். ஆனால் அவர்கள் சலிக்காமல் அம்மா, ஆச்சி, செல்லம் என அன்பைப் பொழிந்தனர்.

கிட்டத்தட்ட ஒரு வருடம் முடிந்த நிலையில் அச்சிறுமியின் தாயாரின் தொடர்பு அக்குடும்பத்துக்கு கிடைத்த நிலையில் அக்குழந்தையை கூட்டிப் போய் ஒப்படைத்தனர். அவளின் தாயார் காயங்கள் சுகமான நிலையில் ஆண்குழந்தை ஒன்றுடன் தற்போது யாழ்ப்பாணத்தில் வசிக்கிறாள்.

தனது பெண் குழந்தையை காப்பாற்றி இவ்வளவு நாளும் போசித்ததற்கு என்றும் கட்டுப்பாடுடையவள்.

மாப்பெட்டி என்ற தலைப்பில் இங்கு விவரித்த சம்பவங்கள் ஒரு சுகாதார உத்தியோகத்தர், ஓர் அயலவர், ஓர் உறவினர் ஆகியோரால் கூறப்பட்டவையுமாகும். எனது சொந்த அனுபவங்களும் இதில் அடங்கி உள்ளன.

இவை அனைத்தும் வன்னியில் நடந்த உண்மை நிகழ்வுகள் -- ஒரு கணம் நினைத்து பாருங்களேன் நம்மவர் துயரங்களை...!

-இலக்கியன்

---

## சும்மா...

(22-ஆம் பக்கத் தொடர்ச்சி)

''கேள்விப்பட்டோம், கேள்விப்பட்டோம். ஏதோ நாட்டில் அமைதி ஏற்படின் அது எமக்கும் மகிழ்ச்சியே. நான் வந்திருப்பதும் கலந்துரையாடல்கள் நடைபெறுவதும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத நிகழ்ச்சிகள். காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதைதான் அது.''

''தங்கள் பிரசன்னத்தைக் கண்டு தாங்கள் மீண்டும் ஆட்சியமைக்க இருப்பதாக எண்ணி நான் அகமகிழ்ந்தேன். தாங்கள் சும்மா வந்திருப்பதாகக் கூறுவது ஏமாற்றத்தையளிக்கிறது. மன்னவா.'' கவலை தோய்ந்த முகத்தோடு இயம்புகிறார் காரியஸ்தர்.

''வரலாற்றிலிருந்து நாம் முதலில் பாடம் கற்கவேண்டும். நான் ஆட்சிக்கு வருவதை விட நாடு எப்படியிருக்கிறது என்பதே முதலில் எனது கவனத்தை ஈர்க்கிறது. நான் இல்லாத காலத்தில் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் எவ்வித கருத்து முரண்பாடுகளையும் சகித்துக்கொள்ளாதவர். எதிர்ப்போரின் தலையைச் சீவிவிடுபவர். இதனால் ஒரு தரப்பின் ஆதிக்கம், ஏகப்பிரதிநிதித்துவம் என்ற சிந்தனைகள் பிரஜைகள் மனதில் ஆழப் பதிந்திருப்பதாகத் தெரிகிறது. மாறிவரும் யுகத்தில் இத்தகைய சிந்தனைகள் கேடு விளைவிக்குமல்லவா?''

காரியஸ்தர் விழிகளை அங்குமிங்கும் அலையவிடுகிறார். பின்னர் துணிந்த குரலில், ''மன்னவா தாங்கள் மீதும் சில அறிவிலிகள் அத்தகைய குற்றச்சாட்டைச் சுமத்துகிறார்கள். தாங்கள் பலவந்தமாகவே படைக்கு ஆட்களைத் திரட்டினீர்களாம். மக்களின் எதிர்ப்பை அசட்டை செய்தீர்களாம். தங்கள் ஏவலர்களைக் கண்டாலே 'பிள்ளைபிடிகாரர்' என அலறியடித்துக் கொண்டு தாய்மார் ஓடினார்களாம். இப்படியான குற்றச்சாட்டுகள் காதில் விழும்போது தாள முடியவில்லை. மன்னவா,''

சரி, சரி வரலாற்றிலிருந்துதானே நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். வரலாறுதானே எமது ஆசான். மக்களின் அல்லல்கள் தீர்க்கப்படும் அதேவேளை வரலாறும் திருத்தப்பட வேண்டும். தவறான தலைமைத்துவம் தந்த அழிவை நாம் கண்டோமல்லவா?''

''அப்படியானால், மன்னவா தாங்கள் வரலாற்றைத் திருத்தியமைக்கத்தான் வந்திருக்கிறீர்களா? பெருநிலப் பரப்பை ஆளும் மன்னரையும் இரு இராசதானிகளில் ஒன்று தங்கள் கைக்கு வரவிருக்கிறதா?'' காரியஸ்தர் ஆவலுடன் கேட்கிறார்.


''அப்படியெல்லாம் நீங்கள் ஆசைப்படுவதில் எவ்வித நியாயமுமில்லை. அர்த்தமுமில்லை. நான் இங்கே சும்மாதான் வந்திருக்கிறேன். சும்மா, சும்மா... என்னைக் கொஞ்சம் சும்மா இருக்கவிடும். எனக்குச் சற்று ஆயாசமாக இருக்கிறது. ஓய்வெடுக்க வேண்டும். சென்று வாரும். என்னைத் தேடிவர வேண்டாம். தேவைப்படின் நான் தகவல் அனுப்புகிறேன்'' முத்தாய்ப்பு வைக்கிறான் வரகுணமன்னன்.

விடைபெற்றுச் செல்லும் காரியஸ்தரின் மனதில் பல கேள்விகளும் எண்ணங்களும் அலைமோதுகின்றன; ''இவர் சும்மா, சும்மா என்கிறாரே. சோழியன் குடுமி சும்மா ஆடுமா? இவரது வரவினால் வரலாறு திரும்புமா அல்லது மாறுமா? இவரது பேச்சைப் பார்த்தால் வரலாறு திரும்புவது தவிர்க்கப்பட முடியாது போலத் தோன்றுகிறது. வரலாறு திரும்புவதனால் யாருக்கு இலாபம்? இவருக்கா? இவரை ஆதரிக்கும் மன்னருக்கா? மக்களுக்கா? மக்களை யார் காப்பது? இவரால் முடியுமா?''

எத்தனையோ கேள்விகள்; பதில்களோ நழுவிய மீன்களில் நழுவிய மீன்களாக இருக்கின்றன. காரியஸ்தர் முகத்தில் தெரிவது கபடமா அல்லது கலக்கமா என்பதும் புரியவில்லை.

# ராசி-பலன்

## 18 - 07 - 2010 முதல் 24 - 07 - 2010





அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

மலர்ந்த முகத்தோடு அனைவரிடமும் பழகும் மேஷ ராசி அன்பர்களே!

முக்கியமான திருப்பு முனைகளை கொண்டதாக இந்த வாரம் அமையும். செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற வரவுகள் உண்டு. செயல்களில் சிறப்பாக கவனம் செலுத்தி வெற்றிகரமாக முன்னேறுவீர்கள். உண்மையான நண்பர்களையும், அன்பு செலுத்தும் உறவினர்களையும் அடையாளம் கண்டு கொள்வீர்கள். மகன் அல்லது மகளின் மூலம் நல்ல செய்திகள் கிடைத்து மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவிமாற்றம், சம்பள உயர்வு போன்றவைகளை எதிர் பார்க்கலாம். குடும்பத்தில் சுமூகமான போக்கு தெரியும். குடும்ப அங்கத்தினர்களின் மனவேறுபாடுகளை பொருட்படுத்தாமல் அனுசரித்துச் செல்வது அமைதியைத் தரும். கலைஞர்கள் புதிய பணிகளில் உற்சாகமாக பங்கு பெறுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,6,9 அதிர்ஷ்ட நிறம் : வெளிர்மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்




கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2

உயர்வான எண்ணங்களும், உறுதி வாய்ந்த மனமும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் பலவற்றில் வெற்றிகளைக் காண முடியும். ஆனால், சிறுசிறு சிரமங்களும் இருக்கக்கூடும். எதிர்பார்க்கும் பணவரவுகள் குறிப்பிட்டபடி வந்து சேரும். உத்தியோகஸ்தர்களின் பணிகளில் மாற்றம் ஏற்படலாம். வேலைகள் முன்பு இருந்ததை விட அதிகரிக்கலாம். குடும்பத்தில் நன்மையான காரியங்கள் நடைபெறும். சிறுசிறு கடன் தொல்லைகள் இருந்தாலும் சமாளித்து விடுவீர்கள். பெண்களின் தேவையற்ற பேச்சினால் சிறு சலசலப்பு உண்டாகும். கலைஞர்கள் பணிகளில் அதிகம் சுறுசுறுப்பாக இருப்பர்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,9 அதிர்ஷ்ட நிறம் : இளம்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு





மிருக சீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்

மற்றவர்களை பார்த்த உடன் எடைபோடும் மிதுன ராசி அன்பர்களே!

நன்மையும், கசப்பும் சேர்ந்தே இந்த வாரம் காணப்படும். எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் நீங்கள் கசப்பான நிகழ்வுகளைப் பற்றி கவலைப்பட மாட்டீர்கள். தோல்வியைக் கண்டு துவளாமல் தீவிர முயற்சியின் மூலம் வெற்றியைத் தேடி முன்னேறுவீர்கள். தொலைபேசி தகவல் ஒன்று மனதிற்கு இதத்தை தரும்.

உத்தியோகஸ்தர்கள் தங்கள் கோரிக்கைகளைத் தற்போது வலியுறுத்தாமல் இருப்பது மிகுந்த நன்மை தரும். குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகளைச் சந்திக்க நேரலாம். பணச்செலவுகள் அதிகரிக்கும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெற்றாலும், எதிர்பார்க்கும் வருமானம் இல்லாமல் போகலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,6,8 அதிர்ஷ்ட நிறம் : இளம் சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி




புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

அறிவுக்கூர்மையுடன் கற்பனை ஆற்றலும் மிகுந்த கடக ராசி அன்பர்களே!

பரபரப்புகளை தள்ளிவைத்து நிதானத்தை வெளிப்படுத்தும் வாரமாக இந்த வாரம் உங்களுக்கு அமையும். மிகுந்த பொறுமையை கடைபடித்தாலும் சிறுசிறு தொல்லைகள் இடையில் ஏற்படக்கூடும். தீவிர முயற்சியே முன்னேற்றத்தை தரும். எதிர்பார்க்கும் பணவரவுகள் சிறிது தாமதத்திற்குப் பிறகு வந்து சேரும். திடீரென்று ஏற்படும் செலவுகளை திறமையாக சமாளிப்பீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் பணி மாற்றமோ அல்லது பதவி மாற்றமோ உண்டாகும். குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் தலைகாட்டி, சஞ்சலம் அளித்தாலும், அதிக பாதிப்புகள் இருக்காது. கன்னிப் பெண்கள் மனம் மகிழும் வகையில் இனிய சம்பவம் ஒன்று இல்லத்தில் நடைபெறும். அன்றாட நிலவரங்களை உன்னிப்பாக கவனிப்பது லாபத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,7 அதிர்ஷ்ட நிறம் : பச்சை அதிர்ஷ்டக் கிழமை : புதன்




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

பேசுவதிலும், எழுதுவதிலும் திறமை மிக்க சிம்ம ராசி அன்பர்களே!

நினைத்த காரியங்கள் எதிர்பார்த்தபடி முடிந்தாலும் சிறு சிறு தடைகளை தாண்டி செல்ல வேண்டி இருக்கும். நண்பர்கள் உங்கள் செயல்களில் ஒத்துழைப்பு தந்து உதவிகரமாக இருப்பார்கள். ஆவலுடன் எதிர்பார்த்த செய்தி ஒன்று நண்பர் ஒருவரால் இல்லம் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பதிவேடுகளை தேவையான சமயத்தில் தேடி எடுக்க முடியாமல் இருக்கும். பணப்பொறுப்பில் உள்ளவர்கள் பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினைகள் உண்டாகும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகளால் திட்டமிட்டபடி செயல்களைச் செய்து முடிக்க முடியாமல் போகலாம். சுபகாரியங்கள் சிறிது தள்ளிப் போக நேரலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,3,5 அதிர்ஷ்ட நிறம் : வெண்மை அதிர்ஷ்டக் கிழமை : திங்கள்




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

நினைத்த காரியத்தை உறுதியுடன் நினைத்தபடி செய்து முடிக்கும் கன்னி ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் திட்டமிட்டு காரியங்களை தீவிர முயற்சியுடன் செய்தாலும், திடீர் திருப்பங்களால் பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். பண வரவுகள் பலன் கொடுப்பதாக இருந்தாலும் வரவுகளை விட செலவுகள் அதிகரிக்கலாம். அதனால் பயணம் ஒன்றும் ஏற்படலாம். உத்தியோகஸ்தர்கள் பணிகளில் திருப்பமான சூழ்நிலையைச் சந்திப்பார்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த பணவரவுகள் சிலருக்கு கிடைத்து, குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் இருந்தாலும், சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பெண்கள் திட்டமிட்ட சுபகாரியங்கள் சிறுதடைக்குப் பின் நடைபெறும். கலைஞர்களுக்கு சிறப்பான வாரம்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,3,9 அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

நண்பர்களிடம் பாசத்துடன் பழகும் துலாம் ராசி அன்பர்களே!

முக்கியமான காரியங்களை ஒத்தி வைப்பது சிறந்தது. நீண்ட நாளாக எதிர்பார்த்த நண்பரை சந்திக்க நேரும். சில விஷயங்களை மனம் விட்டு பேசுவதால் பழைய பகை மறையும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு சம்பள உயர்வும், இடமாற்றமும் ஏற்படலாம். நீண்ட நாளாக எதிர்பார்த்த சீட்டுப் பணமோ அல்லது நிறுத்தி வைக்கப்பட்ட அலுவலகப் பணமோ கைக்கு கிட்டும். குடும்பம் நன்றாக நடைபெறும். சிறுசிறு கடன் தொல்லைகளை சமாளிப்பீர்கள். சுபகாரியங்களில் இருந்த தடைகளை நீக்கி அவை சிறப்பாக நடைபெற முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பெண்கள் பாராட்டும், பரிசும் பெற வாய்ப்பு உண்டாகும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெற்று, வசதியும், வருமானமும் பெறுவர். பணிகளில் நல்ல திருப்பங்கள் நேரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,8 அதிர்ஷ்ட நிறம் : இளம்பச்சை அதிர்ஷ்டக் கிழமை : புதன்




விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கோட்டை

நேர்மை மாறாத எண்ணங்கள் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

உங்களுக்கு இந்த வாரம் அவசியமான வேலைகளையும் சிறிது தள்ளிப் போடுவது நன்மை தரும். புதிய உறவுகள் தேடி வரும். பகை உணர்ச்சிகள் மாறும். பணவரவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். உத்தியோகத்தில் மாற்றங்கள் நேரக்கூடும். சிலருக்கு பதவி உயர்வும், இடமாற்றமும் ஏற்படும் சூழ்நிலை அமையும். மேலதிகாரிகள் அனுகூலமாக இருப்பார். குடும்பத்தில் அமைதியும், உற்சாகமும் இருக்கும். மகன் அல்லது மகளது வேலைகளில் முன்னேற்றமான மாற்றம் நேரலாம். திட்டமிட்டு செயல்படுவதால் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகள் பெறக்கூடும். பொருளாதாரத்தில் வளர்ச்சியும் புகழும் ஏற்படலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,3,7 அதிர்ஷ்ட நிறம் : இளம்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி





மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

எடுத்த காரியங்களை நினைத்தபடி சாதிக்கும் தனுசு ராசி அன்பர்களே!

உத்தியோகஸ்தர்கள் பணிகளில் கவனமாக இருப்பதோடு பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது அவசியம். சக ஊழியர்கள் எதிர்பார்த்த ஒத்துழைப்பு தரமாட்டார்கள். உழைப்பு அதிகரிக்கும். குடும்பம் சீராக நடைபெற்று வரும். இடையிடையே சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். சுபகாரியங்கள் நடைபெற முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பெண்களுக்கு வடக்கு திசையில் இருந்து வரும் முக்கியமான நல்ல செய்தி மகிழ்ச்சியைக் கொடுக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளில் மகிழ்வுடன் பணிபுரிவர்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,5,9 அதிர்ஷ்ட நிறம் : இளம்சிவப்பு அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு




உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

நண்பர்களுக்கு உதவும் நல்ல மனம் பெற்ற மகர ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் தீவிர முயற்சியோடு செயல்பட்டு, முக்கியமான காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமான முக்கிய விஷயங்களில் நிதானமாக முடிவெடுப்பது நன்மை தரும். உத்தியோகஸ்தர்கள் பணியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். எதிர்பார்ப்புகள் தள்ளிப் போகும். நீண்ட நாள் எதிர்பார்த்த ஒரு நல்ல செய்தி எதிர்பாராமல் தேடி வரும். குடும்பத்தில் அமைதி காணப்படும். கடன் தொல்லைகள் சமாளிக்கப்படும். சுபகாரியங்கள் தள்ளிப் போகலாம். கோர்ட்டு வழக்குகளில் புதிய திருப்பம் உண்டாகும். பெண்கள் வார்த்தைகளை கவனமாக கையாளாவிட்டால் பெரியோர்களின் மனக் கசப்பை சந்திக்க நேரும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் பணிகளில் மகிழ்ச்சியோடு பணியாற்றுவர்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,5,7 அதிர்ஷ்ட நிறம் : மஞ்சள் அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

முற்போக்கான சிந்தனை கொண்ட கும்ப ராசி அன்பர்களே!

மற்றவர்களால் செய்ய முடியாத முக்கிய பணி ஒன்றைச் செய்து பாராட்டு பெறுவீர்கள். சகோதர வழியில் பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான சிக்கல் தீர்ந்து, உங்களுக்கு வர வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் உற்சாகமாக பணிகளில் ஈடுபட்டு உயர் அதிகாரிகளின் நன் மதிப்பைப் பெறுவர். பிறகு செய்யலாம் என்று தள்ளி வைத்த பணி ஒன்றை உடனே செய்ய வேண்டிய அவசியம் நேரக்கூடும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் நன்றாக நடைபெறும். சுப காரியங்கள் சிறிய முயற்சிக்குப் பின் நன்றாக நடைபெறும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் விறுவிறுப்பாக பணியாற்றுவர். பொருள் சேர்க்கையும், புகழும் மகிழ்வளிக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,8,9 அதிர்ஷ்ட நிறம் : கருநீலம் அதிர்ஷ்டக் கிழமை : சனி




பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

வேலைகளை கலை நுணுக்கத்தோடு செய்யும் மீன ராசி அன்பர்களே!

எதிர்கால வெற்றிகளுக்காக இந்த வாரம் திட்டமிடுவீர்கள். பணவரவுகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். முக்கியமான செலவுகள் அதிகம் ஏற்பட்டு கைக்கு வந்த பணம் கரையக்கூடும். பிரிந்த சொந்தங்கள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் பிறகு செய்யலாம் என்று தள்ளி வைத்த பணி ஒன்றை உடனே செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம். அலுவலகத்தில் எதிர்பார்த்த பணம் வந்து சேரும். திட்டமிட்டு பணியாற்றுவதால் உழைப்பின் லாபத்தை அடைவீர்கள். குடும்பத்தில் சுமூகமான நிலை காணப்படும். பிரச்சினைகள் தீர்க்கப்படும். சிறு தடைகள் இருந்தாலும் சுபகாரியங்கள் நன்றாக நடைபெறும். பெண்களின் ஆலோசனை தக்க நேரத்தில் கைகொடுக்கும். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களில் பணியாற்றுவர். வெளிர் பயணங்களும் ஏற்படக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,8,9 அதிர்ஷ்ட நிறம் : நீலம் அதிர்ஷ்டக் கிழமை : சனி.



# கிண்ணம் வென்றது ஸ்பெயின்

19 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் இறுதிப் போட்டி கடந்த 11 ஆம் திகதி பரபரப்பாக தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க், சாக்கர் சிட்டி மைதானத்தில் நடைபெற்று முடிந்தது.

இறுதி ஆட்டத்தில், ஸ்பெயின் அணி 1-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி, முதல் முறையாக சம்பியன் கிண்ணத்தை வென்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் திருவிழா கடந்த மாதம் 11 ஆம் திகதி தென்னாபிரிக்காவில் தொடங்கியது. ஆபிரிக்கக் கண்டத்தில் முதல் முறையாக நடத்தப்பட்ட இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்றன.

பிரேஸில், ஆர்ஜென்ரீனா, இங்கிலாந்து, ஜேர்மனி, போர்த்துக்கல், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய முன்னணி அணிகள் ரசிகர்களின் எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கி வெளியேறின. 'லீக்', 'ரவுண்டப்-16', காலிறுதி, அரையிறுதி என அனைத்துச் சுற்றுக்களிலும் அசத்திய ஐரோப்பிய அணிகளான நெதர்லாந்து - ஸ்பெயின் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்த ஸ்பெயின் - நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி சாக்கர் சிட்டி மைதானத்தில் இலங்கை நேரப்படி நள்ளிரவு 12 மணிக்குத் தொடங்கியது.இப்போட்டியைக் காண தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா வருகை தந்திருந்தார். அதே வேளை, போட்டி ஆரம்பமாக முன்னர் பொப் பாடகி ஷகீரா 'வாகா வாகா' பாடலைப் பாடி நிகழ்வை மேலும் சிறப்பித்திருந்தார்.

தங்களது முதல் உலகக் கிரீடத்திற்காக இரு அணி வீரர்களும் தொடக்கத்திலிருந்தே மல்லுக்கட்டினர். முதல் 15 நிமிடங்கள் ஸ்பெயின் வசமே பந்து சுற்றிக் கொண்டிருந்தது.

11 ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் நட்சத்திர வீரரான டேவிட் வில்லா அடித்த பந்து வலைக்கு வெளியே சென்று ஏமாற்றியது. இதன் பிறகு நெதர்லாந்து தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. 17ஆவது நிமிடத்தில் 'பிரிகிக்' வாய்ப்பில் ஸ்னீடர் கோல் எல்லை நோக்கி அடித்த பந்தை, ஸ்பெயின் கோல் காப்பாளர் கேசில்லாஸ் தடுத்து விட்டார். பின்னர், ஆட்டத்தில் முரட்டுத்தனம் தலை தூக்கியது. எதிரணி வீரர்களை மிதிப்பது, தள்ளிவிடும் போக்கு அதிகரித்தது. நடுவரிடமும் அடிக்கடி வாக்கு வாதம் செய்தனர். இதனால் 9 தடவைகள் மஞ்சள் அட்டைகள் காட்டப்பட்டன. நெதர்லாந்துத் தரப்பில் 3 வீரர்களுக்கும், ஸ்பெயின் தரப்பில் 2 வீரர்களுக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. முதல்பாதி சமனாகவே முடிந்தது.

2ஆவது பாதியிலும் இதே நிலையே காணப்பட்டது. குறிப்பாக நெதர்லாந்து அணி வீரர்களே அதிகமாக முறையற்ற விதத்தில் ஆடினர். இவர்கள் நடுவரால் எச்சரிக்கப்பட்டனர். 62 ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் ஆர்ஜன் ரோபன் தனி ஆளாக கோல் கம்பத்தை நோக்கிக் கொண்டு வந்த பந்தை, அருகில் வந்து அடித்தபோது ஸ்பெயின் கோல் காப்பாளர் தனது காலால் தடுத்து, பந்தை வெளியே திருப்பினார். இதனால் பெரிய ஆபத்திலிருந்து ஸ்பெயின் தப்பியது. 2 ஆவது பாதியும் கோல் இன்றி முடிந்தது.



பின்னர், 15 நிமிடங்கள் கூடுதல் நேரமாக ஒதுக்கப்பட்டன. அதிலும் கோல் ஏதும் கிடைக்கவில்லை. இதன் பின்னர் மீண்டும் ஒதுக்கப்பட்ட 2 ஆவது கூடுதல் நேரத்தில் 11[illegible] ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் ஆன்ட்ரஸ் இனியஸ்டா இந்தக் கோலை அடித்து அடித்து உச்சக்கட்டப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். அதுவே வெற்றிக் கோலாகவும் அமைந்தது. 80 வருடங்களுக்குப் பின்னர் ஸ்பெயின் உலகக் கிண்ணத்தை வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.





சமீபத்தில் நடந்த வெஸ்லி கல்லூரி இந்து யூனியன் கலாசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சட்டத்தரணி கலாநிதி கங்காதரன் இந்து மாணவ மன்றப் பொறுப்பாசிரியரிடமிருந்து பரிசில் பெறுவதைப் படத்தில் காணலாம்